www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

டிசம்.12-18,1993

ரூபா 8/50

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 29





## பிரபாவின் பேச்சும்-புலிகளின் போக்கும்!

-எக்ஸ்ரே ரிப்போர்ட்

## "தனிக்காட்டு ராஜா" தொண்டா-

—அரசியல் அலசல்

ரசிகன் வழங்கும் உள்ளத்தை அள்ளும் இலக்கிய நயம்

## 'மகாபாரதம்' புரியவில்லையா?

கதை வடிவம் உள்ளே

—புதிய பகுதி ஆரம்பம்

## மனிதக் குரங்கு பரிசு வென்றது!

—வியப்பான தகவல்கள்

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
கிழக்கிலும், வவுனியாவிலும்
உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள்
என்று அறிவிக்கப்பட்டது.
இப்போது பின்போடப்பட்டுவிட்டது.

உறுதியான-தெளிவான முடிவுகள்
செய்யப்படுவதில்
ஏற்பட்டுள்ள- ஏற்பட்டு வருகின்ற
தடுமாற்றங்களையே
அறிவித்தல்களும்
மறு அறிவித்தல்களும்
வெளிப்படுத்திக் காட்டுகின்றன.

ஏனைய அரசியல் கட்சிகளின்
கருத்தறிந்து, கருத்துக்களைப் பரிசீலித்து
நாட்டின் பொதுப்பிரச்சனைகளில்
முக்கிய முடிவுகளை எடுப்பதே
ஜனநாயக தளத்தையும் வலுவூட்டும்.
மறு அறிவித்தல்கள் செய்யும்
அவசியங்களுக்கும் இடமிருக்காது.

தேர்தல்கள் நடத்தப்படுவதால் மட்டும்
பிரச்சனைகள் தீர்வதில்லை.
வடக்கு-கிழக்கில்
இந்திய அமைதிப்படையினரின்
நேரடிக் கவனிப்பில் நடந்து முடிந்த
தேர்தல்கள்
சொல்லித்தரும் பாடம் அது.

தேவையானது, அரசியல் தீர்வு.
அவசியமானது,
தொடரும் யுத்தத்தை முடித்திட
சம்பந்தப்பட்ட தரப்புக்களின்
இதய சுத்தியுடன் கூடிய முயற்சிகள்.

போரை நடத்தும் தரப்புக்களின்
தலைமைகள் பாதுகாப்புடன் இருக்கலாம்.
அதனால்
பாதிப்புக்களின் தாக்கங்களை
உணராமல் இருந்துவிடக்கூடாது.
துரதிஷ்டவசமாக
அப்படித்தான் இருந்து விடுகிறார்களோ
என்று ஒரு சந்தேகம் வந்துவிடுகிறது.

மாவீரர்தினக் கொண்டாட்டத்தில்
தமிழீழம் இறுதியான தீர்வு என்று
புலிகளின் தலைவர் சூளுரைத்திருக்கிறார்.

புலிகளை ஒழித்துக்கட்டுவதே
உறுதியான முடிவு என்று
அரச தரப்பினரும் சூளுரைக்கின்றனர்.

இடைக்கிடையே
சமாதானக்கதவுகள் பற்றியும்
பேசிக்கொள்கிறார்கள்.
சம்பந்தப்பட்ட தரப்புக்களின்

இதயக்கதவுகள்
மக்களின் நலனை முன்னிட்டு
திறக்கப்படாதவரை
சமாதானக்கதவுகள்
பற்றிப் பேசுவதில்
அர்த்தமில்லை.

■

முரசில் பல்வேறுபட்ட அரசியல் கருத்துக்கள்
சமூகக் கருத்துக்கள்
முகம் காட்டுகின்றன.

நல்லது- முரசுக்கென்று
தனிக்கருத்துக் கிடையாதா?
என்று நண்பர்கள் சிலர் கேட்கிறார்கள்.

இருக்கிறது. இல்லையென்றால் அது பொய்.
தமிழ் பேசும் மக்களின்
அரசியல் அபிலாசைகளை,
நியாயமான உணர்வு வெளிப்பாடுகளை
முரசும் தன் மூச்சாகக் கொண்டிருக்கும்.
அதற்காக
தன் கருத்துக்களை திணிக்க முயலாது.
மாறுபட்ட கருத்துக்களை மறைக்க முயலாது.

தவிரவும்,
செய்திகளை உள்ளபடியே தரும்.
அதனை
விருப்பு வெறுப்புக்கேற்ப
மாற்றியோ, மறைத்தோ தராது.

அரசியல் கண்ணோட்டப் பகுதிகளில்
மாறுபட்ட கருத்துப் போக்குகள்
களம் காணும் போது
சரியான கருத்தை
தெரிவு செய்யும் நீதிபதிகளாக
வாசகர்கள் இருக்க வேண்டும்.

சொல்ல வேண்டிய விசயங்களை
முரசு சொல்லத் தயங்காது.

■

வாசக நெஞ்சங்களே
முரசின் நீதிபதிகள்.
அவர்களே-
முரசுக்கு எஜமானர்கள்.

■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

அரசியல் செய்திகள் பிரமாதம். உள்ளதை உள்ளபடி சொல்லும் விதம் பாராட்டுக்குரியது. தமது விருப்பங்களையே நாட்டு நிலவரமாக சித்தரிப்பவர்கள் மத்தியில் முரசின் கருத்துக்கள் வித்தியாச ரகம்.
கே.செல்வநாதன்-கண்டி.

•

தேன்கிண்ணம் வாரா வாரம் சூடு பெற்று வருகிறது. புதிய எழுத்தாளர்களை ஊக்குவித்து வருவதும் அவர்களது கருத்துக்களுக்கு களம் கொடுப்பதும் வரவேற்கப்படவேண்டியவையே.
மா.சூரியப்பிரகாஷ்-மாத்தளை.

## தினமுரசு போன்: 820265

## கவிதைப்போட்டி இல-26

களம் தேடி வந்தவற்றில் வெற்றிபெற்ற
கவிதையும், கருத்துப் பலம் காட்டி
வியக்க வைத்த கவிதைகளும்!

### பரிசுக்குரிய கவிதை

**வழியேது?**
கள்ளமில்லா
உன் சிரிப்பு.....
நிலைத்திருக்க
ஏது வழி?
இன வெறியும்
சுயநலமும்
அழிந்தொழிந்து
போகும்வரை!

ஏ. அஹ்மது ஜுனைது
ஏறாவூர்-06.

### பாராட்டுக்குரிய கவிதைகள்

**அரும்பு!**
போர்த்தீயில்!
பொசுங்கிப் போனது போக!
எஞ்சியிருக்கும்!
புதிய அரும்பு!
ஹப்புத்தளையூர்
எஸ்.ஜீ.மனோ.

**இனங்களும் இப்படி**
உறவுகள் இங்கே
உவகை கொள்வதுபோல்
இனங்களும் ஒன்றாய்
இணைந்திடல் வேண்டும்
ஞானேந்திரன். எம்.
கொழும்பு-13.

**புன்னகை**
நம்மவர்
முகங்களில் இன்று
இல்லாத ஒன்று
உங்களிருவரிடையேயும் புதிதாய்
மலர்கிறதே...விரிகிறதே!
ஷர்மி- கண்டி.

தூரத்தில்
சமாதானம்
வருகின்றதோ?
செல்வி சுல்பிகா
ராஸிக்-ராஜகிரிய.

**மானிடா**
நெஞ்சச் சுமை போக்க
மழலைச் சுமை
போதுமா....?
கே.தேவன்
மட்டக்களப்பு.

**பா(மோ)சம்**
யுத்த தேசத்தை
நித்தம் அலங்கரிக்கும்
ஆயுத- ஆபரணங்களால்
மோசம் ஓங்கி நின்றாலும்-எங்கள்
பாசம் நீங்கி விடாது!
எம்.டி.எம்.சைலாஸ்
கம்மல்துறை.

இதயவாசலில்- ஒரு
பனிப்பூ- ஓ.....
அது உன்...
சிரிப்பு-
அக்கரைப்பற்று
ஏ.ஜீ.சேகர்.




**புன்னகை ஏனோ?**
மழலையைச் சுமந்து கொண்டு
கிளாலியைக் கடப்பதிலா
இந்தப் புன்னகை?
க.பரமானந்தராஜா-கல்குடா.

பாறை மீது
ஒரு தளிர்.
பி.விரைனர்
மட்டக்களப்பு.

**சுகமான சுமை**
"வருவது இன்பமெனில் சுமைகள்
கூட சுகங்கள் தான்."
வே.தயாபரன்-கல்லாறு.

## கவிதைப் போட்டி இல-29



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். தபாலட்டையில் உங்கள் உணர்வினைப் பொறித்து எமக்கு அனுப்புங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 18.12.1993.

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 29
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5

வன்முறைதான் வாழ்க்கை என்று
வாலிபங்கள் ஏங்கும் போது
இனவாதம் தீர்த்திடவா..?
இளஞ்சிட்டே அவதரித்தாய்!
பூவிழி-வாழைச்சேனை.

மன்னிக்க வேண்டும்!
உங்கள் சிரிப்பை
ரசிக்கும் நிலையில்
நாங்கள் இல்லை.
நஜாத்கான்
கிண்ணியா-01.

**பயம்**
தோள்மீது சுகம் காணும் மழலைக்கு
இந்த பார்மீது
தளிர் நடை பயில
பயம்-ஏனோ?
வீ.எஸ்.பாலா பாலச்சந்திரன்-மஸ்கெலிய.


**வருங்காலம்**
வருங்கால நட்சத்திர யுத்தம்
தவிர்க்கணும்
மழலையின் புன் சிரிப்பில்
உலகம் திளைக்கணும்.
எல்.கே.நாதன்-மோதர.

**அன்புச் சுமை**
குண்டு என் தலைமீது விழுமுன்
குழந்தாய்....
உன்னைக் கொஞ்சம்
என்தோள் மீது தூக்கி சுமந்திடவா!
வி.கே. பத்மநாதன்-கந்தேகெதற.

**சிரி!**
புண்ணியங்கள் தொலைந்து போன
யுத்த பூமியில்
உன்னால் மட்டும்தான்
புன்னகைக்க முடியும்
சிரி! சத்தமாய்ச் சிரி!!
அமீர்டீன்.கே.முகம்மட்-(புடவைக்கட்டு)

**ஜனநாயகத்தின் அர்த்தம்**
இந்தப் பூவும் வேரும்
ரவைகளுக்குத்
தப்பினால்தான்
நாங்கள் சிரிப்போம்!
கிண்ணியா சத்தார்
கிண்ணியா-02.


## வித்தியாசம்தான்




இது ஒரு வித்தியாசமான படம்தான். அதை அறிய 8ம் பக்கத்திற்குச் செல்ல வேண்டும் நீங்கள்.

அதிரடி அய்யாத் துரையார் சகல பக்கங்களையும் ஒரு விளாசு விளாசுகிறார். இடைக்கிடையே இலக்கியக் குறும்பும் செய்கிறார். அவரது வயது என்னவோ? அறிய ஆவல்.
வி.ராஜேஷ்
கொழும்பு-05

•




முகில் வண்ணன்-சுரேஷ் இருவரும் தொடர்ந்து முரசில் தமது தனித்துவப் படைப்புக்களால் கவர்ந்து கொள்கிறார்கள். பாராட்டுக்கள்.
எஸ்.சங்கீதா-குருநாகல்

முரசம் முழங்கி மகிழவைக்கும் தினமுரசே!
உனக்குள் முடங்கிக் கிடக்கின்ற, நீதாங்கி வந்து தருகின்ற சகல அம்சங்களையும் அலசி ஆராய்ந்தேன். இருண்ட வீட்டுக்கு ஒரு விளக்கு, இருளடைந்த வாழ்வுக்கு ஒரு வழிகாட்டி, கடலில் தத்தளிக்கும் கப்பலுக்கு ஒரு திசையறி கருவி, ஆம்! வாழ்க்கை எதிரியாம், தரம் கெட்ட தன்மைகளைக் கண்டும், கேட்டும், ஒதுங்கிச் செயல்பட ஒலிக்கின்ற முரசமே! நீ வாழ்க! நீடூழி!
க.வைரமுத்து தர்சினி-வாழைச்சேனை.

•

வாரா வாரம் பல புதுமையான அம்சங்களை சுமந்து வந்து எம்மை மகிழவைக்கும் தினமுரசுக்கு எனது பாராட்டுக்கள். உன்னுடைய ஒவ்வொரு அம்சமும் சுவைமிகு அமுதாய் இனிக்கிறது.
ஆர்.ரவிகுமார் ரகு-பெயார்வெல்.

## வாசகசாலை

வாரமலரை கையிலெடுத்தால் அனைத்து இதழையும் சுவைக்காது கீழே வைத்திட மனமில்லை எமக்கு. அதிலும் கலாவின் Love Birds சூப்பர். வரவர விதுஷாவின் முகம் ரொம்ப அழகாகவே மாறி வருகிறது. காரணம் தான் புரியவில்லை.வாழ்க வளர்க அன்பு மலரே.
தேவி, சாந்தி,
சந்திரா-கொண்டையன் கேணி.

•

வாரத்தில் ஒரு முறை மலர்ந்து நம். அனைவர் நெஞ்சங்களையும் அள்ளிவிடும் அன்பான தினமுரசே நீ ஏந்தி வரும் அனைத்து அம்சங்களால் என் நெஞ்சத்தில் நீங்கா இடத்தை பிடித்துவிட்டாய்.
ஜவ்ஸியா உஸைன்- தர்ஹாநகர்.

•

வாரா வாரம் எம்மைப் போன்ற வாசகர்களின் நெஞ்சங்களைக் கொள்ளை கொள்ளும் தினமுரசு சென்ற வாரம்- அனைத்து அம்சங்களும் வெரி பைன்.
எச்.எம்.முஹமட். சவாஹிர்-புசல்லாவை.

•

என் இனிய வாரமுரசே!
நீ கிழமைக்கு ஒரு முறை மலர்ந்தாலும், நீ தாங்கிவரும் ஒவ்வொரு அம்சமும் அருமையிலும் அருமை என வாழ்த்துகிறேன்.
செல்வி.பா.ரமணி-திருமலை.

•

என் இதயத்தில் பள்ளி கொள்ளும் என் இதய முரசே, என்றும் வாழ என் இனிய வாழ்த்துக்கள். என்றும் இளையவள் இவள்.
எஸ்.சிந்துஜா-கொடிகாவத்த.

•

அடுத்தவார இதழ் நாளையே கிடைக்காதா என ஏங்கும் முரசபிமானிகள்.
எஸ்.பி.சுப்பிரமணியம், எஸ்.பி. சுதந்திரன், புஷ்பகாந்த், நவீன்குமார், மோகன் ராஜா-அக்கரப்பத்தனை.

•

தினமுரசே உன்னைத் தொட்டால் முழு உலகமே சுற்றி வந்தது போல் ஒரு பிரமை. ஏனென்றால் உலக நடப்புக்களை, நீ காட்டும் விதம் ஒரு தனிப் பாணி. அப்பாணி மேலும் சிறப்புப் பெற எனது வாழ்த்துக்கள்.
செல்வி. றிஸ்னா நிசார்-தெலியாகொன்ன.

**இன்பம்**
பக்கசார்பற்ற பண்புடைய, பல்சுவை அம்சமுடைய பல்வேறு புதுமைகளை, படங்களுடன் தந்து-உன் பாச வலையில் எம்மை சிக்கவைத்துவிட்டாய். வாழ்க நீ, வாழ்க உன் புகழ்.
செல்வன்.க.முரசொலிமாறன்
அக்கரைப்பற்று-09.

•

சிந்தனைக்கு சிறப்பூட்டும் தினமுரசே... வாரந்தோறும், வாரமலராகவந்து முத்தமழை பொழிகிறாயே! அதற்கு என் வாழ்த்துக்கள்.
ஐ.எல்.ஏ.ஹசன்-பொத்துவில்.

•

வாரா வாரம் புத்தம் புதிய பல சிறப்பம்சங்களை தரும் தினமுரசுக்கு பாராட்டுக்களுடன் இனிய வாழ்த்துக்கள்...!
செல்வி- ஸிபானா சுபைர்-கலஹா.

•

இனிமை, இளமை, புதுமை, அள்ளி வழங்கி அனைவரின் மனதையும் கொள்ளை கொண்டு திண்டாட வைக்கின்றீரே? அனைத்தும் பென்டாஸ்டிக்.
பெரியசாமி யோகநாதன்- வகுவப்பிட்டிய.

•

அன்பின் தினமுரசே,
நீ மலர்ந்த முதல் இதழ் தொடக்கம் ஒவ்வொரு வாரமும் உன்னை பறிக்கும் வாசகன் நான். உன் இதழ் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம். பக்க சார்பற்று கொட்டும் முரசே நீ வாழ்க.
ஆர்.எச். முகமட் பாஸித்
திருகோணமலை.

•

தினமுரசு வாரமலரே!
வெள்ளி தோறும் உன் தரிசனம் காண ஏங்கும் என் இதயம் கவர்ந்த கள்வனல்லவா நீ?
செல்வி-ஸாஹிரா ரஸீக்-களுத்துறை.

•

அன்பான முரசே! சில வாரங்களாகத் தான் உன்னை தரிசிக்கத் தொடங்கியுள்ளேன். என்னை வியக்க வைத்து விந்தையில் ஆழ்த்தி, சிந்தை மயங்கச் செய்த உன் ஆக்கங்களை என்னவென்று உரைப்பேன்? ஒவ்வொரு பக்கமும், ஒவ்வொரு எழுத்துக்களும் சொட்டும் தேன் துளிகள்.
எஸ்.தாஜுன் நிஷா-பிலியந்தலை.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# பாதுகாப்புப் படைக்குள் பாரிய மாற்றங்கள்! தோல்விகளின் பொறுப்பு தலைமைகளின் தலைகளில்!!



லெப்டினன்ட் ஜெனரல் சிசில்

சமீபத்திய பூநகரித் தாக்குதலின் பின்னர் பாதுகாப்புப்படையினர் மத்தியில் புதிய நம்பிக்கைகளை கட்டியெழுப்ப வேண்டிய கட்டாயம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

வழமைபோல் பூநகரியில் ஏற்பட்ட பின்னடைவுகளுக்கான பொறுப்புக்கள் படைத் தளபதிகள் மீது விழுந் திருந்திருக்கிறது.

ஒரு இராணுவ நடவடிக்கையை முன்னெடுக்கும் போது அதில் ஏற்படும் தோல்விகள் மற்றும் விளைவுகளுக்கு அந்த நடவடிக்கைக்கு தலைமை ஏற்பவர்களும், திட்டம் வகுத்தவர்களும் பொறுப்பேற்க வேண்டும். அதுவே முறையுமாகும்.

ஆனால் பூநகரித் தாக்குதல் என்பது முகாம்களில் நிலைகொண்டிருந்த படையினர் மீது புலிகள் நடத்திய திடீர் அதிரடித் தாக்குதலாகும்.

முகாம்களில் நிலைகொண்டிருந்த படையினர் உசாரான நிலையில் இருக்கவில்லை என்றே தெரிகிறது.

ஏற்கனவே பூநகரி உட்பட வடக்கே உள்ள பிரதான முகாம்களுக்கு தகுந்த எச்சரிக்கைகள் வழங்கப்பட்டு உசார் படுத்தப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் கூறியுள்ளார். பிரதமரும் அதையே தெரிவித்துள்ளார்.

எனவே சம்பந்தப்பட்ட முகாம்களின் அதிகாரிகளும், அங்கிருந்த படையினருமே பின்னடைவுகளுக்கான பிரதான பொறுப்பை ஏற்கவேண்டும். படைகளின் தளபதிகள் மீது முழுப் பழியையும் போடுவது சரியாகாது என்பதே இராணுவ ஆய்வாளர்களது கருத்தாக இருக்கிறது.

இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்ன பதவியில் இருந்து ஓய்வு பெறுவதன் மூலமோ, அல்லது படைத்தலைமைகளில் மாற்றங்கள் செய்யப்படுவதன் ஊடாகவோ தற்போதைய யுத்தத்தில் வெற்றி பெறலாம் என்று கருதப்படுமானல் அது தவறான முடிவாகவே இருக்கும்.

அரசியல் ரீதியில் தீர்வு காணக்கூடிய பிரச்சனைகளை இராணுவ வெற்றிகள் மூலம் மறைக்க முயல்வதால் இராணுவத்தின் மீது அதிக பொறுப்புக்கள் சுமத்தப்படுகின்றன.

நீண்டகால யுத்தம் ஏற்படுத்திவரும் சலிப்பான மனநிலையால் படையினரின் மத்தியிலும் சோர்வுகள் தலைகாட்டுகின்றன.

மறுபுறம், பிரதமர் ரணில் கண்மூடித்தனமான விமானத் தாக்குதல் நிறுத்தப்படும் என்று சொன்னபோதும், தாக்குதல்கள் தொடர்ந்துள்ளன.

பிரதமர் ரணில் கூறிய உறுதிமொழி சற்று நம்பிக்கையை ஏற்படுத்திய வேளையில் யாழ்ப்பாணம் குருநகர், பாசையூர் பகுதிகளில் விமானங்கள் குண்டுமழை பொழிந் திருக்கின்றன.

குறி தவறிவிட்டதாக ஒரு முறை சொல்லலாம். அடிக்கடி சொன்னால் அதற்கு அர்த்தம் இருக்காது. திட்டமிட்ட செயல் என்றே வடக்கே உள்ள மக்கள் நினைப்பார்கள்.

முன்னர் யாழ் சென்ஜேம்ஸ் ஆலயத்தின் மீது குண்டு வீசப்பட்டது. அது தவறானது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பகிரங்கமாகவே ஒப்புக்கொண்டார். இப்போது மீண்டும் அந்த ஆலயப் பகுதியில் குண்டுகள் விழுந்துள்ளதாகச் செய்திகள் வருகின்றன.

குடியிருப்புக்கள் மத்தியில் உள்ள புலிகளது முகாம்களை அழித்துவிடலாம் என்று விமானப் படையினர் நினைத்தால் அது ஒரு போதும் சாத்தியமாகப் போவதில்லை. மாறாக தமிழ் மக்களை விரக்திக்கு இட்டுச் செல்லவே அது வழிவகுக்கும். போர் வேண்டாம் என்று சொல்பவர்களும் போரைத்தவிர வேறு வழியில்லை என்று நினைக்கவே வழி ஏற்படுத்தும் என்பதே அரசியல் விமர்சகர்களது கருத்தாகும்.

தமிழ் மக்களை நம்பிக்கையூட்டக்கூடிய அரசியல் அணுகுமுறைகளால் வென்றெடுப்பதற்கு எவ்வித முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. இந் நிலையில் அரசியல் ரீதியில் செய்யப்படவேண்டிய கடமைகளைச் செய்யாமல் சகல பொறுப்புக்களையும் படையினர் மீது சுமத்துவதால் பிரச்சனைகள் தீரப் போவதில்லை.

படைத்தலைமைகளில் மாற்றம் செய்யப்படுவதும், புதிய ஆயுதங்கள் வாங்கிக் கொடுக்கப்படுவதும், குவிக்கப்படுவதும் நிலைமைகளில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தப் போவதில்லை.

தளபதிகள் மாறலாம். போர் முறைகளும் மாறலாம். ஆனால் போர் நடக்கும் களம் ஒன்றுதான். தீர்க்கப்படவேண்டிய பிரச்சனைகள் ஒன்றுதான்.

அரசியல் தீர்வு ஒன்றை முன்வைக்காமல் இராணுவ வெற்றிகளை எதிர்பார்ப்பது புத்திசாலித் தனமாகாது என்பதே பொதுவான கருத்தாகும்.

# யோகி புனர்வாழ்வு பெற்றுவிட்டார் மாத்தையாவின் கதி கேள்விக்குறி!

## யாழ் சென்றுவந்த பத்திரிகையாளர் தகவல்

புலிகள் அமைப்பினருக்குள் பிரச்சனை என்று சமீபகாலமாக செய்திகள் வந்தவண்ணம் உள்ளன.

அரச சார்பு செய்தி அமைப்புக்களும், தமிழ் அரசியல் கட்சி வட்டாரங்களும் புலிகள் அமைப்புக்குள் மாத்தையாவின் கதி அதோகதியாகிவிட்டதாக கூறிவந்தன.

இந்நிலையில் சமீபத்தில் யாழ் சென்றுவந்த கொழும்பு பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்துள்ள கருத்துக்கள் சந்தேகங்களை வலுப்படுத்துகின்றன.

கனடாவில் இருந்து வெளிவரும் 'செந்தாமரை' பத்திரிகை கொழும்புப் பத்திரிகையாளர் கூறிய விபரங்களை வெளியிட்டிருக்கிறது.

செந்தாமரை பத்திரிகை புலிகள் அமைப்பின் ஆதரவுப் பத்திரிகையாகவே முன்னர் பேசப்பட்டது. அதன் ஆசிரியர் திரு.டி.பி. ஜெயராஜ் மாத்தையாவின் நெருங்கிய நண்பராவார். எனவே செந்தாமரை பத்திரிகையில் வந்துள்ள கொழும்புப் பத்திரிகையாளரின் செய்தியை இங்கே தருகிறோம்:

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கத்தோடு பத்திரிகையாளர்கள் சந்திப்பு நடைபெற்றது.

விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் மாத்தையா மற்றும் அதன் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் யோகி ஆகியோரின் தற்போதைய நிலை என்ன என்று கேட்டோம்.

அதற்கு பதிலளித்த திரு.பாலசிங்கம் "எமது இயக்கத்தில் சுழற்சி முறையில் அதிகாரங்களை மாற்றி வழங்கும் முறை இருக்கிறது.

அதன்படி மாத்தையாவுக்கும் யோகிக்கும் புதிய பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன" என்றார்.

நீண்ட நாட்களாக மாத்தையா பகிரங்கமாக நடமாடவில்லை. இதனால் இயக்கம் இரண்டாகப் பிளந்துள்ளது என்று ஒரு கருத்து நிலவுகிறது. உண்மையான நிலமை என்னவென்று கேட்டோம்.

"அப்படி எதுவுமே இல்லை. எல்லாம் வெறும் வதந்திகள் தான்" என்று பாலசிங்கம் சொன்னார்.

அவர்கள் இருவரையும் (மாத்தையா-யோகி) நாம் சந்தித்துப் பேசலாமா என்று கேட்டோம். அதற்கு திரு. பாலசிங்கம், "மாத்தையாவும், யோகியும் தற்போது வகிக்கும் பொறுப்புக்களின்படி பத்திரிகையாளர்களைச் சந்திக்க முடியாது. எனவே இது தற்போதைக்கு சாத்தியமில்லை" என்று கூறினார்.

"நாம் அவர்களுடன் பேச முடியாவிட்டாலும் வெறுமனே காணக்கூட முடியாதா? ஒரு முறை மாத்தையாவை நாம் கண்டால் கூட போதும்" என்று மீண்டும் வலியுறுத்தினோம்.

அதற்கு திரு.பாலசிங்கம், "என்ன செய்வது? தற்போது அவர்கள் குடாநாட்டில் இல்லை. தமிழீழத்தின் வேறு பகுதிகளில் உள்ளனர். உங்களை அங்கு அழைத்துப் போகமுடியாது." என்று சொன்னார்.

திரு.பிரபாகரனைச் சந்திக்க முடியுமா? என்ற போது, "தலைவரும் யாழ்ப்பாணத்தில் தற்போது இல்லை" என்று சிரித்தபடியே, அவர் கூறினார்.

"பிரதித்தலைவராக இருந்த ஒருவரை, அரசியல் பொறுப்பாளராக இருந்த ஒருவரை இப்படிப் பொறுப்புக்கள் மாற்றி வழங்குவது உங்கள் இயக்கத்தில் வழமையா?" என்று கேட்டோம். அத்துடன் "பிரதித்தலைவர் என்ற பதவியை மாத்தையா ஒரு போதும் வகித்ததில்லை என்றும் கூறியிருந்தீர்கள். ஆனால் பழைய எல்.ரி.ரி.ஈ. பத்திரிகை அறிக்கைகளில் பிரதித் தலைவர் மாத்தையா என்று குறிப்பிடப் பட்டிருந்ததே" என்று கேட்டோம்.

திரு.பாலசிங்கத்திற்கு சற்றுக் கோபம் வருவது எமக்குப் புரிந்தது. ஓரளவு இறுக்கமான குரலில் அவர் சொன்னார். "எங்களுக்கு ஒரு தலைவர் இருக்கிறார். ஒரு மத்திய செயற்குழு இருக்கிறது. எல்லாத் தலைமைத்துவ அதிகாரமும், தீர்மானம் எடுக்கும் அதிகாரமும் இவர்களுடையதே!"

பாலசிங்கம் சலிப்புடன் காணப்பட்டார். அதன்பின்னர் நாம் இது பற்றிக் கேட்கவில்லை. பேட்டி முடிந்த பின் எம்முடன் வந்த ஒருவர் "பிரசுரிப்பதற்கு அல்ல" (Off the record) என்ற ரீதியில் திரு. பாலசிங்கத்தை அணுகி மாத்தையா, யோகி ஆகியோர் பற்றிக் கேட்டார். இவர் 2,3 தடவைகள் பாலசிங்கத்தைச் சந்தித்து ஓரளவு பரிச்சயமானவர்.

அவரது கேள்விக்கு திரு.பாலசிங்கம், "யோகிக்கு இப்போது பிரச்சனை இல்லை. அவர் புனர்வாழ்வு பெற்றுவிட்டார். (Rehabilitated) என்று சொன்னார்.

"அப்படியானால் மாத்தையா?" என்று கேட்டதற்கு திரு பாலசிங்கம் கண்களை உருட்டி புருவங்களை உயர்த்தினார். மாத்தையா இப்போது எங்கே என்று கேட்டதற்கு, திரு.பாலா தோள்களைக் குலுக்கி, உதட்டினனைப் பிதுக்கினார். இதிலிருந்து மாத்தையாவுக்கு ஏதோ பிரச்சனை என்றும், யோகிக்கு பிரச்சனை இல்லை என்றும் உணர்ந்து கொண்டோம்.

யோகி யாழ்ப்பாணத்தில் பகிரங்கமாக நடமாடித்திரிகிறார். ஆனால் முந்தைய பரிவார பந்தா கிடையாது.

"மாத்தையா பற்றிக் கேட்டதற்கு திரு. பாலசிங்கம் தோள்களைக் குலுக்கி உதட்டினைப் பிதுக்கினார்."



பிரபாகரன் / மாத்தையா

## மாடுமேய்க்கும் வாகனச் சாரதிகள்! பிரதான சந்தியில் மாடுகளின் சஞ்சாரம்!

(நிந்தவூர் நிருபர்)



படத்தைப் பார்த்ததும் மாட்டுக் கொட்டில் ஒன்றைப் படம் பிடித்துள்ளோம் என்று எண்ணிவிடாதீர்கள்.

சம்மாந்துறை ஹிஜ்ரா சந்தியில் தினமும் மாலைவேளையில் காணக்கூடிய கட்டாக் காலிமாடுகளின் சஞ்சாரக்காட்சிதான் இது.

மேற்படி ஹிஜ்ரா சந்தி கல்முனை-அம்பாறை பிரதான வீதியில் அமைந்துள்ள முக்கியமான சந்தியாகும்.

மாலைவேளையானதும் இந்த முக்கிய சந்தியை வந்தடையும் கட்டாக்காலி மாடுகள் வீதிகளை ஆக்கிரமித்துக்கொள்வதால் போக்குவரத்திற்குப் பெரும் இடைஞ்சல்கள் ஏற்பட்டு வருவதுடன் விபத்துகளுக்கும் ஏதுவாக அமைகின்றது.

வாகனங்களை இச்சந்தியால் செலுத்திவரும் சாரதிகள், சிலசமயம் வாகனத்தை விட்டிறங்கி மாடுகளை அகற்றிய பின்னரே மீண்டும் வாகனத்தை ஓட்டிச் செல்ல வேண்டிய அவலமும் ஏற்படுகின்றது. பாதசாரிகள் கூட இதனால் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

சம்மாந்துறைப் பகுதியில், குறிப்பாக ஹிஜ்ரா சந்தியில் தொல்லை கொடுக்கும் கட்டாக்காலி மாடுகளை நிரந்தரமாக அகற்றுவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் கண்டிப்பான, சட்டபூர்வ நடவடிக்கைகள் எடுக்க முன்வருவார்களா? என்று பலரும் அங்கலாய்க்கின்றனர்.

## இராணுவத் தேவைக்காக காணி எடுக்கும் முயற்சி குடியிருப்பாளர்கள் எங்கே போவது?

(திருகோணமலை நிருபர்)

லிங்கநகர்ப் பகுதியைச் சேர்ந்த சுமார் இருபத்தைந்து குடும்பங்கள் தங்கள் காணிகளை விட்டு வெளியேற்றப்படக்கூடிய ஆபத்தான நிலையில் இருக்கின்றனர்.

முறைப்படி காணி அனுமதிப்பத்திரம் பெற்று நிரந்தர மனைகளையும், பயன்தரும் பயிர்களையும் கொண்டுள்ள இக்குடும்பங்கள், இராணுவத் தேவை காரணமாக காணிகளை விட்டு வெளியேறும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

பல வருடகாலமாக வாழ்ந்துவரும் தாங்கள் இவ்வாறு வெளியேற்றப்பட்டால் நடுத்தெருவுக்கே வர வேண்டியிருக்கும் என்று அவர்கள் தினமுரசுக்கு வருத்தத்துடன் தெரிவித்தனர். இது சம்பந்தமாக வடக்கு-கிழக்கு ஆளுநருக்கும் கடிதமூலம் அவர்கள் அறிவித்துள்ளனர்.

இக்குடும்பங்களுக்கு குடிநீர் வசதியை முன்னாள் ஆளுநர் அவர்களே செய்து கொடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



## முரசின் முயற்சிக்கு அமைச்சர் பாராட்டு!

எம்.ரி.வியில் ஒளிபரப்பாகிவரும் மகாபாரதத் தொடரின் காட்சிகளுக்குரிய கதைவசனங்களை தினமுரசு வெளியிட ஆரம்பித்துள்ளது. இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சர் திரு.பி.பி.தேவராஜ் அவர்கள் முரசின் முயற்சியைப் பாராட்டியுள்ளார்.

இந்து சமயத்தின் மகா காவியம் எனப் போற்றப்படும் மகாபாரதம் கதைத்தொடர் எம்.ரி.வி தொலைக்காட்சி சேவையில் ஒளிபரப்பப்பட்ட போதும் தமிழாக்கம் இல்லாததால் இலங்கை தமிழ் மக்கள் புரிந்துகொள்ள முடியாத நிலையை உணர்ந்து "தினமுரசு" வாரமலரில் இதுவரை ஒளிபரப்பப்பட்ட தொடர்களையும் இனிமேல் ஒளிபரப்பும் பகுதிகளையும் தமிழாக்கம் செய்து வெளியிடுவதை நான் மனதாரப் பாராட்டுகின்றேன்.

இத்தகைய முயற்சி மகாபாரதத்தின் தெளிவை இலங்கை வாழ் தமிழ் மக்கள் உணரக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்துகின்றது. சகல தரப்பினருக்கும் பயன்படக்கூடிய விதத்தில் தாங்கள் எடுத்துள்ள இந் நல்முயற்சி வெற்றியளிக்க எனது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வாறு அமைச்சர் திரு.பி.பி. தேவராஜ் வாழ்த்துச் செய்தி ஒன்றை முரசுக்கு வழங்கியுள்ளார்.

விளம்பரப் பகுதி

SARIKA TEX
Ladies Tailoring
24 மணிநேரத்தில்
சாறி பிளவுஸ்
சல்வார் கமீஸ்
உங்கள் உடலமைப்புக்கேற்றபடி
நவீன முறையில் தைத்துக்கொள்ள
Hewa Shopping Complex
No. 69/5-1/1, 1st Floor,
Galle Road,
Dehiwela South.

ரிஷி அஜமாமிச
லேகியம்
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 175/=,95/=
தங்க பஸ்பம் கலந்தது 975/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=

ஞான சுந்தர
வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398



மலையாள
மாந்திரீகம்

உலகளாவிய ரீதியில் 27 வருடங்களாகத் தொடர்ந்து உண்மைச் சேவையாற்றி வரும் உலக மலையாள மாந்திரீகச் சக்கரவர்த்தி P.K.சாமி, எஸ்ஸோஸியேட் பிரைவேட் லிமிட்டெட்டாரின் சேவையில் கைரேகைகள், ஜாதகங்கள், மாந்திரீக ரீதியில் உங்கள் பிரச்சனைகளுக்கு நிவாரணம் பெற இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். தொழில் பிணக்குகளா? காதல் கிலேசங்களா? வசியங்களா? கணவர், மனைவி, குடும்பப் பிரச்சனைகளா? ஆஸ்த்துமா போன்ற தீராத நோய்களா? இரகசிய ஆண், பெண் நோய்களா? வெளியூர் வாய்ப்புப்பெற வேண்டுமா? என்ன குறை?

P.K. SAAMY
ASSOCIATE PVT. LTD.,
33, Daily fair Complex, NUWARA ELIYA.
Dial: 052-2508 & 3093
Celltel. 072-26088, 078-61933

COLOMBO BRANCH:
26, CHARLYMONT ROAD,
WELLAWATTA.
DIAL:01-583250. 078-71243 FAX: 0094-523093

ஆரம்ப மனுச் செய்பவர்களுக்கு, தற்கால பலாபலனைத் தங்கள் பிறந்த திகதி, மாதம் மாத்திரம் எழுதியனுப்பினால் தற்போதைய அல்லது கடந்த ஆண்டுகளின் பலனை இலவசமாக அனுப்புவோம். விஷேடமாக வெளிநாட்டு ஆடர்கள் உடன் கவனிக்கப்படும். வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறும்; துர்க்கையின் அக்கினிக் குண்டல பூஜையில் கலந்து உண்மை அறியலாமே.

# பக்தர்கள் வெள்ளத்தில் வீதி உலா!



மஸ்கெலியா ஸ்ரீசண்முக நாதஸ்வாமி தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் சிறப்புற நடந்தேறியது. மண்டலாபிஷேகங்கள் நடைபெறுகின்றன. 15.12.93 சங்காபிஷேகத்துடன் 48 நாள் விசேஷ ஆராதனைகள் நிறைவுபெற்றன. பிரதானகும்பம் பக்தர்கள் வெள்ளத்தில் வீதி வலம் வந்த காட்சியைத்தான் படத்தில் காண்கிறோம்.

# நம்பிக்கையில்லாத் தீர்மானத்தோடு எதிர்க் கட்சிகள்! எதிர்கொள்ளத் தயார் என்கிறார் முதல்வர்!!

(கண்டி நிருபர்)

மத்திய மாகாண சபை முதலமைச்சர் திரு டபிள்யூ.பீ.பீ. திசாநாயக்காவுக்கு எதிராக மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான விவாதம் டிசம்பர் மாதம் 21ம் திகதி எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றது.

இந்த தீர்மானத்தை டி.யு.என். எப். தலைவரும் மாகாண சபை உறுப்பினருமான திரு காமினி திசாநாயக்காவும் எதிர்க்கட்சித் தலைவர் திரு விக்கிரமரத்தினவும் இணைந்தே சமர்ப்பித்துள்ளனர்.

மத்திய மாகாண சபையில் இப்பொழுது 57 பேர் அங்கம் வகிக்கின்றனர். திரு.பீ.சந்திரசேகரன் இன்னும் சத்தியப்பிரமாணம் எடுக்கவில்லை. 57 உறுப்பினர்களில் ஆளும்கட்சியைச் சேர்ந்தவர்கள் 32 பேர் அதில் 11 உறுப்பினர்கள் இ.தொ.காவைச் சார்ந்தவர்கள். எதிரணியில் 25 பேர் இருக்கின்றனர்.

இந்தத் தீர்மானத்தின் மீது இ.தொ.கா.வுக்கும் ஆளும் ஐ.தே.கட்சிக்கும் இடையில் தற்காலிகமாக நிலவும் சிறிது விரிசல்கள் காரணமாக இவ்விரு பகுதியினருக்கும் இடையில் கருத்து வேறுபாடு நீண்டுவிடக் கூடும் எனக் கருதிய ஓரிரு மணித்தியாலங்களுக்குள்ளே நம்பிக்கையில்லாத் தீர்மானமும் சூட்டோடு சூடாக சபை செயலாளரிடம் கடந்த 27ம் திகதி திங்கட்கிழமை சமர்ப்பிக்கப்பட்டது. இந்தக் கொந்தளிப்பு இப்பொழுது பலரையும் கனவில் மூழ்கடித்திருக்கிறது. இது குறித்து தமது பெயரை வெளியிட விரும்பாத இ.தொ.கா மாகாண சபை உறுப்பினர் ஒருவர் இதுவும் ஒரு புஷ்வானமாகி விட்டால் நாம் என்ன செய்ய இயலும் என்ற தோரணையில் முரசுக்குக் கருத்து வெளியிட்டார்.

அரசுக்கும் இ.தொ.காவுக்கும் தோட்டங்கள் நிருவாகங்கள் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைகளும் பிரச்சனைகளும் கருத்து வேறுபாடுகளும் சுமுகமாக இன்னும் ஓரிரு மாதகாலத்தில் முடிந்துவிடலாம் எனக் கருதுவதால் இப்பொழுது இலவுகாத்த கிளியின் நிலைக்கு அதிருப்தியாளர்கள் தள்ளப்பட்டிருப்பதாக மத்திய மாகாண சபை அரசியல் வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்தன. தமக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தான் தைரியத்துடன் ஏற்பதாகவும் தான் அரசியலில் இருந்து ஓய்வு பெற காலம் இருப்பதாகவும் தம்மீது வேண்டுமென்றே காரியூச நினைக்கும் சந்தர்ப்பவாதிகளுக்கு சில சந்தர்ப்பங்களில் இந்த தீர்மானம் பாடம் புகட்டும் எனவும் மத்திய மாகாண முதல்வர் திரு திஸாநாயக்க தெரிவித்தார்.

தங்க நகைச் சேமிப்புத் திட்டம்

அன்பார்ந்த தங்க நகைப் பிரியர்களே! உங்களின் நகைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள மிக இலகுவான வழி! மாதாந்தம் ரூ.500/=, ரூ.300/=, ரூ.150/= மட்டும் தவணை முறையில் செலுத்துங்கள். மாதாந்தம் நடைபெறும் குலுக்கலில் சிறப்புப் பரிசாக ரூ.12.000/=, ரூ.7200/=, ரூ.3600/= பெறுமதியான தங்க நகைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

விபரங்களுக்கு:-
Suresh Combine
No. 20, Daily Fair Complex, Nuwara-Eliya.

பரிசு பெற்றவர்கள்:-
ரூ.150/= க்கான திட்டத்தின் கீழ் 14.11.93 நடைபெற்ற முதலாவது குலுக்கலில் ரூ. 3600/= பெறுமதியான தங்க நகைகளை கந்தப்பளை, பிரதான வீதி சின்னசாமி பிர்ந்தா என்பவர் பெற்றுக் கொண்டார். இவருக்கு எங்கள் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும். அத்துடன் எங்கள் வாடிக்கையாளர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் எமது 2வது குலுக்கல் எதிர்வரும் 15.12.93 அன்று இடம்பெற உள்ளதால் எமது உறுப்பினர் தங்களுக்கான பணத்தை 10.12.93 திகதியிற்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

சுரேஸ் கம்பைன்
இல (20) 52/4, தினசந்தை, நுவரெலியா.

கலஹாவில்
தினமுரசு
கிடைக்குமிடம்
"மாலிக் பிரதர்ஸ்"
97, மெயின் வீதி,
கலஹா.

# "நடந்ததை மறப்போம் - புதிய உறவை வளர்ப்போம்! வாழ்ந்த மண்ணுக்கு முஸ்லிம்கள் மீண்டும் செல்ல வழி திறப்போம்!!"

(மன்னார் நிருபர்)

சென்ற 1990ம் ஆண்டு வடக்கிலிருந்து வெளியேறப்பட்ட சுமார் ஒரு இலட்சம் முஸ்லிம்களும் மீண்டும் தங்களது சொந்த இடங்களில் குடியேறி முன்பு போன்று தமிழ் மக்களுடன் ஐக்கியமாகவே வாழ விரும்புவதாக வட பகுதி முஸ்லிம்களின் சார்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் அகதிகள் மாணவ பேரவை கூறியுள்ளது.

வட பகுதி முஸ்லிம்களின் நிலைப்பாடு பற்றி பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் அவ்வமைப்பு மேலும் கூறியுள்ளதாவது, சென்ற 1990ம் ஆண்டு வட மாகாணத்தில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த சுமார் ஒரு இலட்சம் முஸ்லிம்கள் தமிழீழ விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்டனர்.

இந்த முஸ்லிம்களில் பெரும்பான்மையானோர் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் வடபகுதிக்கு வெளியே வாழந்து வருகின்றனர்.

இந்த முஸ்லிம்கள் மீண்டும் தங்களது சொந்த இடம் சென்று முன்பு போன்று தமிழ் சகோதரர்களுடன் மிகவும் ஒற்றுமையாக வாழ விரும்புகின்றனர்.

எனவே, இந்த முஸ்லிம்கள் மீண்டும் சொந்த இடங்களில் சென்று குடியேற மனித நேயம் கொண்ட சமாதான விரும்பிகள் குறிப்பாக தமிழ் சகோதரர்கள் புலிகளோடு பேசி நல்ல முடிவினைக் காணவேண்டும்.

பழையதை மறப்போம். புதியதை வளர்ப்போம். எமது பழைய ஒற்றுமை மீண்டும் மலர்ந்து, முன்புபோல் மிகவும் ஐக்கியமாக வாழ்வோம்.

வரும் புத்தாண்டிலாவது முஸ்லிம்கள் தமது சொந்த இடம் சென்று குடியேறும் வழி ஏற்பட சமாதான விரும்பிகள் முயற்சிகளை உடன் செய்ய வேண்டும் எனவும் அவ்வமைப்பு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

• இதோ 100 வீதம் கல் மண் நீக்கப்பட்ட "ரண்முத்து சம்பா" அரிசி
• உங்களுக்குத் தேவையான ருசியான "ரண்முத்து சம்பா" வீட்டுப்பாவனைக்கு வசதியான 25 கிலோ அடங்கிய குட்டிச்சாக்கிலும், மற்றும் வியாபாரிகளுக்கு வசதியாக 64 கிலோ சாக்கிலும் கிடைக்கும்.
• விலை சாதாரணம்
• தரம் தூய்மை
• கல்மண் கிடையவே கிடையாது. 100% உத்தரவாதம் உங்கள் மனங்களில் என்றும் மறக்காமல் நிற்கவேண்டிய ஒரே அரிசி "ரண்முத்து சம்பா".

"ரண்முத்து சம்பா"
PSRM
சிஹானா றைஸ் மில்
33, முஸ்லிம் கொலனி
கதுருவெல, பொலன்னறுவை.
தொலைபேசி: 027-2083

## பாதையின் அவல நிலை நீங்குமா?

கண்டி நகரை ஒட்டிய அக்குறணையின் மல்வானஹின்னயில் போக்குவரத்துக்கு அன்றாடம் பயன்படுத்தும் இப்பாதை சீர்குலைந்து பாடசாலைக்குச் செல்லும் மாணவ மாணவியர் அரசாங்க ஊழியர்கள் பொது மக்கள் அனைவருக்கும் மிகவும் சிரமமாக உள்ளது. இ.போ.சபை பஸ் பல வருட காலமாக சேவை செய்வதில்லை. இந்தக் குறையைப் பூர்த்தி செய்ய முழுட பொதுமக்கள் தனியார் பஸ்களை சேவையில் ஈடுபடுத்தினர். தற்போது பாதையின் அவல நிலை காரணமாக அதுவும் நின்று விட்டது. இதனால் அனுதினம் அவதியுறும் எம்மை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கண்திறந்து பார்ப்பார்களா? மல்வானஹின்னைப் பாதையின் அவல நிலை நீங்குமா?

நலன் விரும்பி ரொஸான் நபீல் மல்வானஹின்ன.

# திருமலையில் தமிழ் பேசும் மாணவரின் கல்வி நிலை! கல்விப் பணிப்பாளரும் இல்லை! குறைகளும் தீரவில்லை!!

திருகோணமலை மாவட்டத்தில் 233 பாடசாலைகள் உள்ளன. 1 ஏ.பி. பாடசாலைகள் 11, 1 சி. பாடசாலைகள் 35, தரம் இரண்டு பாடசாலைகள் 70, தரம் மூன்று பாடசாலைகள் 117 என்பன இதிலடங்கும். இனவிகிதாசார அடிப்படையில் மேற்படியான பாடசாலைகளின் தொகையும், கல்வி கற்கும் மாணவ மாணவிகளின் தொகையும் பின்வருமாறு:

| இனங்கள் | பாடசாலைகள் | மாணவ, மாணவிகள் தொகை |
|---|---|---|
| சிங்களம் | 76 | 22572 |
| தமிழ் | 82 | 25393 |
| முஸ்லிம் | 75 | 29719 |

தற்போது வடக்கு-கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளரின் தலைமையின் கீழே திருகோணமலை பிரதேசக் கல்விப் பணிமனையும் இயங்கிவருகின்றது. வடக்கு-கிழக்கில் உள்ள பிரதேசக் கல்விக் காரியாலயங்கள் ஏனைய பிரதேசங்களில் இயங்கும் கல்விக் காரியாலயங்களுடன் ஒப்பீட்டு ரீதியில் நோக்குகையில் வளப்பகுப்புக்கள், நிதி ஒதுக்கீடு, ஆசிரியர், லிகிதர், சிற்றூழியர் போன்றோர் குறித்த ஆளணிக் குறைபாடு என்பன போன்ற பல்வகைப் பிரச்சனைகளையும் எதிர்கொள்கின்றன. அத்துடன் வடக்கு-கிழக்கு பிராந்திய பிரச்சனைகளினாலும் பாரிய தாக்கங்கள் வேறு உள்ளன.

எனவே மேற்படி சிக்கல்களை எதிர்கொள்ளும் வடக்கு-கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர், மேலதிக வேலைப்பளுவாக சிக்கலாகிக் கிடக்கும் திருகோணமலை மாவட்ட கல்விப் பணிப்பாளர் பதவியையும் ஏற்று இருப்பது பிரச்சனைகளை மேலும் முறுகலாக்குகின்றன. மிகத்திறமையான ஆற்றலுள்ள, கடமையுணர்வு மீதுரப்பெற்ற இந்த மாகாணக் கல்விப் பணிப்பாளரின் திறமையை வீணடிக்கவா இந்த வேண்டாத பளு ஒப்படைக்கப்பட்டுள்ளது என திருகோணமலை வாழ் சகல மக்களும் அங்கலாக்கின்றனர்.

ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருந்த புள்ளி விபரங்களின் படி மூவின மக்களின் பாடசாலைகளும் மாணவர்களின் தொகையும் ஏறத்தாள சமமான நிலையிலேயே திருகோணமலை மாவட்டத்தில் காணப்படுகின்றது. எனவே வளப்பகிர்வு, ஆளணிப் பகிர்வு என்பன ஏறக்குறைய சமனாகவே வழங்கப்படல் வேண்டும். ஆனால் திருகோண மலை மாவட்டத்தின் நிலைமை அப்படியல்ல. குறிப்பிட்ட இனப் பாடசாலைகளுக்கே ஆளணியினர், நிதி, வளங்கல் என்பன. அபரிதமாக வழங்கப்பட்டுள்ளன. இந்நிலைமையானது குறிப்பிட்ப்பட்டுள்ள வடக்கு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அவர்களின் காலத்திற்கு முன்பிருந்தே செயற்பட்டு வந்துள்ளன.

புகார் பெட்டி

குறிப்பாக இரண்டு பிரச்சனைகளைத் தொட்டுக் காட்டுவது சாலப் பொருத்தம்.

01. ஆசிரிய ஆளணியினர் நகர்ப்புறத்தே அபரிதமாய்க் குவிந்துகிடக்கின்றனர். நிலாவெளி புல்மோட்டை வரையிலான பாடசாலைகளும், மூதூர் பிரதேசப் பாடசாலைகளும் முக்கியமான பாடங்களுக்குரிய ஆசிரியர்களின்றி நீண்டகாலமாக பரிதவிக்கின்றன. நிதி, வளப்பகிர்வுகளும் மேற்படி பாடசாலைகளுக்கு புறக்கணிக்கப்படுகின்றன.

02. இன விகிதாசார அடிப்படையிலேயே வேலைவாய்ப்புக்கள், உத்தியோக நியமனங்கள் வழங்கப்படல் வேண்டும். இது அரசாங்கத்தின் கொள்கையாகும். திருகோணமலை மாவட்ட கல்விக் காரியாலயம், வடக்கு-கிழக்கு மாகாண கல்விக் காரியாலயம், கல்வி அமைச்சு போன்றவைகளிலே குறிப்பிட்ட இனத்தவரே ஆட்சி செலுத்தி வருவதனைக் காணக் கூடியதாகவுள்ளது.

எனவே சிக்கலாகியிருக்கும் திருகோணமலை மாவட்ட கல்விக் காரியாலயத்தை சீர்படுத்த வேண்டுமானால் திருகோணமலை மாவட்ட கல்விப் பணிப்பாளர் நியமனம் உடனடியாகச் செய்வது அவசியம். எனவே இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தல் வேண்டும். அதிகாரிகள் இனியும் கண் திறப்பார்களா....?

எஸ்.எம். மனோகரன்-திருகோணமலை.

## மணிக்கூட்டுக் கோபுரம் இருந்தும்...!

அக்கரைப்பற்று மத்திய சந்தியிலுள்ள மணிக்கூட்டுக் கோபுரம் 24.02.93 அன்று மறைந்த ஜனாதிபதி 'ரணசிங்க பிரேமதாச' அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. ஆனால், இன்று கவனிப்பாரற்ற நிலையில் அநாதை போலக் காட்சியளிக்கிறது. இம்மணிக்கூட்டுக் கோபுரத்தில் பொருத்தப் பட்டிருக்கும் நான்கு மணிக்கூடுகளும் நான்கு நேரங்களைக் காட்டுகின்றன.

இதுபற்றி பலர் முறையீடு செய்தும் பயன் இல்லாது போய்விட்டது.

இதனால் வேறு ஊர்களிலிருந்து வியாபார விடயங்களுக்காகவும் வேறு விடயங்களுக்காகவும் இங்கு வருபவர்கள் அம் மணிக்கூட்டுக் கோபுரம் திருத்தப் படாதா என்ற கேள்வியை எழுப்புகின்றனர். அண்மையில், வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் இருவர் தமது கடிகாரத்திலும் மணிக்கூட்டுக் கோபுரத்தின் கடிகாரத்திலும் நேரங்கள் வித்தியாசமாய் உள்ளதைப் பார்த்து அருகிலிருந்தவர்களிடம் வினாத் தொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

எனவே, இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தினமுரசு மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

சாரங்கன்-அக்கரைப்பற்று-09.

நன்றி - நூலகத்திட்டம்




புலிகள் அமைப்பினரின் மாவீரர்தின நாளுக்கான அலங்கார வளைவு.

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநராக திரு.லயனல் பெர்னாண்டோ நியமிக்கப் பட்டிருக்கிறார்.

வேறு சிலரைக் கேட்ட போது அவர்கள் மறுத்துவிட்டதாகவும், அதன் பின்னர் திரு. லயனலைக் கேட்டபோது அவர் விருப்பத்தோடு சம்மதித்ததாகவும் ஒரு செய்தி அடிபட்டது.

திரு. லயனல் பெர்னாண்டோ விருப்பத்தோடு சம்மதித்தமைக்கு காரணம் உண்டு.

அவர் யாழ்ப்பாணத்தில் அரச அதிபராக முன்னர் கடைமையாற்றிய போது தமிழ் பேசும் மக்களின் பண்பான உணர்வுகளை, நடைமுறைகளை நன்கு அறிந்து கொண்டவர்.

அதே சமயத்தில் யாழ் மக்களாலும் பெரிதும் விரும்பப்பட்டவர்.

அவர் பிரியாவிடை பெற்றபோது யாழ் மக்கள் மிகவும் வருத்தம் அடைந்தனர்.

இப்போது வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநராக கடமையாற்றும் சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்திருக்கிறது.

எனினும் தான் முன்னர் கடமை யாற்றிய யாழ்ப்பாணத்திற்கு சென்று அங்குள்ள மக்களை சந்திக்கும் வாய்ப்பு அவருக்கு அரிதாகவே இருக்கும்.

முன்பு அவர் கடமையாற்றிய சூழல் வேறு விதமானது.

இப்போது வடக்கில் ஒரு பாரிய பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கிறது.

கிழக்கிலும் புலிகளின் நடவடிக்கைகள் இருக்கின்றன.

நாளும், பொழுதும் நிலைமைகள் மாறிக்கொண்டிருக்கின்றன.

வடக்கே புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அவர்கள் வைத்தது தான் சட்டம். அங்குள்ள அரசாங்க ஊழியர்கள், அதிகாரிகள் கூட புலிகளது உத்தரவுகளின் படியே கடமைகளை தீர்மானிக்க முடியும்.

சில அரச அதிகாரிகள் பகிரங்க மாகவே புலிகளை ஆதரிக்கிறார்கள். அவர்களது கூட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றுகிறார்கள். புலிக்கொடியை ஏற்றிவைக்கும் அதிகாரிகளும் இருக்கி றார்கள்.

சிலர் வடக்கே ஒரு விதமாகவும், வவுனியாவை தாண்டி வந்த பின் வேறு விதமாகவும் தங்கள் நிறங்களை மாற்றிக் கொள்வதையும் அவதானிக்க முடிகிறது.

"அங்கு இருந்தால் அவர்களை அனுசரித்துப் போக வேண்டியிருக்கிறது" என்று அவர்கள் அரச தரப்பினருக்கு சொல்வதில் நியாயமும் இருக்கிறது. சிலரது விடயத்தில் நிறம் மாற்றும் தந்திரமும் இருக்கிறது.

எப்படியோ இருதரப்பிலும் நல்ல பெயர் எடுத்துக்கொண்டு பென்சன் வரை காலம் தள்ளிவிடும் புத்திசாலிகளும் இல்லாமல் இல்லை.

நிறம் மாறுவோர், புத்திசாலிகள் என்ற ரகத்தினரை எல்லாம் ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு உண்மை நிலையை ஆராயலாம்.

புலிகள் பலமான சக்தியாக இருக்கி றார்கள். வடக்கு-கிழக்கில் மட்டுமல்லாமல் முழு நாட்டினதும் அரசியல் போக்கையே மாற்றியமைக்கக்கூடிய சக்தியாக வளர்ந் திருக்கிறார்கள்.

"அவர்கள் கிடக்கட்டும்" என்று சொல்லிக்கொண்டு வடக்கு-கிழக்கில் சிவில் நிர்வாகத்தை கட்டியெழுப்ப முற்பட்டால் அது பூரண பலனை அளிக்கப் போவதில்லை.

ஆயினும், வடக்கு-கிழக்கு மாகாண நிர்வாகத்தில் செய்யப்படக்கூடிய பணி களே தற்போது தேங்கிக் கிடக்கின்றன.

குறுநில வேந்தர்கள் போல் செயற்படும் சில அதிகாரிகள் குறித்து ஊழியர்கள் மத்தியில் கடுமையான அதிருப்திகளும் காணப்படுகின்றன. ஊழல்கள் பற்றிய பேச்சுக்களும் அடிபடு கின்றன.

மாகாண அபிவிருத்திக்கு ஒதுக்கப் படும் பணத்தைக்கூட திருப்பி அனுப்பி வைத்து சிக்கனமானவர்கள் என்று சிலர் நல்ல பெயர் எடுக்க நினைப்பதாகவும் பரவலான பேச்சுக்கள் இருக்கின்றன.

எனவே, பழுத்த நிர்வாக அனுபவம் உள்ளவரான திரு.லயனல் பெர்னாண்டோ ஆளுநராகப் பொறுப் பேற்றுள்ளதன் மூலம் அவ்வாறான சீர்கேடுகளை சரிசெய்வார் என்று எதிர்பார்க்கலாம்.

ஆயினும், இன்னொரு விசயம். மாகாண சபைகளுக்கான அதிகாரமே இன்னும் சர்ச்சைக்குரியதாக இருக்கிறது. அதிகாரப் பரவலாக்கம் பற்றிய வாத-விவாதங்கள் வளர்ந்திருக்கும் அளவுக்கு அதிகாரப் பரவலாக்கம் வளர்ச்சியடைய வில்லை.

இந்நிலையில் மாகாண ஆளுநரால் எந்தளவுக்கு கூடுதல் முன் முயற்சி எடுத்துச் செயல்பட முடியும் என்பது ஒரு பிரச்சனை.

வடக்கு-கிழக்கில் யுத்தம் தொடர்வதால் முக்கிய முடிவுகள் மத்திய அரசாங்கத்தால் செய்யப்படுகின்றன.

ஆகவே ஆளுநரால் கூட ஒரு வரம்புக்குட்பட்ட வகையிலேயே செயற்பட முடியும்.

எனினும், தற்போதைய நிலையில் திரு.லயனல் பெர்னாண்டோ ஆளுநராகி யிருப்பது வரவேற்கத்தக்கது. அவரது அனுபவங்கள் நடைமுறையில் எவ்வாறு பயனளிக்கும் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். ■

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

-நாரதர்-

# பிரபாவின் பேச்சும் புலிகளின் போக்கும்!

காமினி ஜெயசூரிய என்பவர் முன்னாள் அமைச்சர். தன்னை ஒரு இனவாதியாக நினைப்பவர்கள் பற்றி அவர் கவலைப்படுவதில்லை. கவலைப்படுவதில்லை என்பதால் வெட்கப்படுவதும் இல்லை.

அவர் ஜனாதிபதிக்கு ஒரு யோசனை சொல்லியிருக்கிறார்.

"அமைச்சர் தொண்டமானோடு உறவை முறித்துக் கொண்டால் பௌத்த சிங்கள மக்களின் ஆதரவை அமோகமாக பெற்றுக்கொள்ளலாம்" என்கிறார்.

அவரது யோசனையில் கலப்படமில்லாத இனவாதம் பளிச்சென்று தெரிகிறது.

அந்த யோசனையை ஆங்கில நாளேடு ஒன்று முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டும் இருக்கிறது.

அமைச்சர் தொண்டமான் "புலிகளின் ஆள்" என்று முத்திரை குத்தி காட்டப்படுகிறார்.

ஆனாலும் முத்திரை குத்தல்களின் பின்னால் இருக்கக்கூடிய நபர்களைப் பொறுத்து நோக்கங்களும் மாறுபடுகின்றன.

மலையகத் தமிழர்கள் இலங்கை அரசியலில் தீர்க்கமான சக்திகளாக உயர்ந்து வருவதை 'இனவாதம் தவிர நினைப்ப தெல்லாம் வேறில்லை' என்று இருக்கக்கூடிய சிலருக்குப் பிடிக்கவில்லை.

தலையிலே குட்டி இருக்க வைக்கலாம். சொன்னபடி நடக்க வைக்கலாம் என்று மலையக தமிழர்கள் பற்றி நினைத்துக்கொண்டிருந்தவர்களுக்கு நெஞ்சு பொறுக்காமல் துடிக்கிறது.

பாராளுமன்றத்தில் மலையகத் தமிழர்களது பிரதிநிதித்துவ பலம் அதிகரித்திருக்கிறது. சிலருக்கு அதனால் வயிறு எரிகிறது.

அமைச்சர் தொண்டமான் மீது அவர்கள் குறிவைப்பது அவரை வீழ்த்தவல்ல; மலையக மக்களது தனித்துவமான அரசியல் எழுச்சியை குழியில் போடும் தப்பான ஆசையோடுதான்.

அன்று விஜயகுமாரணதுங்க புலிகளோடு போய் பேசிவிட்டு வந்தார். சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் புலிகளோடு பேசினார்கள். பௌத்த மதகுருமார் புலிகளோடு போய் இருந்து பேசிவிட்டு வந்தார்கள். இப்போது சபாநாயகர் எம்.எச். முகமட் கூட, புலிகளோடு பேசுவேன். அழைத்தால் செல்லுவேன் என்கிறார்.

ஆனால் இவர்களில் யாருமே ஈழக்கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆதரிப்பதாக சொன்னதும் இல்லை.

அப்படித்தான் அமைச்சர் தொண்டமானும் புலிகளோடு பேசத் தயார் என்று சொன்னார்.

அமைச்சர் தொண்டமான் சொன்னவுடன் மட்டும் புலி வந்து அவர் மடியில் இருப்பது போல ஏன் துள்ளுகிறார்கள் என்பதுதான் யோசிக்க வேண்டிய விசயம்.

புலி தொண்டமானின் மடியில் இருந்தால் அவர்தான் பயப்படவேண்டும். மற்றவர்கள் ஏன் துள்ள வேண்டும்?

அது மட்டுமல்ல, புலிகள் கூட அமைச்சர் தொண்டமான் பற்றிய முரண்பட்ட அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிறார்கள்.

அவர் எழுதிய கடிதங்களுக்கு தன் கைப்பட பதில் எழுதக்கூட பிரபாகரன் முன்வரவில்லை. எழுதப்பட்ட கடிதங்களில் கூட புலிகள் பிடி கொடாமல் பதில் எழுதினார்கள்.

எனினும் அமைச்சர் தொண்டமானுக்கு புலிகள் பற்றிய அனுதாபமான கண்ணோட்டம் இருக்கக்கூடும். அவர்களை புறக்கணித்துவிட்டு ஒரு அரசியல் தீர்வை எட்டமுடியாது என்ற நம்பிக்கையும் நிலவக்கூடும்.



வடக்கு-கிழக்கு மக்களுக்கு இருக்கக்கூடிய இனப் பிரச்சனையும், அந்த மக்களது அரசியல் அபிலாசைகளும் நியாயமானவை என்று உணர்ந்திருப்ப தால், அவை தீர்க்கப்படாத போது, போராடுவது தவிர்க்க முடியாதது என்று அவர் கருதுவதில் பெரிய தவறு ஒன்றும் கிடையாது.

ஆனால் ஈழக் கோரிக்கையை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. அவ்வாறு ஏற்றுக்கொள்பவராக இருந்தால் தமிழர் விடுதலைக்கூட்டணியோடு இணைந்து செயற்பட்டிருக்கலாம். அப்படிச் செய்ய வில்லை. மலையக மக்களது பிரச்சனைகளும், வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் பேசும் மக்களது பிரச்சனைகளும் வெவ்வேறானவை என்பதை உணர்ந்து விலகியே நடந்து கொண்டிருக்கிறார்.

அவரது அரசியல் பாணி கூட்டணி யினர் போல் உணர்ச்சியூட்டும் பேச்சுக் களை முதன்மைப்படுத்துவதாக அமைய வில்லை. அவ்வாறு அமைந்திருந்தால் கூட்டணியினருக்கு ஏற்பட்ட அனுபவம் அவருக்கும் ஏற்பட்டிருக்கக்கூடும்.

என்றாலும், தற்போது மலையக தமிழ் மக்கள் மத்தியில் உள்ள இளம் தலைமுறை வேகமாகச் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறது.

அதனை பொறுமை இழக்க வைக்கும் வகையில் இனவாத சக்திகள் நடந்து கொள்வது நாட்டு நலனுக்கு நன்மை செய்யாது.

வடக்கு-கிழக்கு விடயத்தில் இனவாதிகள் செய்த தவறை மலையக தமிழ் மக்கள் விடயத்திலும் மீண்டும் ஒரு முறை செய்துவிடக்கூடாது.

அமைச்சர் தொண்டமானோ, அல்லது மலையகத்தில் இருக்கும் ஜனநாயக சக்திகளோ பலவீனப்பட்டுப் போவது தீவிரப்போக்குகள் வளர்ந்தோங்கவே வழிவகுக்கும்.

தந்தை செல்வநாயகத்தோடு பேசி பிரச்சனையைத் தீர்த்திருந்தால், இன்று பிரபாகரன் எங்கிருக்கிறார் என்று தேடவேண்டி வந்திருக்காது. நாடு இத்தனை இழப்புக்களையும், மனித உதிர விரயங்களையும் சந்தித்தும் இருக்காது.

இன்றுள்ள நிலையில் பிரச்சனை களுக்கு இனவாத சாயம் பூசி பரிகாரம் தேட முற்படுவது மேலும் மேலும் குட்டையைக் குழப்புவதாகவே அமையும்.

ஜெயசூரியாக்கள் குழம்பிய குட்டையில் மீன்பிடித்துவிட்டு போய்விடுவார்கள். அப்பாவிகள்தான் குருதி கொட்டிக் கொண்டிருக்க வேண்டும். ■

மாவீரர் தின இறுதி நாளில் புலிகளின் தலைவர் பிரபாகரன் தமிழீழமே இறுதித் தீர்வு என்று உறுதியாகப் பேசியிருக்கிறார்.

பேரினவாதத்தில் மாற்றம் எற்படும் என்று தான் எப்போதும் கருதியதில்லை என்றும் சொல்லியிருக்கிறார்.

சென்றவாரம் எக்ஸ்ரே ரிப்போட்டில் சொன்னது போல 6000 உறுப்பினர்களை பலிகொடுத்த பின்னர் பிரபாகரனால் தமிழீழத்துக்கு மாற்றுத்திட்டம் பற்றிப் பேச முடியாது.

சமாதானக் கதவை தாம் மூடிவிட வில்லை என்று பிரபாகரன் சொல்லி யிருப்பதை மட்டுமே எடுத்து தலையங்க மாக்கினால் அவர் ஈழக்கோரிக்கையை கைவிடத் தயார் என்பது போலத் தெரியும்.

ஆனால் பிரபாகரன் இலங்கையில் இரு நாடுகள் என்ற தமது இயக்கக் கொள்கையின் அடிப்படையில் நின்றுதான் சமாதானம் பற்றி பேசலாம் என்கிறார்.

பிரபாவின் மனப்போக்குகள் பற்றி தனிப்பட்ட ரீதியில் அறிந்தவர்கள் அவர் எப்போதும் சமரசங்களுக்கு சுலபமாக சம்மதிப்பவர் அல்ல என்றே சொல்லு கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் ஏனைய தமிழ் அமைப்புக்கள் பிரிவினைக் கோரிக்கையை கைவிட்டமை துரோகத்தனமானது என்ற முடிவினையும் பிரபாகரன் வெளியிட்டி ருக்கிறார். எனவே தன்னால் இன்று துரோகம் என்று அழைக்கப்படுவதை நாளை அவர் எப்படி செய்ய முடியும் என்பதும் கேள்விக்குரியதேயாகும்.

எனவே, புலிகள் அமைப்பினர் யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதில் உறுதி கொண்டிருப்பதையே பிரபாவின் பேச்சு உணர்த்தி நிற்கிறது.

அரச தரப்பும் தற்போது புலிகளோடு பேசுவதற்கான ஆர்வத்தைக் கொண்டி ருக்கவில்லை.

கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி முடித்து, அதன்பின்னர் கிழக்கில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பும் நடத்திவிட்டு பின்னர் பிரபாகரனோடு பேசலாம் என்று ஜனாதிபதி சொல்லியிருந்தார். பின்னர் எதைப்பற்றிப் பேசுவது? இப்போதே பேச முடியாத போது வடக்கு-கிழக்கைப் பிரித்துவிட்டு பேசமுடியுமா? புலிகள்தான் முன்வருவார்களா? ஆக, சகல தரப்புக் களிலும் இறுக்கமான போக்கே தலை காட்டுகிறது.

இருக்கும் இடத்தில் இருந்து இறங்கி வந்து, பேச்சுக்கான மேசையில் மனம்திறந்து அமர்ந்துகொள்ள யாரும் தயாராக இல்லை.

இந்த நிலை எப்போது மாறும் என்பதே பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் மக்களின் எதிர்பார்ப்பாகும்! ■

## அதிரடி அய்யாத்துரை



இயக்கங்கள் ஒன்றையொன்று குறைசொல்லத் தொடங்கி பிறகு விழுங்கத் தொடங்கி இப்ப திசைக்கொன்றாக நிற்கிறது பற்றி நண்பர் ஒருவர் கவலைப்பட்டார். மனுசன் ஒரு விசயத்தை வேதனையோட சொன்னது. "கூட்டணி என்று ஆரம்பிச்ச போராட்டம் இப்ப கூட்டே இல்லாத நிலையிலை வந்து நிக்குது." சரியான கருத்துத்தான். கூட்டணியிலை இருந்த கனபேரைக் கூடக் காணேல்ல. சிவா மட்டும்தான் இருக்கிறார். அவையவை தங்கட சோலியலைப் பார்த்துக் கொண்டிருக்க அவர் மட்டும்தான் தன்னாலை முடிஞ்சதை செய்துகொண்டிருக்கிறார். மாவையரையும் பாராட்ட வேணும்: மரம் பழுத்தால் வவ்வால் வரும் எண்ட வண்ணை ஆனந்தன் கோஷ்டி ஜெர்மனியிலை நிக்குது. இவர் அந்தக் கோஷ்டியோடை சேரேல்லை. எண்டாலும் பங்களிப்புகளை யார் மதிக்கிறது! பாருங்கோ, மிஸ்டர் சிவா பாராளுமன்றத்துக்கும் போக முடியேல்லை. ஊருக்கும் போக முடியேல்லை. அவரை முந்தி உடுப்பிட்டிச் சிங்கம் எண்டுதான் சொல்லுறனாங்கள். ஒருவேளை அதுதான் அவரை இரெண்டெழுத்துக்காரர் ஊருக்கை விடுகினமில்லையோ தெரியேல்லை.

எய்ட்ஸ் தடுப்புத்தினம் அட்டகாசமாகக் கொண்டாடியாச்சு. கொண்டாடி என்ன செய்யுறது? எங்கட தலைநகரிலை புறக்கோட்டையிலை போய்ப் பார்த்தா தெரியும். பட்டப்பகலிலை பேரம் நடக்குது. காய்ஞ்ச மாடுகள் கம்பிலை விழுகிற கதை நடக்குது. எய்ட்ஸ் பரவாமை என்ன பதுங்குமோ? இன்னொரு விசயம் இங்கை 118 பேருக்கு எய்ட்ஸாம். அப்ப மிச்சம்? கணக்குபிழை எண்டது என்னுடைய அபிப்பிராயம்.

திருமலையிலை ஒரு பிரபல கல்லூரி. அங்கை போற இந்துப்பிள்ளையள் பொட்டு வைக்கத் தடையாம். பொட்டு வைச்சுக்கொண்டு வந்து கல்லூரி வாசலில் நிண்டு கழற்றிப் போட்டு பிள்ளையள் உள்ளுக்கை போகுது. அதிபர் கோபிப்பாராம். சகல மத உணர்வுகளையும் மதிக்கிறதுதான் பண்பாடு. பொட்டுவைச்சா கோபம் வரும் எண்டு சொல்லுறதும் பிழை. சிலுவை போட்டா எரிச்சல் வரும் எண்டு சொல்லுறதும் பிழை. மெத்தப்படிச்சவைக்கு இது தெரியாதோ?

கிழக்கிலை தேர்தலை தள்ளிப்போட்டிருக்கிறது. சிலருக்கு நல்ல சந்தோசம். அந்தச் சிலர் யார் எண்டு கேட்டா சமூகத்திலை கொஞ்சம் நல்லபேர் இருக்கிற ஆட்கள்தானாம். அந்த நல்ல பேரும் ஏன் இருக்க வேணும் எண்டு இயக்கக்காரர் சிலர் அவையை எலக்சனிலை நிக்கவைக்க வலையை தூக்கியிருக்கினம். விசயம் காதிலை விழுந்த உடனையே அவை காலையிலை கொழும்புக்கு பஸ் எடுத்துப் போட்டினம். இப்ப நிம்மதியாம். திரும்பி ஊருக்கு போயிருக்கினம்.

புதியவர் வடக்கு-கிழக்குக்கு நியமிக்கப்பட்ட செய்தி ஒரு சிலருக்கு வயிற்றிலை புளியைக் கரைச்சிருக்காம். ஆலை இல்லாத ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை எண்ட மாதிரி இருந்த ஆட்கள் சிலர் இப்ப தங்கட கதிரையைப் பற்றி கவலைப்படுறதாக் கேள்வி.

நல்லதைப் பற்றி நினைக்கேக்கை பல்லி மாதிரிச்சிலர் இருக்கினம். எங்கட நாரதர் சொல்லியிருக்கிற ஜெயசூரியா மற்றும் நெவில் பெர்னாண்டோ மாதிரி ஆட்களும் பல்லி மாதிரித்தான். ஆனாப்பாருங்கோ நல்லதிசையிலை ஒலித்து நல்லது சொல்லுற பல்லியளும் இருக்கு. தத்துவராயர் எண்டு ஒரு புலவர் பாடியிருக்கிறார் பாருங்கோ:

"ஓடும் மனம் நம்மினுடன் உறவு செய்யுமாகில்
உள்ளநிலை மெல்ல உணர்வு ஆகிவருமாகில்
நாடும் இடம் எங்கும் அறிவு ஆகிவிடு மாகில்
நல்ல குரல் நல்ல திசை சொல்லு சிறு பல்லி"

பல்லியைப் பார்த்து காதலி சொல்லுறமாதிரி அமைந்த பாட்டுப் பாருங்கோ அது. பல்லிக்கு சொல்லலாம். பல்லியை மாதிரியும் இல்லாத ஆட்களுக்கு எப்படிச் சொல்லுறது? ■

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## உலக ரவுண்ட்அப்


# ஜப்பானில் பிறந்தால் 79வரை தப்பாமல் வாழலாம்
# இந்தியரைவிட இலங்கையர்கள் ஆயுள் கெட்டி!

இலங்கையின் மக்கள் தொகை ஒரு கோடி எழுபத்தேழு இலட்சமாகிறது. ஒரு சதவிகிதம் வருடா வருடம் அதிகரித்துவரும் இவ்வேளையில் எம்மவர்களின்சராசரி வயது 71 ஆகும்.

உலகில் ஜப்பான் நாட்டில் தான் சராசரி 79 வரை வாழ்கின்றனர். இதே வேளை அமெரிக்கரின் சராசரி வயது 76. இந்தியரின் சராசரி வயது 60. சீனர்கள் 69 வயது. பிரித்தானியரின் வயது 75.

100 சதவிகிதம் கல்விகற்றவர்கள் சுவிற்சர்லாந்து, ஜேர்மனி, பிரிட்டன், ஜப்பான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள். அமெரிக்காவில் 95.5 சதவிகிதத்தினரே கல்வி கற்றவர்கள். இலங்கையில் கல்வி கற்றோரின் தொகை 88.5 சதவிகிதமாகும். மாலைதீவில் வாழும் மக்களில் 98.2 சதவிகிதமானவர்கள் கல்வி அறிவு பெற்றவர்கள். இந்தியாவில் கல்விபெற்றவர்களின் எண்ணிக்கை 52.1 சதவிகிதமாகும். பங்களாதேஷிலும் பாகிஸ்தானிலும் ஏறத்தாழ ஒரே அளவினரான மக்களே கல்வி பெற்றவர்களாவர். இவர்களில் முறையே 35.3 சதவிகிதமும் 35 சதவிகிதமுமாகும்.

ஆகக் குறைவாக கல்விகற்றவர்கள் ஆப்கானிஸ்தானிலும் நேபாளத்திலும் வாழ்கின்றனர். இவ்விருநாடுகளிலும் முறையே 29.4 சதவிகிதமும் 26 சதவிகிதமுமாகும்.




பிறந்து ஒரு வயதாவதற்குள் இறந்து பிறக்கும் குழந்தைகள், இலங்கையில் 1000 குழந்தைகளில் 16 குழந்தைகள். இந்தியாவில் 84 குழந்தைகள். அமெரிக்காவில் 9. பிரிட்டன் 7; ஜப்பான் 5. மற்றும் சிங்கப்பூர் 5. ஆகக் கூடுதலாக ஆப்கானிஸ்தானில் 165 குழந்தைகளும் பூட்டானில் 120 குழந்தைகளும் இறக்கின்றன.

மங்கோலியாவின் மக்கள் தொகை ஆக 24 இலட்சம்தான். ஆனால் இங்கு மருத்துவர்களின் தொகையும் சற்று அதிகம்தான். 390 பேருக்கு ஒரு மருத்துவர் என்ற கணக்குப்படி உள்ளனர். ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் 6,162 பேருக்கு ஒரு டாக்டர்தான் உள்ளார். இந்தியாவில் 2,460 பேருக்கு ஒரு டாக்டர் உள்ளார். நேபாளம் 2 கோடி 70 இலட்சம் மக்களைக் கொண்ட நாடு. இங்கு 16,830 பேருக்கு ஒரு டாக்டர் என்ற நிலை இருக்கிறது. கம்போடியாவில் மருத்துவர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. 25,000 பேருக்கு ஒரு டாக்டர்தான் அங்குள்ளார். கென்யா, பப்புவா நியுகினி, பர்மா ஆகிய நாடுகளிலும் டாக்டர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. ஒரு டாக்டரிடம் 10,000த்துக்கும் அதிகமானோர் மருத்துவ உதவி பெற வேண்டியநிலை அந்நாடுகளில் உள்ளது.

சிங்கப்பூர் மற்றும் மக்காவோ ஆகிய நாடுகள் சிறு தீவுகளாக உள்ளமையினால் 100 சதவிகிதமானோர் நகர்ப்புறத்திலேயே வாழ்க்கின்றனர். ஹொங்கொங்கில் 94 சதவிகிதமும் பிரிட்டனில் 89 சதவிகிதமும் ஜேர்மனியில் 85 சதவிகிதமும் நியூஸிலாந்தில் 84 சதவிகிதமும் அவுஸ்திரேலியாவில் 86 சதவிகிதமும் அமெரிக்காவில் 75 சதவிகிதமுமான மக்கள் நகர்ப்புற வாழ்க்கையினையே அனுபவிக்கின்றனர்.

"கிராமங்களே இந்தியாவின் இதயம்" என்று கூறிய மகாத்மாகாந்தி அடிகளின் கூற்றுக்கு ஏற்பவோ என்னவோ அங்கு நகர்ப்புற வாழ்க்கையில் நலங்காணுவோர் தொகை 27 சதவிகிதமே. ஆனால், நமது நாடான இலங்கை மக்களே கிராமப்புற வாழ்க்கையில் அதிகம் சுவைகாண்கின்றனர். ஆக 22 சதவிகிதமானோரே நகரங்களில் வாழ்கின்றனர். ●

# குடும்பக் கட்டுப்பாடு என்ற பேச்சே இல்லை!
# பெற்றுக்கொண்டே இருக்கலாம்–பிரச்சனையே இல்லை!!




குழந்தைகள் எப்போது பிறக்க வேண்டும் என்று குடும்பக் கட்டுப்பாட்டு நிபுணர் செங் மின்மூமி விளக்குகிறார். ஆக இளமையிலும் வேண்டாம் ஆக முதுமையிலும் வேண்டாம். கால இடை வெளி மட்டும் சற்று அதிகமாயிருத்தல் வேண்டும்.

## மலேசியாவில் அதிகம் இருந்தால் சிறப்பு

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் மக்கள் தொகைப் பெருக்கம் பெரும் பிரச்சனையாகி வருகிறது. நாட்டின் வள வளர்ச்சியை மீறி குழந்தைகள் பிறக்கும் வேகமே அதிகமாகி வருகிறது. இதற்காக மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற பிரசாரம் சில சகாப்தங்களாகவே நடைபெற்று வருகிறது.

'நாமிருவர் நமக்கிருவர்' பிரசாரம், 'நாமிருவர் நமக்கொருவர்' என்ற நிலை இப்பொழுது உருவாகிவிட்டது.

ஆனால், மலேசியா நாட்டைப் பொறுத்தவரை மக்கள் தொகைப் பெருக்கத்தைப் பற்றிய கவலையே கிடையாது. ஒரு குடும்பத்தில் எத்தனை குழந்தை பிறந்தாலும் எவரும் பொருட்படுத்துவதில்லை. இருப்பினும் 'இளவயதிலேயே குழந்தை பெறலாகாது' என்றும், 'முதுமையான பின்னர் குழந்தை பெறவேண்டாம்' என்றும் 'ஒரு குழந்தை பிறந்து அடுத்த குழந்தை பிறப்பதற்கிடையில் போதுமான இடைவெளி இருக்க வேண்டும்' என்றும் பிரசாரம் மேற்கொள்ளப் படுகிறது. தாய் மற்றும் குழந்தைகளின் உடல் நலத்தை அனுசரித்தே இத்தகைய பிரசாரம் நடைபெறுகிறதே தவிர பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இல்லை.

மலேசியாவின் பிரதம மந்திரி மகிதிர் முகம்மட் 1984ல் ஓர் அறிக்கையை விடுத்தார். 2100ஆம் ஆண்டளவில் அந்த நாட்டின் மக்கள் தொகை 7 கோடியாக இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். ஆனால் ஏழு வருடங்களின் பின்னர்– 1991ல் பிரதமர் மற்றோர் அறிக்கையினை அவசர அவசரமாக வெளியிட்டார்.

"தற்போது போகும் வேகத்தைப் பார்த்தால் 100 வருடங்களின் பின் எட்டவேண்டிய இலக்கை 50 வருடங்களிலேயே எட்டிவிடுவீர்கள் போலிருக்கிறதே – ஆகவே குழந்தைகள் பெறும் வேகத்தைச் சற்றுக் குறையுங்கள்" என்று கேட்டுக் கொண்டார். (மலேசியாவின் இன்றைய மக்கள் தொகை ஒருகோடி 89 இலட்சம் மட்டுமே. கிட்டத்தட்ட நமது நாட்டு மக்கள் தொகைக்கு இது ஈடாகும். நாட்டின் பரப்பளவு 330,434 சதுர கிலோமீட்டர். இலங்கை 61,610 சதுரகிலோ மீட்டர்)

மலேசியாவைப் பொறுத்தளவில் அது அளவில் சற்றுப் பெரியது. இயற்கை வளம் கூடியது. அதுமட்டுமல்லாமல் அந்நாட்டின் மேற்குக்கரையோரப் பகுதியில்தான் மக்கள் அதிகமாக நெருங்கி வாழ்கின்றனர். கிழக்குக் கரையோரம் நகரங்கள் குறைவு. மத்திய பிரதேசம் காடடர்ந்து கிடக்கிறது. வளமுள்ள பூமி நிறைந்திருப்பதால் காடுகளை அழித்து சீர்திருத்தி எடுத்து ஏராளமான மக்களைக் குடியமர்த்துவதற்கு வாய்ப்புண்டு.

## தடை செய்யப்படும் மாமிசம்

இந்தியாவின் குஜராத் மாநில சட்டசபை பசுவதைத் தடைச் சட்டத்தை நிறைவேற்றியுள்ளது. இதன்படி இறைச்சிக்காக பசுமாட்டைக்கொல்வது தண்டனைக்குரிய குற்றமாகும்.

இந்துக்கள் பசுவை புனிதமான பிராணி என்றுபோற்றுகின்றனர். இதனால் பசுவைக் கொல்வது பாவம் என்று கருதப்படுகிறது.

மத்தியபிரதேஷ் மாநில அரசு ஏற்கனவே பசுவதைச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்துள்ளது. தடையை மீறி பசுவினை வதை செய்பவர்களுக்கு 6 மாதச் சிறைத்தண்டனை அல்லது 1000 ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

## தேடியது நிலக்கரி! கிடைத்தது கப்பல்!!

துருக்கியின் கருங்கடல் பிராந்தியத்தில் கெமெர்பேர்க்கஸ் நகருக்கருகாமையில் ஜேர்மன் கடற்படைக்குச் சொந்தமான யுத்தக் கப்பல் ஒன்றின் பாகங்கள் வெளியெடுக்கப்பட்டன. நிலக்கரிச் சுரங்கத்துக்காக ஆழமற்ற கடலில் ஆய்வு நடத்திய போதே இதனைக் கண்டனர்.

இக்கப்பல் 1902ம் ஆண்டில் கட்டப்பட்டு ஜேர்மன் கடற்படையில் சேவைக்கு விடப்பட்டதாக பெயர்ப்பலகைக் குறிப்புகளிலிருந்து தெரியவருகிறது. 1915ல் முதலாவது உலகப் போரின் போது இக்கப்பல் பிரிட்டிஷ் கடற்படையினால் மூழ்கடிக்கப்பட்டிருக்கலாம் என்று கணக்கிடப்படுகிறது. கிணறு வெட்டப்பூதம் வந்தது போல நிலக்கரிதேடிய போது கப்பலின் பாகங்கள் கிடைத்திருக்கின்றன. பூதம் வந்தால் பிரச்சனை. பழைய கால சின்னங்கள் வந்தால் அகழ்வாராய்ச்சியின் சாதனை.

## ஊர் கோலம் போகும் வேதாளம்!

சீனர்களின் திருவிழாக்களிலும் கொண்டாட்டங்களிலும் 'டிராகன்' எனப்படும் வேதாளத்தின் உருவத்தைக்கொண்டு செல்வார்கள். பயங்கரமாக வாயை அகலமாகப்பிளந்து கொண்டு பாம்பு போன்று உடலை நெளித்துக்கொண்டு செல்வது போல் பாவனை செய்து இவ்வுருவை வீதி தோறும் எடுத்துச் செல்வார்கள்.

ஸ்கொட்லாந்திலுள்ள ஜீலியான் மாகாணத்தில் ரியாஞ்சி ஏரியில் சீன வேதாளம் போன்ற உருவமைப்புக் கொண்ட 'லொச் நெஸ்' என்ற பிராணி அடிக்கடி தென்படுவதாக செய்திகள் வெளியாகின்றன. அந்நாட்டு பண்டைய இலக்கியங்களில் லொச் நெஸ் பிராணிகளும் இடம் பிடித்துள்ளன. இப்பிராணி தரையில் அல்லாமல் நீர் நிலைகளிலே வாழ்வதாகக் கூறப்படுகிறது.

கடந்த செப்ரம்பர் மாதம் லொச் நெஸ் பிராணி இந்த ஏரியில் நீச்சலடித்ததை அங்குள்ள ஒரு ஹோட்டல் ஊழியர்கள் கண்டுள்ளனர். இது இரண்டு மீட்டர் நீளம் கொண்ட கறுப்பு நிறப் பிராணி என்று தெரிவித்துள்ளனர்.




# அகத்தின் அழகை முகத்தில் காணலாம்
# இது ஒரு வித்தியாசமான ஆராய்ச்சி!

**ஆராய்ச்சிகள் பலவகை. அதில் மனிதரின் தோற்றத்தை வைத்து அவர்கள் குணமறிய முற்படும் ஆராய்ச்சியும் ஒருவகை. ஆராய்ச்சிகள் என்பவை முற்றிலும் சரியாகவே முடிவுகள் தரும் என்று கருதிவிடக்கூடாது. அப்படிக்கருதி தவறான முடிவுகளுக்கும் சென்று விடக்கூடாது. இனி இந்த சுவாரசியமான ஆராய்ச்சியை படித்துப் பாருங்கள்.**

ஒருவருடைய முகத்தின் தன்மைகளை வைத்தே ஒருவருடைய குணாதிசயங்களைக் கண்டு கொள்ளலாம். விஞ்ஞான பூர்வமாக ஆய்ந்தறியும் தன்மையினை மேலைத்தேயத்தவர்கள் இப்பொழுதுதான் ஆரம்பித்துள்ளனர். ஆனால் நமது மூதாதையர் உடலின் ஒவ்வொரு அங்கத்தையும் ஆராய்ந்து அவருடைய குணாதிசயங்களைத் தொகுத்துத் தந்துள்ளனர். இதனை 'சாமுத்திரிகா இலட்சணம்' என்று கூறுகின்றனர்.

ஒரு மனிதனின் கண், மூக்கு, வாய் ஆகியவற்றின் அமைப்பு முறைகளை வைத்து அண்மையில் 1000 பேரை விஞ்ஞான ரீதியில் சில ஆய்வாளர்கள் ஆராய்ந்துள்ளனர். டல்லஸ் மாநிலத்தைச் சேர்ந்த உளவியல் ஆய்வாளர் ஆலன் கிறிஃபின் "ஒரு மனிதரின் குணாதிசயங்களை முகம் தெளிவாகக் காட்டிவிடும் என்பது உண்மையே," என்று ஒப்புக்கொண்டுள்ளார்.




அமெரிக்க தேசிய விண்வெளியியல் நிர்வாகத்தின் (NASA) கொள்கை வகுப்பாளர் டாக்டர் மைக்கேல் பாதர், பல சிக்கலான பிரச்சினைகளை உருவாக்கி வருபவர்களுடைய உள்ளக் கிடக்கையினை அறிவதற்கு அவர்களுடைய முகத்தினை வைத்தே கணிப்புக்களை மேற்கொண்டு வெற்றி கண்டதாகக் கூறுகிறார்.

ஆய்வுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயிரம் பேரையும் 5 வருடங்கள் வரை ஆராய்ந்ததில், முகத்தின் ஒவ்வொரு உறுப்பிலிருந்தும் மொத்தம் 68 குணாதிசயங்களை அறிய முடிகிறது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். 92 சதவிகிதமான முடிவுகள் கச்சிதமாகப் பொருத்தியிருப்பதாக இவ்வாய்வுக்குப் பொறுப்பாகவிருந்த நிபுணர் லாறிரீக்ஸ் கூறுகிறார்,

இவர்கள் தெரிவித்துள்ள முக்கியமான குறிப்புகளில் சில:

- **கண்கள்:**

விழித்திரை அகன்று காணப்படுவோர் உள்ளுணர்வுகளை வெளிப்படையாகக் காட்டிவிடுவார்கள். விழித்திரை சிறியதாகவே இருப்பின் இவர்கள் தங்கள் உணர்வுகளை மறைத்துக்கொள்ளுவார்கள். கண் இமையின் ஒரு சிறு பகுதியினை மட்டும் காண்பிப்பவர்கள் தமது மனதைத் திடப்படுத்திக்கொள்ள அதிக காலத்தினை எடுப்பர். கண்ணிமையின் முழுவதையுமே வெளிக் காட்டக்கூடியவர்கள் வெளிப்படையாகவே எதையும் கூறிவிடுவார்கள். எதையும் அய்ந்தோய்ந்து பாராமல் திடீர் முடிவுக்கு வந்துவிடும் தன்மையுடையவர்கள் இவர்கள்.

- **கண்புருவம்:**

சிலருக்கு ஒரே சீராக தட்டையான புருவம் காணப்படும். இவர்களுடைய உணர்வுகள் கூருணர்வுடன் கூடியதாகவும் அமைதியானவையாகவுமே தென்படும்.

புருவம் மத்தியில் கூரியமுனை போல் ஓரளவு செங்குத்தாகத் தோன்றுமானால் இவர் எதிலும் ஒழுங்கான அமைப்புக்களையே விரும்புவார்.

கண்களுக்குமேல் கூடிய இடைவெளிவிட்டு புருவம் அமைந்திருந்தால் பாகுபாடுகள் பார்ப்பவராக இருப்பார். பெரும்பாலும் ஏனையோரிடமிருந்து ஒதுங்கி வாழ விரும்புவார்.

சுலபமாகச் சந்தித்து, நெருக்கமாகப் பழகும் தன்மையுடையவர்களுடைய கண்புருவங்கள் கண்களுக்கு மிக நெருக்கமாகவே காணப்படும்.

- **மூக்கு:**

குமிழ் வடிவான மூக்குடையவர்கள் எது நடந்தாலும் அதனை நன்கு அவதானித்தே முடிவுக்கு வருபவர்களாவர். மூக்கின் மையப்பகுதி நீண்டு உயர்ந்திருக்குமானால் பலருக்கும் பலவித உதவிகளையும் செய்யக்கூடியவர் என்பதைக் காட்டுகிறது.

எதையும் தனக்கு ஆதாயமாகவும் தனக்கு சாதகமாகவும் ஆக்க விரும்பும் ஒருவருடைய மூக்கு உயர்ந்து முன்வளைவினைக் கொண்ட-ரோமானியர்களுடைய மூக்குப் போன்றிருக்கும்.

மூக்கு நுனி நேராக நிமிர்ந்து தென்படுமானால் அவர் எதையும் விபரமாக ஆராயாமல் ஏற்றுக் கொள்ளமாட்டார். எல்லாவற்றையும் தீர்க்கமாக விசாரித்தறியவே முயற்சிப்பார்.

தட்டையான மூக்கினை உடையவர்கள் திறந்த மனதுடையவர்களாக இருப்பர்.

- **அதரங்கள்:**

மெல்லிய மேலுதட்டினை உடையவர்கள் மிகச் சுருக்கமாகவே பேசுவார்கள். தடித்த அடர்த்தியான கீழ் உதட்டினை உடையவர் தனது காலத்தையும் சேவையினையும் தானாகவே முன்வந்து பிறருக்காக செலவிடும் தன்மையுடையவராக இருப்பார்.

மெல்லிய கீழுதட்டினை உடைய ஒருவர் மற்றவர்களின் தூண்டுதலினாலேயே இயங்கக் கூடியவராக இருப்பார். தானாக எதனையும் செய்ய முன்வரமாட்டார்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# வடக்கின் பொறுப்பை ஏற்றிருக்கும் ஜெனரல் ஜெரி!

**வ**ட பகுதிக்கான இராணுவத் தலைமைப் பொறுப்புகளில் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தின் தலைமைப்பீட அதிகாரியான மேஜர் ஜெனரல் ஜெரி டி.சில்வா (Chief of Staff) வடபகுதி இராணுவ நடவடிக்கைகளை நெறிப்படுத்தும் பொறுப்பை ஏற்றுள்ளார்.

மேஜர் ஜெனரல் ஜெரி டி. சில்வா வடபகுதி இராணுவ நடவடிக்கைகளுக்குப் புதியவரல்ல. கடந்த ஆண்டு மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவவின் மரணத்தை யடுத்து, வடப்பகுதியின் தளபதியாக மேஜர் ஜெனரல் ஜெரி டி.. சில்வா பதவியேற்றிருந்தார்.

தொடர்ந்து அவர், சேவை மூப்பின் காரணமாக இராணுவத் தலைமைப்பீட அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்று கொழும்பு வந்திருந்தார்.

ஆனால் அவர் மீண்டும் வடபகுதியின் இராணுவ நடவடிக்கைகளை நெறிப்படுத்தும் பொறுப்பை ஏற்கும் நிர்ப்பந்தத்துக்குள்ளாகி யுள்ளார்.

மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ, மற்றும் அவருடன் கொல்லப்பட்ட வடபகுதிக்கான ஏனைய முக்கிய படை அதிகாரிகளின் மரணங்களையடுத்து வடபகுதிக்கான இராணுவ நடவடிக்கைகளில் தேக்க நிலை தோன்றியிருந்தது.

ஜெனரல் கொப்பேகடுவவின் மரணத் தையடுத்து தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்டிருந்த வெற்றிகரமான சில தாக்குதல்களுக்கும் இத் தேக்க நிலையே முக்கிய காரணமாக விளங்கியிருந்தது.

முல்லைத்தீவின் வெலி ஓயாப்பகுதியில் புலிகள் மேற்கொண்ட திடீர்த் தாக்குதல், பூநகரியில் மேற்கொண்ட 'தவளைப்பாய்ச்சல்' போன்றவற்றில் படையினர் பெருமளவு உயிர்ச்சேதத்துக்கு உள்ளாகியிருந்தனர். கூடவே பெறுமதி மிக்க ஆயுதங்களையும் பெருமளவில் பறிகொடுத்திருந்தனர்.

இது தவிர 'ஒப்பரேஷன் யாழ்தேவி' என்று நாமமிட்டு, பெரும் ஆளணிகளுடன் இராணுவத்தினர் வடபகுதி நோக்கி ஆனையிறவிலிருந்து நகர முற்பட்ட போதுகூட பெருமளவு இழப்புகளுடன் இடைநடுவிலேயே முகாம் திரும்பியிருந்தனர்.

இவ்வாறு இராணுவ நடவடிக்கைகள் வெற்றிகளுக்குப் பதிலாக, பெருமளவில் இழப்புக்களை அண்மைக் காலங்களில் சம்பாதித்துக் கொண்டிருந்ததையடுத்தே வடபகுதியின் இராணுவ நடவடிக்கைகளை நெறிப்படுத்தும் பொறுப்பு மேஜர் ஜெனரல் ஜெரி டி.. சில்வாவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா வடக்கே வடமராட்சி இராணுவ நடவடிக்கையின் போது தனது சகாவான மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவவுடன் சேர்ந்து மோதல்களில் குதித்திருந்தார். அப்போது இந்த இருவரும் பிரிகேடியர் தரத்திலேயே இருந்தனர்.

இந்தியப் படையினரின் வெளியேற்றத்தை யடுத்தே இவர்கள் இருவரும் மேஜர் ஜெனரல்களாகப் பதவி உயர்வு பெற்றதுடன் வடக்கு-கிழக்கின் இராணுவ விடயங்களில் கூடுதல் பொறுப்புக்களையும் பெற்றிருந்தனர்.

தற்போது இராணுவத் தலைமைப்பீட அதிகாரியான மேஜர் ஜெனரல் ஜெரி சில்வாவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் வடபகுதி இராணுவ நடவடிக்கைகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

இவ்வாறு இலங்கை இராணுவத்தின் உப தளபதியாக இருக்கும் மேஜர் ஜெனரல் ஜெரி டி.சில்வாவின் கீழ் வடபகுதி இராணுவ நடவடிக்கைகள் கொண்டு வரப்பட்டுள்ளமை, வடக்கே இராணுவம் கூடுதல் கவனமெடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகியுள்ளதையே புலப்படுத்துவதாக இருக்கின்றது.

மேஜர் ஜெனரல் ஜெரி டி.. சில்வா 1960ம் ஆண்டு ஒரு இளம் படை அதிகாரியாக இராணுவத்தில் சேர்ந்தார். அக்காலங்களில் இராணுவத்தில் சேரும் இளம் அதிகாரிகளுக்கு முற்றிலும் பிரிட்டிஷ் இராணுவ பாரம்பரியங் களுக்கமையவே பயிற்சிகள் வழங்கப்பட்டு வந்தன.

அத்துடன் இலங்கையின் இளம் படை அதிகாரிகள் பிரிட்டனில் உள்ள சான்ட் ஹேர்ஸ்ட் (Sand hurst) இராணுவக் கல்லூரிக்கும் விசேட பயிற்சிகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு அனுப்பப்பட்டவர்களில் ஜெரி.டி.. சில்வாவும் ஒருவர். அத்துடன் இவருடன் டென்ஸில் கொப்பேகடுவவும் சான்ட்ஹேர்ஸ்ட் இராணுவக் கல்லூரியில் ஏக காலத்தில் பயிற்சி பெற்றிருந்தார்.

இலங்கை இராணுவத்தின் தலைமையை ஏற்ற முதலாவது இலங்கையர் மேஜர் ஜெனரல் அன்டன் முத்துக்குமாரு என்பது குறிப்பிடத்தக்கது. இவர் கொழும்புச் செட்டி இனத்தைச் சேர்ந்தவர்.

எனவே பிரிட்டிஷாரின் ஆட்சிக்காலத்தின் பின்னர் அதனைத் தொடர்ந்து வந்த சுமார் 20 வருடகாலப் பகுதிவரை இலங்கை இராணுவம் பெரும்பாலும் 'வைபவரீதியான' தாகவே (Ceremonial army) இருந்து வந்தது.

இராணுவ வீரர்களும் தேசிய விழாக்கள், மற்றும் வெளிநாட்டுத் தலைவர்களின் விஜயங்கள் என்பவற்றின் போதே அணிவகுப்பு மரியாதைகளை வழங்கி மடிப்புக்குலையாத சீருடைகளுடன் இருக்கக் காணப்பட்டனர்.

ஆனால் 1970ம் ஆண்டு தென்னிலங்கையில் இடம் பெற்ற ஜே.வி.பி. கிளர்ச்சியின் போதே இலங்கை இராணுவம் முதல் முறையாக உள்நாட்டில் ஒரு யுத்த நிலைமைக்கு முகங்கொடுத்திருந்தது.

1970ம் ஆண்டில் தோன்றியிருந்த ஜே.வி.பி கிளர்ச்சிவாதம் ஒரு சில மாதங்களிலேயே படையினரால் முறியடிக்கப்பட்டிருந்தது. இராணுவம் தன்னிடமிருந்த படையினர் மற்றும் படைக்கலங்களின் உதவியுடனேயே அன்று அக்கிளர்ச்சியைக் கிள்ளி எறிந்து விட்டிருந்தது.

ஜே.வி.பி நடவடிக்கைகள் 1970ம் ஆண்டு முறியடிக்கப்பட்ட நிலையில் சுமார் பத்து வருடங்களின் பின்னர் வட இலங்கையில் ஆரம்பமான ஆயுதப் போராட்டம் இன்று ஒரு தசாப்தத்தையும் தாண்டியதாகக் காணப்படுகின்றது.

நாட்டின் வடக்கு-கிழக்கைத் தழுவியதாகக் காணப்படும் இந்த ஆயுதப் போராட்டம், பாரியளவில் வியாபித்திருப்பதுடன், இலங்கை இராணுவத்தையும் பெருமளவிலான விஸ்தரிப்புக்குள்ளாக்கி விட்டுள்ளது.

போர்விமானங்கள், யுத்த டாங்கிகள், மற்றும் போர்க்கப்பல்கள், உட்பட கனரக ஆயுதத் தளபாடங்கள் பலவற்றையும் வாங்கிக் குவித்த நிலையில் இலங்கையில் முப்படைகளின் பலம் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்திருக்கக் காணப்படுகின்றது.

முப்படைகளில் காணப்படும் படை வீரர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்தையும் தாண்டியதாகக் காணப்படுகின்றது.

இதே வேளை 1983ம் ஆண்டு ஜூலை மாதம் பதின்மூன்று படைவீரர்களைக் கொன்றதன் மூலம் தனது ஆயுதப் போராட்டத்தை முழு வேகத்துடன் முடுக்கி விட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம், இன்று ஒரு பெரும் போராட்ட சக்தியாக வளர்ச்சியடைந்திருக்கக் காணப்படுகின்றது.

இவ்வாறு ஆயுதப்படையினரும், அவர்களை எதிர்த்து நிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினரும் பல்கிப் பெருகியுள்ள இத்தருணத்திலேயே வடக்கே இராணுவ தலைமை பலப்படுத்தப்பட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா கடந்த ஆண்டு வடபகுதிக்குப் பொறுப்பாக இருந்த சமயம் பத்திரிகையாளர் ஒருவருக்கு வழங்கிய போட்டியில் இராணுவ நடவடிக்கை நிலவரங்கள், அதன் சாதக- பாதக நிலை என்பன குறித்து விரிவான விளக்கத்தை வழங்கியிருந்தார்.

"இராணுவ நடவடிக்கைகள் நீடிப்பதனால் வீண் அழிவுகளே தொடர்ந்து கொண்டிருக்கும். எனவே இந்த அழிவு களைக் கட்டுப்படுத்தி, சமரசத் தீர்வு ஒன்று எட்டப்பட வேண்டுமானால் அரசியல் ரீதியிலான பேச்சுவார்த்தைகளும் இடம் பெற வேண்டும். இராணுவம் நாட்டின் ஒருமைப்பாடு, ஐக்கியம், ஜனநாயகப் பாரம்பரியம் என்பற்றைப் பாதுகாக்கும் வகையிலேயே தனது யுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டிக்கின்றது. அத்துடன் எந்தவொரு நாட்டிலும், நாட்டின் அமைதிக்கு அச்சுறுத்தல் ஏற்படும் போது இராணுவம் செயலில் இறங்குவது இயற்கையே. இந்த வகையில் யுத்தத்தை நீடிப்பதைவிட தவிர்த்துக்கொள்வதே மேலானது. எனவே யுத்தத்தில் ஈடுபடுவோர் பேச்சுவார்த்தை களில் ஈடுபட்டு சமரசத்தீர்வை அடைய முன்வரவேண்டும். இதன் மூலமே இழப்புக்களைத் தவிர்க்கலாம். சமாதானத்தையும் நிலைநாட்டலாம்." என்று ஜெனரல் ஜெரி டி.சில்வா அப்பேட்டியின் போது குறிப்பிட்டிருந்தார்.

அவர் மேலும் விளக்கமளிக்கையில், "இலங்கையில் தற்போது இடம் பெற்றுக் கொண்டிருக்கும் யுத்தம், இன்றைய தலைமுறையினரிடமிருந்து அடுத்த தலைமுறையினரிடம் கைமாறிவிடக்கூடாது. எதிர்காலச் சந்ததியின் அமைதியான வாழ்க்கைக்கு வழியமைக்கும் வகையில், இன்றைய தலைமுறையினராலேயே இன்றைய யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்" என்று வலியுறுத்திக் குறிப்பிட்டிருந்தார்.

> "இன்றைய தலைமுறையிடமிருந்து அடுத்த தலைமுறைக்கு யுத்தம் கைமாறி விடக்கூடாது!"
> மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா



இதே வேளை ஜெனரல் ஜெரி டி.சில்வா புலிகளின் பலத்தையும் நன்கு அறிந்து வைத்திருப்பவராகவே காணப்படுகின்றார்.

தமது பேட்டியின் போது புலிகள் குறித்து கருத்து வெளியிடுகையில், கண்ணி வெடித்தாக்குதல்களில் அவர்கள் மிகுந்த திறமை பெற்றிருப்பதையும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

புலிகளின் கண்ணி வெடித்தாக்குதலுக்கு நல்ல உதாரணமாக, இந்தியப்படையினரின் யுத்த டாங்கியொன்று புலிகளின் கண்ணி வெடியில் எவ்வாறு சிக்கிச் சிதறியிருந்த தெனவும் விபரித்திருந்தார்.

"புலிகளின் தரைக் கண்ணிவெடியில் அகப்பட்ட இந்தியாவின் கனரக யுத்த டாங்கியொன்று அதன் மேற்புறம் (Turret) பிடுங்கி எறியப்பட்ட நிலையில் காணப் பட்டிருந்தது. பிடுங்கி வீசப்பட்ட பகுதி பின்னர் ஆலமரம் ஒன்றின் உச்சியில் தொங்கிக் கொண்டிருக்கக் காணப்பட்டது." என்று மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா குறிப்பிட்டிருந்தார்.

கூடவே அந்த யுத்த டாங்கியை தகர்த்த கண்ணி வெடியின் சிதறிய பாகங்களை இந்திய இராணுவ நிபுணர்கள் சேகரித்துச் சென்றதாகவும், அது போன்ற ஒரு சக்தி வாய்ந்த கண்ணி வெடியைத் தாம் கடந்த காலங்களில் எதிர்கொண்டிருக்கவில்லை என்று அந்த இந்திய இராணுவ நிபுணர்கள் தம்மிடம் கூறியதாகவும் ஜெனரல் ஜெரி சில்வா தமது பேட்டியின்போது குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையில் இந்திய அமைதிப் படையினர் சுமார் இரண்டரை வருடகாலம் நிலை கொண்டிருந்தனர்.

இந்த இரண்டரை வருட காலத்தின்போது அவர்கள் புலிகளின் 'பதுங்கித்தாக்கும் கெரில்லாத் தாக்குதலுக்குள்ளாகி பலத்த இழப்புக்களை அடைந்திருந்தனர்.

இந்திய இராணுவம் உலகில் உள்ள மிகப் பெரிய இராணுவங்களில் ஒன்றாகும். இதன் தளபதிகள் சர்வதேச புகழ் பெற்றவர்களாகவும் விளங்கியிருந்தனர்.

பாகிஸ்தான், சீனா ஆகியவற்றுக்கு எதிராகவும் இந்திய இராணுவம் மோதலில் குதித்திருந்ததுடன், பாகிஸ்தானுடனான யுத்தத்தில் வெற்றிகளையும் பெற்றிருந்தது.

ஆனால் இலங்கையில் அமைதிகாக்கும் படை என்ற ரீதியில் வந்திருந்த போது புலிகளுடன் மோதிக்கொண்டதால் நீண்ட நாட்கள் ஒரு கெரில்லா இயக்கத்துடன் மோதிய அனுவத்தையும் இந்திய இராணுவம் பெற்றிருந்தது.

இலங்கையில் இந்திய இராணுவத்துக்கு தலைமை தாங்கிய லெப்டினன்ட் ஜெனரல்களான திபேந்தர் சிங், சர்தேஷ் பான்டே ஆகியோர் தமது அனுபவங்களை இரு வேறு நூல்களாகவும் எழுதி வெளியிட்டிருந்தனர்.


அந்த இரு நூல்களிலும் புலிகளுடன் தாம் நடத்திய மோதல்களின் விபரங்கள், தமது யுத்த நடவடிக்கைகளின் பெறுபேறுகள், மற்றும் புலிகளின் நடவடிக்கைகள் குறித்த தமது கண்ணோட்டங்கள் என்பவற்றையும் அவர்கள் தமது நூல்களில் வெளியிட்டிருந்தனர்.

தமது இழப்புக்கள், வெற்றிகள் பற்றிய விபரமான தகவல்களுடன், புலிகளது யுத்த தந்திரங்கள் அவற்றை அவர்கள் நடை முறைப்படுத்திய விதம் என்பனவற்றையும் குறிப்பிட்டுள்ள அந்த இந்தியத்தளபதிகள், புலிகளை ஒரு சாதுரியம் மிக்க போராட்டக் குழுவென்றே வர்ணித்திருந்தனர்.

இந்நிலையில் தற்போது இலங்கை இராணுவமும், மறுபுறத்தே தமிழீழ விடுதலைப்புலிகளும் ஈடுபட்டுள்ள யுத்தம், இரு சாராரும் தத்தமது துர்ப்புத்திக்கு இடமளித்த நிலையில் தொடரும் ஓர் அழிவு நடவடிக்கையாகவே காணப்படுகின்றது.

## அலசுவது – இராஜதந்திரி

# ஆட்சியாளர்களால் ஜமாய்த்துவிட முடியாத 'தனிக்காட்டு ராஜா' தொண்டா!



புலிகள் இயக்கத்தலைவர் திரு.வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது 39வது பிறந்த நாளையொட்டி வந்த தமது இயக்கத்தினரின் மாவீரர்தினக் கொண்டாட்டம் குறித்த செய்தியில், பூட்டான் தலைநகரான திம்புவிலிருந்து கொழும்பு வரை தமது இயக்கம் அரசியல் பேச்சுவார்த்தைகளில் பங்கு பற்றியதாகவும், ஆனால் எதுவித பலனும் எற்படவில்லை என்று குறிப்பிட்டிருந்தார்.

1990ம் ஆண்டு இரண்டாவது தடவையாக புலிகள் இயக்கத்தினருக்கும், இலங்கை அரச படையினருக்குமிடையே மோதல்கள் ஆரம்பமானதையடுத்தும் பலதடவைகள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் விருப்பத்தை தமது இயக்கம் வெளியிட்டிருந்ததாகவும், ஆனால் அரசு பேச்சுவார்த்தைகளை நடத்துவதில் ஆர்வங்காட்டவில்லை எனவும் திரு.பிரபாகரன் மேலும் தமது செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

திம்புவில் இருந்து கொழும்புவரைஇடம் பெற்றதாகக் கூறப்படும் பேச்சுவார்த்தைகளில் அரச தரப்பினரும், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினரும், பரஸ்பரம் எவ்வளவு தூரம் ஒருவருக்கொருவர் விசுவாசத்துடன் ஈடுபட்டிருந்தனர் என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது. அத்துடன் நாட்டு மக்கள் இரு சாராரினதும் பேச்சுவார்த்தைகளின் விபரங்களைச் சரிவரப் புரிந்து கொள்ள முடியாத சூழ்நிலையே காணப்பட்டிருந்தது.

இந்நிலையில் திடுதிப்பென இருசாராரும் ஒருவரையொருவர் குற்றஞ்சுமத்திய நிலையில் 1990ம் ஆண்டு மோதலில் குதித்து, இன்றுவரை மூர்க்கத்தனமாக மோதியவர்களாகக் காணப்படுகின்றனர்.

புலிகள் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்த காலம் முதல் இதுவரை காலமும் காத்திரமான, வெளிப்படையான பேச்சு வார்த்தைகளில் பங்கு கொள்ளாதவர்களாகக் காணப்படுகின்றனர்.

இதேவேளை அரச தரப்பினரும் அவர்களை பேச்சுவார்த்தைகளில் பங்கு கொள்ளத் தூண்டுவதற்கான சூழ்நிலைகளை உருவாக்காதவர்களாகவே இருக்கின்றனர்.

தமது உரையில் 1990ம் அண்டுக்குப் பின்னர் பல தடவைகள் பேச்சுவார்த்தைகளில் பங்கு கொள்ளத் தயாராக இருப்பதாக தனது இயக்கம் தெரிவித்து வந்ததாகக் குறிப் பிட்டதுடன், அரச தரப்பினர் புலிகளின் விருப்பத்தை அசட்டை செய்திருந்ததாகவும் திரு வே. பிரபாகரன் தெரிவித்திருந்தார்.

1990ம் அண்டுக்குப் பின்னர் புலிகளுக்கும், அரச படையினருக்கும் இடையிலான யுத்தம் ஆரம்பித்ததையடுத்து அரச தரப்பினர் இனப்பிரச்னை தீர்வு குறித்து மேற்கொண்ட நடவடிக்கைகள் வெறும் கண்துடைப்பாக இருந்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப் பட்டு இனப்பிரச்னைத் தீர்வுக்கான வழிவகைகள் குறித்து ஆராயப்பட்டது. ஆனால் அத்தெரிவுக்குழுவும் எதுவித தீர்வையும் எட்டத் தவறியிருந்தது.

மேலும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினரை அரசியல் ரீதியிலான நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்யும் சூழ்நிலையையும் உருவாக்க அத்தெரிவுக்குழு முன்வந்திருக்கவில்லை.

எனவே 1990ம் ஆண்டுக்குப் பின்னர் புலிகளுடன் பேசுவதில் அரச தரப்பினர் அக்கறை காட்டவில்லை என்ற புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனின் கூற்று மறுக்கப்பட முடியாததாகவே இருக்கின்றது.

இன்று தென்னிலங்கையைப் பொறுத்த வரை ஆளுங்கட்சியினரும், எதிர்க்கட்சிகளும் அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் குதிப்பதற்கான பூர்வாங்க திட்டங்களை வடிவமைப்பதில் அக்கறை செலுத்த ஆரம்பித்துள்ளதையே அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

ஆளுங்கட்சியினருடன் இணைந்திருக்கும் இலங்கை தொழிலாளர் 'காங்கிரஸ் கட்சி தலைவரும், அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மலையக மக்கள் குறித்த கோரிக்கைகள் சிலவற்றை ஆளுங்கட்சியினரிடம் முன்வைத்து, அவற்றை அவர்கள் நிறைவேற்றி வைப்பதற் காக ஒரு மாதகால அவகாசத்தையும் வழங்கியிருந்தார்.

மலையக மக்களின் பலம்மிக்க ஒரு தலைவரான திரு. தொண்டமானின் பக்க பலம் இலங்கையில் ஆட்சியைக் கைப்பற்ற எத்தனிப்பவர்களுக்கு மிகவும் இன்றியமை யாததாகவே இருக்கின்றது.

இந்நிலையில் ஆட்சியாளர்கள் திரு. தொண்டமானின் கோரிக்கைகளுக்கு மிகவும் முக்கியமளிக்க வேண்டியவர்களாகவே காணப்படுகின்றனர். திரு. எஸ்.தொண்டமான் வடக்கு-கிழக்குப் பிரச்னையைத் தீர்த்து வைப்பதில் தமக்கிருந்த விருப்பத்தை வெளியிட்ட போது ஆட்சியாளர்கள் அவருக்கு போதியளவு ஆதரவை வழங்கியிருக்கவில்லை.

அத்துடன் புலிகளுடன் அவர் பேசுவதற்கு விருப்பந் தெரிவித்த போதெல்லாம் அவரது முயற்சிகளை உதாசீனம் செய்யும் பாங்கிலேயே தென்னிலங்கை அரசியல்வாதிகள் நடந்து கொண்டிருந்தனர். ஆனால் தற்போது மலையக மக்கள் குறித்து திரு. தொண்டமான் முன்வைத்துள்ள கோரிக்கைகளைக் கண்டு 'பெட்டிப் பாம்பாக' அடங்கிப் போயுள்ளவர் களாகவே ஆட்சியாளர்கள் காணப்படுகின்றனர்.


தமிழீழ விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு திரு. தொண்டமான் ஒரு 'ஹீரோ, ஆவதை ஆட்சியாளர்கள் தடுத்திருந்தனர்.

ஆனால் மலையக மக்கள் மத்தியில் ஒரு 'தனிக்காட்டு ராஜா'வாக நிற்கும் தொண்டமானை எந்த வகையிலும் ஜமாய்த்து விடமுடியாதவர்களாகவே தற்போது ஆளுங்கட்சியினர் காணப்படுகின்றனர்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# சுய முயற்சி போதும்! வியப்பான அழகு பெறலாம்

# பதின்மூன்று யோசனைகள் – பத்திரப்படுத்துங்கள்!!





அழகுடன் இருக்க வேண்டும் என்று விரும்புவது ஒவ்வொருவருக்குமுள்ள இயற்கை உந்துதலே. இருப்பினும் எல்லோருமே இயற்கை அழகுடன் இருக்கும் பாக்கியம் பெற்றவர்களல்லர். அவர்களும் ஓரளவாவது அழகுடன் திகழ முடியும். அதற்கென சில வழிமுறைகளுண்டு. இவற்றைப் பின்பற்றினால் புதிய உருவினை அடைய முடியும். அழகாய்த் திகழ முடியும்.

1. உங்கள் தோற்றத்தில் மாற்றம் காட்ட வேண்டும் என்று நீங்கள் குறிப்பிட்டுள்ள தினத்துக்கு முதல் நாளன்றே தலை முடியினை நேர்த்தியாகக் கழுவுங்கள். உங்களுக்குப் பொருத்தமான ஷாம்பூ மற்றும் கொண்டிஷனரைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். நன்றாக ஈரத்தை அகற்றிவிங்கள். கேசத்தை அழகாக்க கத்தரிக்க விரும்புவோர் உங்கள் முகத்தோற்றத்துக்கேற்றபடி-கத்தரித்துக்கொள்ளலாம்.
2. படுக்கைக்குச் செல்லுமுன் ஏற்கனவே செய்த முக அலங்காரங்களனைத்தையும் முற்றாக நீக்கிவிட வேண்டும். செயற்கை முக அலங்கார சாதனங்களில் இரசாயனக் கலவைகள் இருக்கும். அவை உங்கள் மென்மையான சருமத்தைப் பாதிக்கக்கூடும்.
3. உங்கள் கரங்கள்சுத்தமாகவும் விரல்கள் நேர்த்தியாகவும் இருத்தல் வேண்டும். நகங்கள் அளவாக வெட்டப்பட்டு அழுக்கற்றிருப்பது அவசியம். நகங்கள் ஒழுங்கான முறையில் அமைந்திரா விட்டால் முக அலங்காரம் எவ்வளவு கச்சிதமாக இருப்பினும் உங்கள் அழகைக் குறைபட வைத்துவிடும். உங்கள் நண்பர்களுடன் நெருங்கி உறவாடும் வேளைகளில் உங்கள் நகங்களை அவர்களுக்குக் காட்ட முடியாமல் கைக்குட்டையில் மறைத்துவிட நேர்ந்தால் எவ்வாறிருக்கும் என்று எண்ணிப் பாருங்கள்.
4. எப்போதும் புன்னகையே பெண்களுக்கு இன்றியமையாத பொன் நகையாகும். நீங்கள் சிரிக்கும் போது உங்கள் பற்களைப் பார்த்து மற்றவர்கள் சிரிக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள். தினசரி இருவேளை பற்களைச் சுத்திகரியுங்கள். ஒவ்வொரு உணவின் பின்னரும் வாயை நன்றாகக் கொப்பளியுங்கள். பல் மருத்துவரிடம் வருடத்துக்கொரு தடவையாவது சென்று பரிசோதித்துக்கொள்ளுங்கள். பற்கள் பளபளப்பாக இருக்க தக்கவழி முறைகளை அவரிடம் கேட்டறிந்து கொள்ளுங்கள்.
5. குளிப்பின்போது உடலின் கெட்ட வாடையினை அகற்றும் வகையில் குளிக்க வேண்டும். சவர்க்கார நுரைக் குளிப்பினை அவ்வப்போது மேற்கொள்ளலாம். அழகு அலங்கார நிலையங்களை நாடி அதிக செலவினை ஏற்படுவதைத் தவிர்த்து, வீட்டிலேயே சில அழகூட்டும் முறைகளை அனுசரிக்கலாம். வீட்டிலுள்ள பாட்டிமாரே நவீன முறைகளை விட பல சிறந்த முறைகளை அனுபவரீதியாக அறிந்து வைத்துள்ளனர். அவர்கள் உதவியினை நாடுங்கள்.
6. தேகப்பயிற்சி ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது. எடை கூடிய உடம்பு பல நோய்களை வலுவில் இழுத்துக்கொள்ளும் தன்மையுடையது. இரத்தக் கொதிப்பு, நீரிழிவு ஆகிய நோய்கள் எடை கூடியவர்களை சீக்கிரம் நாடி ஓடிவரும். உங்கள் அன்றாடக் கடமைகளில் தேகாப்பியாசத்தையும் ஓர் அம்சமாக ஆக்கிக் கொள்ளுங்கள். திறந்தவெளியில் சுத்தமான காற்றைச் சுவாசித்த வண்ணம் 15 நிமிடமாவது தினசரி நடக்க வேண்டும். இதனால் எடை கணிசமாகக் குறைந்துவிடும்.
7. புதுத்தினுசு (ஃபாஷன்) வகைகளை அனுசரிப்பது தவறல்ல. ஆனால் அளவுடன் பின்பற்றியாக வேண்டும். 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்பதுபோல், அதிகமான கோலங்கள், உள்ள அழகையும் சிதைத்து அருவருப் பான கோலங்களைக் காட்டிவிடும் உங்களுக்கேற்ற தினுசினை அளவோடு பின்பற்றுங்கள்.
8. உணவுக் கட்டுப்பாட்டினைக் கடைப் பிடிப்பதில் கவனம் அவசியம். வழமையான உணவினைத் திடீரெனக் கைவிட்டால் உடலிலும் முகத்திலும் மாற்றம் காட்டிவிடும். பலகாலம் பட்டினியால் வாடியவர் என்று கருதத் தூண்டும், திடீர் உணவு குறைப்பினால், பசி அதிகரிக்கும்போது கண்ட கண்டவற்றையெல்லாம் உண்ண வேண்டிவரும். இதனால் எதிர்பார்த்ததுக்கு மாறான விளைவுகளே ஏற்படும். உடனடி நிவாரணிகள் பற்றிய போலி விளம்பரங்களில் ஏமாந்து விடாதீர்கள். மிக முக்கியமானது ஒன்றுண்டு. உங்கள் உணவில் எண்ணெய்ப் பொரியல்களையும் இனிப்பையும் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
9. பகல் வேளைகளில் மிகக் குறைவான முக அலங்காரமே நல்லது. இரவு வேளைகளில் சற்று அதிகமாகவே இருக்கலாம். பகலில் மிகத்தடிப்பமான அலங்காரம் செய்தால் பார்ப்போர் நையாண்டி பண்ணுவார்கள். கண்களுக்கான நிழல் பூச்சுக்கள், புருவம் தீட்டுதல் ஆகியவை இரவு வேளைக்கே பொருந்தும்.
10. முகப் பருக்களையும் கரும்புள்ளிகளையும் விரலால் நசித்து அகற்ற முயலலாகாது. முகத்தில் நீராவி பட விட்டு மென்மையான பஞ்சினால் ஒற்றி எடுக்கலாம்.
11. ஆடை அலங்காரம் மிக முக்கியமானது. ஒரு நல்ல நம்பிக்கையான துணையுடன் ஆடைகளைத் தெரிவு செய்ய வேண்டும். நேர்த்தியாகவும் அமைப்புடையதாகவும் உடைகள் தைக்கப்பட்டிருக்க வேண்டும். கூடுமானவரை பருத்தி உடைகளையே தெரிவு செய்வது நல்லது. செயற்கைத் தயாரிப்புகளால் கெடுதியே அதிகம். உடை அணிவதில் உங்களுக்கென்றொரு தனிப்பாணியினைப் பின்பற்றுங்கள்.
12. நகம் கடிப்பது நல்லதல்ல. பொது இடங்களில் மட்டுமல்ல, தனித்திருக்கும் போதும் இப்பழக்கம் நல்லதல்ல.
13. ஏனைய அழகுள்ளவர்களைப் பார்த்துப் பொறாமைப்படுவதை நிறுத்திவிட வேண்டும். மற்றவர்களைப் பற்றிக் கவலைப்படுவதை விடுத்து உங்கள் அழகினை மேலும் மெருகூட்டும் மார்க்கத்தில் சிரத்தை கொள்ளுங்கள். உங்களிடம் பொதுவாகவுள்ள குறைபாடுகளை வெளிக்காட்டாமல் நிறைவு மட்டுமே வெளிப்படும்படி நடந்து கொள்வது அவசியம்.

## நீங்களும் தைக்கலாம்

இளம் வயதினர்க்குரிய மேற்சட்டை —திரு—




முழுத்துணியின் அகலம்-44"
முழுத்துணியின் நீளம்- 22"

படத்தில் காட்டியுள்ளவாறு துணியை இரண்டாக மடித்து பின், முன் வெவ்வேறு பகுதிகள் வெட்ட வேண்டும். பின் பகுதியில் Aயிலிருந்து 2" உள்நோக்கி Gவரை கழுத்து வெட்டுக. பின் Aயிலிருந்து Hவரை 4"லிருந்து குறிக்க. பின் Bயிலிருந்து உள்நோக்கி Eவரை 2" தோள்மூட்டு வரைக. பின் Eயிலிருந்து 9" அளந்து Fவரை கை வெட்டவும். பின் F இலிருந்து 1" உள்நோக்கி C வரை பக்கப் பொருத்தைக் கீறி வெட்டவும். இதேபோல் முன் பகுதியையும் வெட்டி கழுத்து, கை, பக்கப் பொருத்து என்பவற்றைத் தைக்கலாம்.

## சமைப்போம் சுவைப்போம் —தருவது சுகந்தினி

### கச்சான் பிஸ்கட்

**தேவையானவை**

கோதுமை மா- 3/4கிலோ
கச்சான்- 1 கிலோ
கஜு - 50 கிராம்
ஏலக்காய்- 10
மாஜரின்- 1/4 கிலோ
முட்டை- 1
உப்பு -சிறிதளவு
சீனி சுவைக்கேற்ப-

கோதுமை மாவை இரண்டு மூன்று தடவை அரித்து எடுக்கவும். அதனோடு முட்டை வெள்ளைக்கருவையும் மாஜரினையும் சேர்த்து பிசைந்து சிறிது நேரம் ஊற வைக்கவும். கஜுவை சிறிது துண்டுகளாக வெட்டி கச்சானை பொன்னிறமாக வறுத்து கோதை நீக்கி மாவாக்கவும்.

மேலே கூறிய கலவையுடன் சீனியையும் கச்சானையும் கஜுவையும், ஏலக்காய் பவுடரையும் சேர்த்து குழைக்கவும். மாஜரின் போதாவிடின் மேலும் சிறிதளவு மாஜரீனை சேர்த்து பினைந்து சிறு சிறு உருண்டையாகத் தட்டி பேக் பண்ணவும்.

### வீட்டுக் குறிப்புகள்

* எரியும் மெழுகுவர்த்தியை ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி முன் வையுங்கள். பிரதிபலிப்பான அதிக வெளிச்சம் கிடைக்கும்.
* வாழைப்பழம் அதிகநாள் கெடாமல் இருக்க தோல் நீக்கியபின் மூடிய எவர்சில்வர் பாத்திரத்தில் போட்டு குளிர்சாதனப் பெட்டியில் வைத்து விடவும்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

பதினைந்து கேள்விகள் தரப்படுகின்றன.

இன்று ஐந்து கேள்விகள். அனைத்துக்குமான பதில்களை ஒன்றாகவே சேர்த்து அனுப்புங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி பின்னர் அறிவிக்கப்படும். முரசு 9 முதல் 27 வரை லேடீஸ் ஸ்பெசலில் வந்த விடயங்களை ஒட்டியே கேள்விகள் தரப்படுகின்றன. பதில்களும் அவற்றில்- இருந்தே உங்களால் எழுதப்பட வேண்டும்.

**கேள்விகள்–**

1. ஏறு நெற்றியுடையவர்கள் முடியை எவ்வாறு அமைத்துக்கொள்ள வேண்டும்?
2. உடம்பின் கொழுப்புச் சத்தைக் குறைக்க தினமும் எத்தனை நிமிடங்கள் பயிற்சி செய்ய வேண்டும்?
3. கோடை காலத்தில் உணவில் அதிகமாகச் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டியவை எவை?
4. காரட் சாப்பிட மறுக்கும் குழந்தைகளுக்கு அதனை சாப்பிட வைக்க என்ன செய்யலாம்?
5. வெளியே கடும் வெய்யிலாக இருக்கிறது. வெளியே சென்று வந்த நீங்கள் புத்துணர்ச்சி பெற என்ன செய்யலாம்?

(மீதிக் கேள்விகள் அடுத்த முரசில்)

## லேடீஸ் ஸ்பெசல்

## கர்ப்பவதிகளே கவனியுங்கள்!

குறைப்பிரசவங்களுக்கும் கர்ப்பவதியான தாயின் உள அழுத்தத்துக்கும் தொடர்பிருப்பதாக ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். குறைப்பிரசவத்துக்கு மன அழுத்தம் தான் முக்கியமான காரணம் என்பது அவர்களின் முடிவு.



டென்மார்க்கிலுள்ள ஆர்ஹூஸ் பல்கலைக்கழக மருத்துவபீடம் கர்ப்பவதிகளை வைத்து ஒரு ஆய்வினை மேற்கொண்டது. 16 வாரம் முதல் 30 வார கர்ப்பம் தரித்த தாய்மார்களை வைத்தே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. வீட்டில் அவர்களுக்குள்ள கடமைகள், ஏனைய பிள்ளைகளின் பிரச்சினைகள், கணவனின் நடத்தைகள், தொழிலிலுள்ளவரானால் அலுவலகத்திலுள்ள வேலைப் பழு முதலியவற்றை அடிப்படையாக வைத்தே ஆய்வுக்கான வினாக் கொத்து தயாரிக்கப்பட்டிருந்தது. 16 வாரக் கர்ப்பவதியை விட 30 வார கர்ப்பவதிகளே உள அழுத்தத்தினால் பெரிதும் பாதிப்புக்குளாகின்றனர் என்று கண்டுகொண்டனர்.

முப்பதாவது வாரத்தில் அதிக மன அழுத்தம் ஏற்படுமானால் குழந்தை உரிய காலத்துக்கு முன்னரே பிறந்து விடுகிறது. இவ்வாறு குறைப்பிரசவமாகும். குழந்தைகள் உயிர் பிழைப்பது மிக அரிது. பிறந்ததும் தக்கபடி பரிகாரங்கள் செய்தால் குழந்தையைப் பிழைக்க வைக்க முடியும். பிள்ளை நோஞ்சானாக இருந்த போதிலும் நீண்ட ஆயுளுடன் வாழும். அனால் நோய் எதிர்ப்பு சக்திகள் குறைவாகவும் பலம் குறைந்ததாகவுமே காணப்படும். ஏனையவர்களைப் போல் குறைபாடுகள் அற்று வாழவும் கூடும்.

நமது மூதாதையர்கள் கர்ப்பிணிகள் விடயத்தில் மிகக் கவனமாக இருந்துள்ளனர். அவர்களுக்கு உளப் பாதிப்புகள் ஏற்படாவண்ணம் மிகக் கவனமாகவே சீராட்டுவார்கள். எப்போதும் மகிழ்ச்சியாகவே அவர்களை வைத்திருப்பார்கள்.

## வித்தியாசம்தான்!





என்ன? இரண்டாம் பக்கத்தில் சொன்னது சரிதானே? இது ஒரு வித்தியாசப் படம்தானே.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# த க வ ல் பெ ட் டி

## புகைப்படக் கண்காட்சியில் அதிர்ச்சி! மனிதக் குரங்கின் மாபெரும் சாதனை!!



### கண் பார்த்தது. கை செய்தது. பரிசு கிடைத்தது!

அது தென் ஆபிரிக்கத் தலைநகரான ஜோஹறான்ஸ்பேர்க்.

விளம்பர முகவர் நிலையங்கள் சில ஒன்று சேர்ந்து புகைப்படக் கண்காட்சி ஒன்றை நடத்தின.

விதம் விதமான புகைப்படங்கள். கமராக்களின் உலாக்களில் கண்டுவியந்து கிளிக் கிளிக் செய்யப்பட்ட விதம் விதமான புகைப்படங்கள்.

அவற்றிலே சிறந்த படமாக நடுவர்களால் தெரிவு செய்யப்பட்ட படம் ஒன்றுக்கு 5000 அமெரிக்க டொலர் பரிசு அறிவிக்கப்பட்டது.

பரிசுக்குரியவர் பெயர் பீட் குருகர்.

மேடைக்கு அழைக்கப்பட்டார்.

கரவொலிகள் எழுந்தன. காதைப் பிளந்தன.

ஆனால் பீட் குருகர் பரிசுப் பணத்தைப் பெறத் தயங்கினார்.

ஆனந்த அதிர்ச்சியில் தயக்கம் காட்டுகிறாரோ என்று நினைத்து விழா ஒழுங்கமைப்பாளர்கள் அவரை அமைதிப் படுத்தினார்கள்.

அதன் பின்னரும் தயங்கினார். பின்னர் வாய்திறந்தார்.

இந்தப் பரிசு தனக்குச் சேர வேண்டியதல்ல, என பீட் குருகர் கூறினார்.

சரிதான், யாரோ எடுத்த புகைப்படத்தை தனது கைவரிசை என்று சொல்லிக் கொண்டு வந்து வைத்துவிட்டார் என்று எல்லோரும் நினைத்தனர்.

நம்மூரில் என்றால், திருவிளையாடல் படத்தில் வரும் தருமியின் ஸ்டைலில் வந்திருக்கிறார். பரிசுப் பண ஆசை என்று நினைத்திருப்போம்.

பீட் குருகர் அடுத்துச் சொன்ன தகவல் அரங்கில் இருந்தோரை ஆச்சரியக்கடலில் தூக்கிப் போட்டுவிட்டது. சிலர் நம்ப மறுத்தனர்.

அப்படி என்னதான் சொன்னார் அவர்? அந்த சிறந்த படத்தை கிளிக் செய்தது தான் வளர்க்கும் ஏப்-இன மனிதக் குரங்குதான் என்று சொன்னார்.

அடுத்த நிமிடமே அந்த ஏப்-மனிதக் குரங்கை மேடைக்கு அழைத்து அறிமுகம் செய்துவைத்தார்.

சந்தேகப் பிராணிகள் சிலர் அப்போதும் நம்பவில்லை.

குருகர் தன்னிடமிருந்த கமராவை குரங்கின் கழுத்தில் மாட்டிவிட்டார்.

"பிளாட்டோ" என்ற பெயருடைய அந்த மனிதக் குரங்கு கழுத்தில் மாட்டப்பட்ட கமராவை கச்சிதமாகக் கையில் ஏந்தியது. நன்கு பயிற்சி பெற்ற படப்பிடிப்பாளர் போன்று சுற்றிலும் நின்றவர்களை ஒரு 'கிளிக்'.

பின்னர் அரங்கை பல கோணங்களிலும் கிளிக். கிளிக்.

பிலிம் சுருள் முடிவடைந்ததும் கழுத்தில் கிடந்த கமராவை ஸ்ரைலாகக் கழற்றி பீட் குருகரிடம் கொடுத்தது.

நல்ல பிள்ளையாகப் போய் ஒரு புறத்தில் நின்று கொண்டது.

போட்டியை ஏற்பாடு செய்தவர்களும் ஏனையோரும், பரிசுக்குரிய படத்தை எடுத்தது பிளாட்டோ என்ற மனிதக் குரங்குதான் என்பதை ஒப்புக்கொண்டனர். பரிசுப் பணம் குருகரிடம் ஒப்படைக்கப்பட்டது.



மனிதக் குரங்கால் படம் பிடிக்கப்பட்ட மனிதக் குரங்கு.

பிளாட்டோவையும் அழைத்துக்கொண்டு வெளியே செல்லும் போது கமராவையும் கொண்டு செல்வது குருகரின் பழக்கம்.

இவ்வேளைகளில் குருகர் கமராவை எவ்வாறு கையாளுகிறார் என்பதனை பிளாட்டோ நன்கு அவதானிக்குமாம்.

தான் வீட்டிலில்லாத போது பிளாட்டோ பிலிமுடன் உள்ள கமராவை எடுத்து படம் பிடிக்கப் பழகிக் கொண்டது என்று குருகர் சொல்கிறார்.

ஒரு தடவை ஒரு 'பிலிம்ரோலை' கமராவில் போட்டு, சில படங்களை எடுத்துவிட்டு அப்படியே விட்டு விட்டுச் சென்றுள்ளார். அவர் திரும்பி வந்து கமராவைப் பார்த்த போது அதில் முழுப்படங்களும் எடுக்கப் பட்டிருந்தன. அங்கு வேறு யாரும் இருக்க வில்லை. ஓர் ஒதுக்குப்புறமான பண்ணையில்தான் அவர் வசித்து வந்தார். அவருக்குத் துணையாக இரு குரங்குகளை வளர்த்து வந்தார். ஒன்று பிளாட்டோ. மற்றது அதன் இணைக்குரங்கு.

வீடு திரும்பிய குருகர் கமராவைக் கையிலெடுத்ததைக் கண்ட பிளாட்டோ ஓடி ஒழிந்துக் கொண்டதாம். பயமும் குறும்புத்தனமும் கொண்டதாக நடந்து கொண்டிருந்ததைப் பார்த்து, கமராவுடன் அது தான் விளையாடியிருக்க வேண்டும் என்று எண்ணினார். அதே பிலிமை தனது இருட்டறையில் கழுவிப்பார்த்த போது அவருக்கு சொல்ல முடியாத வியப்பு ஏற்பட்டதாம். அன்று மோட்டார் வண்டியிலிருந்த வண்ணம் பண்ணையை விட்டு வெளியேறுவதையே பல படங்களில் பிளாட்டோ எடுத்திருக்கிறது. வேறு பல காட்சிகளும் மிகச் சிறப்பாகப் படமாக்கப் பட்டிருந்தன.



ஏப் மனிதக் குரங்கை வளர்த்துவரும் குருகன்

இதன் பிறகு படப்பிடிப்பின் பல நுணுக்கங்களையும் குரங்கிற்குச் சொல்லிக்கொடுத்தார் குருகர். அதன்பின்னர் தானாகவே தனது இணைக் குரங்கினை பிளாட்டோ எடுத்த படம்தான் முதல் பரிசைத் தட்டிச் சென்றது.

பிளாட்டோ பிடித்த பல படங்களைக் கொண்ட கண்காட்சி ஜோஹறான்ஸ்பேர்கில் நடைபெற்றுள்ளது. தென் ஆபிரிக்காவின் பல நகரங்களில் மட்டுமல்லாமல் ஐரோப்பிய நாடுகளிலும் கண்காட்சி நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப் படுகின்றன.

போகிற போக்கைப் பார்க்கும் போது மனிதர்கள் செய்வதற்கு ஒரு சாதனை கூட மிஞ்சாது போல் இருக்கிறது. ●

## சின்னதாய் ஒரு தாய்!

### பெற்ற பிள்ளைகளைத் தூக்கமுடியவில்லை

சூ மக்கென்ஸிக்கு வயது 32. மணம் முடித்து இரு குழந்தைகளுக்குத் தாயாகி விட்டாள். மகனுக்கு வயது 14. மகளுக்கு-9. இவர்கள் இருவரும் சாதாரண பிள்ளைகளைப் போல் வயதுக்கேற்ற வளர்ச்சியுடனும் தேகாரோக்கியத்துடனும் வாழ்ந்து வருகின்றனர்.

ஆனால் தாய் சூ இன்னும் 7 வயதுப் பெண் பிள்ளை போன்றே உள்ளாள். உயரம் ஆக 46 அங்குலம் மட்டுமே. எடை 94 இறாத்தல்.

சூ தன்னுடைய ஏழாவது வயது வரை சாதாரண பிள்ளைகளைப் போல் வளர்ந்து வந்தாள். ஆனால் 7வது வயதின் பின்னர் இவளுடைய வளர்ச்சி திடீரெனத் தடைப்பட்டுவிட்டது. பரிசோதனை செய்த மருத்துவர்கள் சூவினுடைய வளர்ச்சிக்குரிய சுரபிகள் செயற்படாமல் விட்டிருப்பதைக் கண்டனர். பலவகை மருந்துகள் கொடுத்தும் சுரபிகள் செயற்பட முடியாமற் போய்விட்டன.

சூ உரிய காலத்தில் பூப்பெய்தினாள். ஓர் அலுவலகத்தில் பணியினையும் ஏற்றுக்கொண்டாள். அந்த அலுவலகத்திற்கு வருவோரெல்லாம் சூவைப் பார்த்து "நீ ஏன் இன்று பள்ளிக்கூடம் செல்லவில்லை?" என்று கேட்க ஆரம்பித்து விடுவார்களாம்.



திருமணம் முடித்தார். இருபிள்ளைகளும் 'சிசோரியன்' அறுவை சிகிச்சையின் மூலமே பிறந்தன.

தனது குழந்தைகளைத் தன் கையால் தூக்கி வைத்துக்கொள்ளவே இந்தத் தாயால் முடியவில்லை.

தனது பிள்ளைகளுடன் எங்காவது வெளியே செல்வதை சூ தவிர்த்துக் கொண்டாள்.

அவளது பிள்ளைகளின் தங்கையாகவே சூவை பார்ப்போர் கருதி, "உங்கள் மூவருடைய அம்மா எங்கே" என்றும் கேட்டு விடுவார்களாம், அப்போதெல்லாம் தன் கண்களில் ஊற்றெடுக்கும் கண்ணீரைக் கட்டுப்படுத்துவது மிகவும் சிரமமாக இருக்கிறது என்று சூ வேதனைப்படுகிறார்.

இத்தகைய கேள்விகளுக்கு இடம் தராமல் இருப்பதற்காகவே சூ தனது குழந்தைகளுடன் வெளியே செல்வதைத் தவிர்த்துக் கொண்டாள்.

"குழந்தைகளைப் பெற்றெடுத்தாலும் அவற்றைத் தூக்கி அணைத்து மகிழும் பாக்கியம் எனக்குக் கிட்டவில்லை" என்று வேதனையுடன் கூறுகிறார் சூ. இதே வேளை தான் குழந்தை முகத்துடனும் அளவில் சிறியவளாக இருப்பதனாலும் பல நன்மைகளும் ஏற்பட்டுள்ளன என்று ஒப்புக்கொள்ளுகிறார்.

"சில திரைப்படங்களில் நடித்திருக்கிறேன். டிஸ்னிலாண்டிலும் சில பணிகள் எனக்குத் தரப்பட்டன. எல்லாவற்றுக்கும் மேலாக எனக்கான செலவுகள் மிகக் குறைவே. உடைகளுக்கோ பாதணிகளுக்கோ நான் அதிக பணம் செலவிட வேண்டியதில்லை. என்னுடைய அளவுக்கான சட்டைகளும் பாதணிகளும் விலை மிகவும் குறைவு," என்கிறார் சூ. ஏற்கனவே கணவனை விவாகரத்துப் பண்ணிவிட்ட சூ, மீண்டும் மணம் முடிக்க நாட்டம் கொண்டுள்ளார்.

ஜப்பான் தொலைக் காட்சியில் சூவின் பேட்டி இடம் பெற்றது. பார்த்தவர்கள் கண்கலங்கினார்கள். உண்மையாகவே சோகம் தான்.

என்றாலும் சூ மனமுடைந்து போகாமல் தைரியத்தோடு இருக்கிறார்.

வாழ்க்கை வாழ்வதற்கே என்பதை சூ அறிந்து வைத்திருக்கிறார். ■



## அட்டகாசமான கத்தரிப்பாளர்!

இவை புகையிரதப் பெட்டிகளல்ல. 'டேவிட்ஸ்பூன்' எனும் தோட்டக்கலை நிபுணர்களால் மரம், செடிகளால் ஆக்கப்பட்ட வீடுதான் இது. அட மரத்திலே மனை வண்ணம் கண்டவனோ!

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# மாட்டிக் கொண்டார் விஜயசாந்தி மார்க்கெட் மட்டும் குறையவில்லை!

தெலுங்கில் பெண் நடிகைகள் தங்கள் சூப்பர் ஸ்டாராக வயதையும், சொந்த வாழ்க்கை இருப்பவர் விஜய சாந்தி.

யையும் மறைப்பது ஒன்றும் இரகசியமானதல்ல. விஜயசாந்தியும் அப்படித்தான்.



படைத்தவனே அசந்து விட்டான் போ!

விஜயசாந்தி

தனக்கு இன்னும் திருமணமாகவில்லை என்று ஒரு பிரபல பத்திரிகைக்கு அவர் பேட்டியளித்திருந்தார்.

பத்திரிகையாளர்கள் விடுவார்களோ! ஓடித்திரிந்து தேடிப்பிடித்து விஜயசாந்தியின் திருமண சான்றிதழை வெளியிட்டு விட்டனர். 1988ல் (19.1.88) விஜயசாந்திக்குத் திருமணம் நடந்துவிட்டது. கணவர் பெயர் எம். வி.எஸ்.பிரசாத்.

அந்தத் திருமண சான்றிதழ்தான் இங்கு வெளியிடப்பட்டுள்ளது.

என்றாலும் திருமணச் செய்தி விஜயசாந்தியின் செல்வாக்கைப் பாதிக்கவில்லை. தெலுங்கில் அவர் நம்பர் 1 தான். இப்போதைக்கு அசைக்க முடியாது.

திறமை, அழகு, அதிஷ்டம் மூன்றும் அவர் பக்கம் இருக்கிறது. ■



## பார்க்காதே அப்படி! தெரிந்தப்பின் படுதோல்வி நிச்சயம்!



## ஆடுவதை நிறுத்தினால்

ரகுவரன் ஒரு அருமையான நடிகர். என்ன ஒரு பலவீனம், நன்றாகக் குடிப்பார். குடித்து விட்டு பிறகு வம்புகள். அதனால் வாய்ப்புகள் வந்தும் போன கதை.

இப்போது மீண்டும் தன்னை புதுப்பித்துக்கொள்ளத் துடிக்கிறார்.

ஆடுவதை நிறுத்தினால் அவர் மீண்டும் ஒரு ரவுண்ட் வரலாம். வாய்ப்புகள் வரும் என்கிறது சினிமா உலக வட்டாரம்.

## விசித்ராவுக்கு விருப்பமானவர்

மாடிப்பு அமசாவாக அறிமுகமாகி இன்று விசித்ரா வாகிவிட்டாலும் கவர்ச்சி நடிப்பில் இருந்து மாற முடியவில்லை என்று வருத்தம்.

விசித்ரா பானுப்பிரியாவின் ரசிகை. பானுப்பிரியாவைப் போல கவர்ச்சியையும் சீரியஸையும் இணைத்து நடிக்க ஆசை என்கிறார் விசித்ரா. அவர் ஆசைப்பட்டால் போதுமோ? தயாரிப்பாளர்களும் உடன்பட வேண்டுமே!

## என்றும் நன்றியுடன்!

தெலுங்கு தமிழ் படங்களில் தான் பேசிய வசனங்களை மறக்காமல் வைத்திருக்கிறார் நெப்போலியன்.

இப்போது கேட்டாலும் உடனே ஒப்புவிப்பார். அது மட்டுமல்ல மலையாளம், தெலுங்கு படங்களில் பேசிய வசனங்களையும் மனப்பாடம் செய்து வைத்திருக்கிறார். இத்தனைக்கும் அவருக்கு மலையாளம், தெலுங்கு மொழிகள் தெரியாது.

தற்போது திரைக்கு வந்துள்ள 'சீவலப்பேரி பாண்டி' படத்தில் ராதிகாவோடு நடித்துள்ளார். தரமான பாத்திரம் அமைந்ததில் பெருமைப்படுகிறார். அவர் எப்போதும் நன்றியுடன் நினைவு கூர்வது பாரதிராஜாவை.

## கவுண்டமணிக்கு விளக்குமாற்றுப் பூசை!

எவர்சில்வர் குடங்கள் முதலில் வந்து விழுந்தன. அடுத்தது தட்டு முட்டுச் சாமான்கள். எல்லாம் கவுண்டமணி மீதுதான் வந்து விழுந்தன.

எறிவதற்கு இனி எதுவும் இல்லை என்ற நிலையில் கையில் விளக்குமாறுடன் வந்தார் விஜயசந்திரிகா. இன்னொரு பக்கத்தில் இருந்து கையில் உருட்டைக் கட்டையோடு வந்தார் பத்மா. கவுண்டமணி பாடு திண்டாட்டம். வந்தவர்கள் இருவரும் அவரது மனைவிகள்.

இப்படியொரு காட்சி சத்தியவான் படத்திற்காக படமாக்கப்பட்டது. சத்தியவான் முழுக்க முழுக்க ஒரு நகைச்சுவை அதிரடிப் படம். முரளி முதன் முதலாக நகைச்சுவைக் கதாநாயகனாக நடிக்கிறார். ஜோடி கௌதமி. கவுண்டமணியோடு செந்தில் குமரிமுத்து, வெண்ணிற ஆடை மூர்த்தி என்று ஒரு பட்டாளமே இருக்கிறது. நகைச்சுவைக்கோ பஞ்சமில்லை.

## ரோஜாவின் கேள்வி!

தெலுங்கில் ரோஜா படு கவர்ச்சியாக நடிப்பது அறிந்த சமாச்சாரம்.

அதுபற்றிக் கேட்டால் ரோஜா மறுக்கிறார்.

"எனக்கு கவர்ச்சி நடிகை என்று முத்திரை குத்திவிட்டார்கள். எனது முதல் படமான செம்பருத்தியிலும், இரண்டாவது படமான சூரியனிலும் எப்படி நடித்தேனோ அதே போலக் கவர்ச்சியாகத் தான் தெலுங்கில நடிக்கிறேன். படு கவர்ச்சி என்றால் என்ன? அதற்கு என்று தனி அர்த்தம் உண்டா? எனக்குத் தெரியாது. என்கிறார் ரோஜா.

## எளிமையே வெற்றியின் இரகசியம்

மம்முட்டி தமிழ் படவுலகிலும் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளார்.

இப்போது திரைக்கு வந்துள்ள படம் "கிளிப்பேச்சு கேட்க வா" அடுத்து வரப்போவது மக்களாட்சி. பிரமாண்டமாக உருவாகி வருவதால் தமிழில் மேலும் வாய்ப்புக்கள் குவியலாம்.

ஆனாலும் மலையாளப்படவுலகை விட்டு மம்முட்டி விலகமாட்டார். அங்கு அவரும் சூப்பர் ஸ்டார்.

எளிமை, பழகுவதற்கு இனிமை, தலைக்கனம் இன்மை என்பவைதான் மம்முட்டியின் வெற்றிக்கு ஊன்றுகோல்கள். இப்போதும் பீடிதான் புகைக்கிறார்.

## தண்ணீராய் பாயும் பணம்!

இந்து படத்தில் பிரபுதேவா பங்கேற்கும் 'மெட்ரோ சானல்' என்ற பாடல் காட்சியில் பணம் தண்ணீராய் பாய்ந்திருக்கிறது. 100 உடைகள் மாற்றப்பட்டன. 200க்கும் மேற்பட்ட நடனக்கலைஞர்கள் பங்கேற்றனர்.

விஜயகாந்த் நடிக்கும் பிவாசு இயக்கும் சேதுபதி ஐ.பி.எஸ் படத்திற்காக ஒரு பாடல்காட்சி. 'இடி இடிக்குது இடி இடிக்குது' ஆரம்ப பாடல்வரிகள் அதுதான்.

அந்தப் பாடல் காட்சியில் மீனா, காவேரி, டிஸ்கோ சாந்தி ஆகியோர் ஆடினார்கள். நூறு துணை நடிக, நடிகைகள் பங்கு கொண்டனர்.

நலல் செல்வு.



பூ மீது மெல்லச் சாய்ந்தது பூ முகம்!

## இப்போதும் இளமை!

[illegible] தமிழ் நடிகர்களில் முத்தவர் நம்பியார். இப்போதும் கட்டுக்கோப்பான உடல். என்றும் இளமை. [illegible] காட்சிகளில் தெரிந்த சுறுசுறுப்பு இப்போதும் அப்படியே இருக்கிறது.

[illegible] ஒரு வேலை செய்திருக்கிறார்.

[illegible] படத்தில் [illegible] சண்டைக்காட்சிகளில் நம்பியாரை நடிக்க வைத்துள்ளார். [illegible]

[illegible] ஆரம்பித்த தலைமுறை படத்தில் படப்பிடிப்புக்கள் நீண்ட இடைவெளியின் பின் மீண்டும் ஆரம்பித்துள்ளன. [illegible]

## மீராவின் கனவு!

[illegible] மீரா [illegible] அப்போது [illegible] இப்போது [illegible] போன்ற படங்களில் நடித்துவிட்டார். [illegible] பார்த்துவிட்டு [illegible] கதாநாயகி ஆக்கிக் காட்டுகிறேன் என்று [illegible].

[illegible] கதாநாயகிக் கனவு!

## அங்கு போய் முன்னால்!

வசந்தகாலப் பறவைகள், மௌனமொழி, கஜானா கனவுகள் போன்ற படங்களில் நடித்தவர் ஷாலி. திறமை இருந்தும் தமிழில் வாய்ப்புக்கள் வரவில்லை.

பொறுத்துப் பார்த்துவிட்டு கன்னடப் படவுலகம் சென்றார். வா என்று வரவேற்றது கன்னட திரையுலகம். இப்போது அங்கே முன்னணியில் இருக்கிறார்.



ஷாலி

## ஊர்வசியின் நம்பிக்கை!

முந்தானை முடிச்சுப் படத்தில் ஒரு கலக்குக் கலக்கியவர் நடிகை ஊர்வசி.

பின்னர் மலையாள படவுலகில் தாராளமான கவர்ச்சி காட்டி அங்கேயே நிலைத்துவிட நினைத்தார்.

இப்போது கமலின் சொந்தப் படமான 'மகளிர் மட்டும்' படத்தில் ஊர்வசியும் உண்டு.

முந்தானை முடிச்சைப் போலவே மகளிர் மட்டும் படமும் தனக்கு நல்ல புகழைத்தேடித்தரும் என்கிறார் ஊர்வசி.

கமல் தன்னை நினைவில் வைத்திருந்து சந்தர்ப்பம் கொடுத்ததை நினைத்து சந்தோஷப்படுகிறார்.

முன்னர் போல் இல்லை, உடம்பில் தசை போட்டிருக்கிறது.

திறமையை நிரூபித்து தமிழில் மீண்டும் ஒரு இடத்தைப் பிடிக்க நினைக்கிறார். அநேகமாக கனவு பலிக்காது. ●

## செஞ்சரி போட ரெடி!

சொந்தச் தயாரிப்பில் இறங்கி கையைச் சுட்டுக்கொள்வது நடிகைகளின் ராசி.


அந்த வரிசையில் பானுப்பிரியாவும் ஏற்கனவே சேர்ந்துவிட்டார்.

அதன்பின்னரும் பானு கலங்கிப் போகவில்லை. வெற்றிப் படம் ஒன்றை தயாரித்துக்காட்டுவேன் என்கிறார். பிரபல முன்னணி நடிகர் ஒருவரிடம் தனது சொந்தப்படத்தில் நடிக்குமாறு கோரிக்கை விட்டுள்ளார்.

பானுப்பிரியா விரைவில் செஞ்சரி போடப் போகிறார். இன்னும் இரு படங்களில் நடித்து முடித்தால் போதும் நூறு படங்களில் நடித்த பெருமை சேரும்.

பானுப்பிரியா பிரபுவோடு நடித்த உழவன் படம் திரைக்கு வந்துவிட்டது. அந்த படத்தின் வெற்றியைப் பானுப்பிரியாவின் மார்கெட் நிலவரம் அமையும்.

www.padippakam.com



குரு சிஷ்யன் மூலம் அறிமுகமாகி பிரபலமான நாயகி கௌதமி.
இப்போது வீட்டில் இருக்கிறார். ரஜனி அவருக்கு பலமாய் சிபாரிசு செய்வதாக முன்னர் பேசப்பட்டது. பின்னர் அதில் உண்மை இல்லை என்று தெரிந்தது.
தனது திறமைக்கு ஏற்ற பாத்திரங்கள் தரப்படவில்லை என்பது கௌதமியின் வருத்தம்.
என்னிடம் எது இல்லை? அழகு இல்லையா? திறமை இல்லையா? என்று காட்டமாகக் கேட்கிறார்.
அவர் கேட்டது காதில் விழுந்தது டி. ராஜேந்தருக்கு மட்டும் தான். ஒரு வசந்தகீதம் படத்தில் டி. ராஜேந்திரின் ஜோடி கௌதமி.
அந்தப் படம் தன்னைப் பற்றி மீண்டும் பேசவைக்கும் என்கிறார் கௌதமி. ஓய்வாக இருந்தாலும் உடலில் தசை போடாமல் பார்த்துக் கொள்கிறார்.

## மினி சினி

★ தொலைக்காட்சிக்காக 'பெண்' என்னும் தொடரை இயக்கியவர் சுஹாசினி மணிரத்தினம். இந்த நாடகம் பலரின் ஏகோபித்த பாராட்டுகளைப் பெற்றது. அத்துடன் நம் நாட்டிலும் ஒளிபரப்பப்பட்டது. தற்போது பெண் தொடரின் இரண்டாவது பாகத்தை சுஹாசினி எடுக்கப் போகிறார்.

★ சிவகுமார், அன்றுபோல் இன்றும் இளமையுடன் இருப்பதற்குக் காரணம் அவர் தினமும் யோகாசனம் செய்து வருவதுதானாம்.

★ பூர்ணிமா பாக்கியராஜ், பெண்கள் அணிந்து கொள்ளக் கூடிய துணிக் கடையொன்றை ஆரம்பித்துள்ளார். இங்கு அவரே டிசைன் பண்ணிய உடைகளும் இருக்கிறதாம்.

★ எஜமானுக்குப் பின்னர் நடிகை மீனா, ராஜகுமாரன், சேதுபதி ஐ.பி.எஸ். உட்பட நான்கு தமிழ்ப்படங்களில் கதாநாயகியாக நடித்து வருகிறார்.

★ நீண்ட இடைவெளிக்குப் பின்னர் தெலுங்குப் படமொன்றில் நடிக்கவுள்ளார் ஸ்ரீதேவி. இதில் இவருக்கு ஜோடியாக சுப்ரீம் ஸ்டார் சிரஞ்சீவி நடிக்கிறார்.

★ ரமேஷ் அரவிந்த்- சிவரஞ்சனி நடித்துள்ள புதியதென்றல் படத்தில் முதலில் ஆறுபாடல்கள் பதிவு செய்யப்பட்டன. பின்னர் புதிய பாடல் 'நிவேதா பாடிய ஆசை முகம் மறந்து போச்சே' என்ற பாடலையும் சேர்த்துள்ளனர்.

★ கமலின் மகளிர் மட்டும் படத்தில் தயாரிப்பாளர் என்தானது ஒரு தமிழ்ப் பித்தராக நடிக்கின்றார். முதலில் இந்த வேடத்தில் வைரமுத்து நடிப்பதாக இருந்தது. ஏனோ தெரியவில்லை, பின்னர் இந்த எண்ணம் கைவிடப்பட்டது.

★ மோகன்லாலுடன் நடித்த தேவாசுரம் படத்தை அடுத்து நெப்போலியன், மலையாளத்தின் பிரபல இயக்குநர் சுரேஷ் உன்னி இயக்கத்தில் ஒரு படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார்.

## பரஸ்பர மரியாதை! கமலும்- ரஜனியும்!!

கமல்-ரஜனி. இருவரும் இன்று தமிழ் திரையுலகின் முடி சூடா மன்னர்கள்.
மூன்றெழுத்துக்கும் தமிழ் திரை உலகுக்கும் ஒரு ராசி.
முன்னர்- முடிசூடா மன்னர்கள், எம்.ஜி.ஆர், சிவாஜி, ஜெமினி.
இப்போது கமல்- ரஜனி. தமிழ் திரையுலகும், தமிழ் பேசும் ரசிகர்களும் மூன்றெழுத்து நாயகர்களை உயரத்தில் தூக்கி வைத்துவிடுவது ஆச்சரியமான உண்மை.
கமலும், ரஜனியும் ஒருவரை ஒருவர் மதிக்கிறார்கள். பரஸ்பரம் தமது பலம், பலவீனம் பற்றி உணர்ந்திருக்கிறார்கள்.
அண்மையில் ரஜனி பற்றி கமல் சொல்லியிருக்கிறார்.
"ரஜனிகாந்த் ஒரு ஸ்டார் நடிகர். புத்திசாலித்தனமான, வெற்றிகரமான ஸ்டாராக அவர் இருக்கிறார்.
இந்தியாவில் நாம் பெற்றுள்ள சிறந்த ஸ்டார் நடிகர்களில் ரஜனியும் ஒருவர்." இது கமலின் கருத்து.
சரி கமல் பற்றி ரஜனி என்ன சொல்லி இருக்கிறார்.
"கமல் ஒரு அற்புதமான நடிகர். அவரது நடிப்பைப் பார்த்து நான் அசந்து போயிருக்கிறேன்."
பரஸ்பரம் திறமைகளை மதிப்பது நல்ல பண்புதான்.



## இசை ஞானியின் உதவி!


இசைஞானி இளையராஜா படத்தயாரிப்பாளர் மட்டுமல்ல. தனக்கு மிக நெருக்கமானவர்களுக்கு படம் தயாரிக்க பண உதவியும் செய்கிறார். 'தாலாட்டு' படத்திற்கும் அவர் நிறைய உதவி செய்தார்.

## முதல் குறிப்பு!

மழைக்காட்சியில் நடிக்க வேண்டுமா? கஸ்தூரியிடம் கைவசம் ஒரு ஐடியா இருக்கிறது.
மழைக்காட்சியில் நடிக்க வேண்டிய அன்று காலையில் நன்றாக வெந்நீரில் குளித்து விடுவேன். அதனால் தும்மல் வருவதில்லை. சளியும் பிடிக்காது என்கிறார்.

## சத்யராஜ் ஏற்படுத்திய பயம்!

"வால்டர் வெற்றிவேல்" படத்தைப் பார்த்துவிட்டு நடிகர் சிரஞ்சீவி அதன் தெலுங்கு பதிப்பில் நடிக்கத் தயக்கம் காட்டினாராம். சத்யராஜ் படு சீரியசாக நடித்திருக்கிறார். காதல் பாடல்காட்சி இல்லாமல் நடித்தால் தன் ரசிகர்கள் ஏற்காமல் போவார்களோ என்று பயப்படுகிறார்.
தெலுங்கின் சூப்பர் ஸ்டார் தனது 'இமேஜ்' பற்றிக் கவலைப்படுகிறார்.



மம்மூட்டி

## காதோடு சொல்லுகிறோம்

★ சமீபத்தில் கன்னட நடிகை காரில் வெளியே போயிருக்கிறார். அடையாளம் கண்டு கொண்ட ரசிகர்கள் மொய்த்துவிட்டார்களாம். மொய்த்தது மட்டுமல்ல ஆளைப் பிய்க்காத குறையாக நடந்து கொண்டார்களாம். தப்பி வந்தது மறக்க முடியாத அனுபவம் என்கிறார்.

★ சின்னப்பூ நடிகை 'கா' நடிகருடன் தனியே குளிர்ச்சியான பிரதேசம் ஒன்றுக்கு சென்று வந்த விஷயம் 'கா' நடிகரின் வீட்டில் தெரிந்துவிட்டதாம். ஒரே கச முசா. அவர்களுக்கு காதலிக்க நேரமில்லை என்பது வீட்டாருக்கு தெரியாதாக்கும்.

★ திருமணத்தின் பின்னரும் ஜல் நடிகை முன்னர் போலவே தாராளமாய் நடிக்கிறார். சமீபத்தில் அவரிடம் சென்ற தயாரிப்பாளர் 'நீச்சல்' உடை அணிய வேண்டி வருமே.. என்று இழுத்தாராம். அதில் ஒரு பிரச்சனையும் இல்லை. முன்பு போலத்தான் இருக்கிறேன் என்றாராம் அந்த நடிகை.

★ தன் தலைவியின் தயவால் தமிழக சட்டப் பேரவை தொகுதி ஏதாவது ஒன்றில் தேர்தல் நடந்தால் தனக்கு டிக்கட் வேண்டும் என்று கேட்கிறாராம் [illegible] முகம் என்றாலும் தேர்தலில் வெற்றிபெற தன் செல்வாக்கும் வேண்டுமே.

★ ரகு நடிகர் சொந்தச் செலவில் [illegible] 'பாஸ்' வேகத்தில் முன்னே ஓடி நான் [illegible]. இப்போது இரண்டாவது கதாநாயகன் என்ற லெவலில் இருக்கிறார். விரைவில் மூன்றாவது என்ற லெவலுக்கு இறங்குவாரோ தெரியாது.

★ ஆனந்தமான விலை நடிகர் இப்போதுதான் தன்னை அறிந்து கொண்டாராம். [illegible] பாத்திரமே எனக்கு பொருத்தம். இனிமேல் கதாநாயக ஆசை வேண்டாம் தனக்கு என்கிறாராம். பூ நடிகையின் தந்தை அவரது பெயரைச் சொல்லி [illegible] கிறாராம். பூ நடிகை கோபத்தில் இருக்கிறார். இன்னொரு முக்கியமான, வெளிப்படையாக அனைவரும் அறிந்திருக்க வேண்டிய செய்தி. அது [illegible] பூ நடிகை [illegible] தொடங்கியிருக்கிறார்.

★ இந்தி இப்போதும் [illegible] நடிகை [illegible] என்ற முறையில் இதுவரை [illegible] இருந்து வருகிறார். இதைப் பற்றி [illegible] ஒரு நிருபர் கேட்டபோது, அவருக்கு உடல் அழகு இருக்கிறதா என்ன? அதுதான் அடக்கமாக நடிக்கிறார் என்று சொன்னாராம்.

★ கௌ நடிகை வீட்டில் ஓய்வாக இருப்பதை அறிந்த சில தயாரிப்பாளர்கள் போன் மூலம் ஒரே தொல்லையாம். அதனால் போனை கட் பண்ணிவிடலாமோ என்று கூட யோசிக்கிறாராம்.

★ தீபாவளி ரிலீஸ் படங்கள் சில முன்னணி நட்சத்திரங்களை [illegible] ஆக்கியிருக்கிறதாம். பெரிதாக எதிர்பார்த்த சில படங்கள் சரியாகப் போகவில்லையாம்.



இணைந்திருப்பது
-அரவிந்தசாமி



## மோதிரத்தை தேடுகிறார்

அக்கரைச் சீமையிலே பட நாயகர்களில் ஒருவர் ராசிக். அக்கரைச் சீமையிலே படத்திற்கு பின்னர் வாய்ப்புக்கள் தேடிவராமையால் வருத்தப்படுகிறார். பிரபல இயக்குநர்களின் பார்வை தன்மேல் பட்டால் தனது திறமையும் பளிச்சிடும் என்கிறார்.

வேகமான இளைஞர், மோதிரக் கையால் குட்டுப்பட்டால் பெரிதும் பேசப்படும் நடிகராவார். சண்டைக் காட்சிகளில் நடித்துப் பெயர் எடுக்கவேண்டும். நடனக்காட்சிகளிலும் நன்றாக நடிப்பேன் என்கிறார் ராசிக்.

முன்ஷடியை மடக்கு! பார்!! எதிரியின் முகம் தெரிகிறதா? முகம் மட்டும்!

## பாப்பா முரசு சிறுகதை

# விலை மதிப்பற்ற கல்

காந்தாரம் என்ற நாட்டை காந்தவர்மன் என்ற மன்னன் ஆண்டான். அவனுக்கு விலை மதிப்பற்ற நவரத்தினக் கற்களைத் தேடிச் சேர்த்து வைப்பதில் ஒரு அலாதி விருப்பமே இருந்தது.




நவரத்தினக் கற்கள் யாரிடமாவது இருப்பது தெரிந்தால், அவர்கள் அதற்காக எதைக் கேட்டாலும் கொடுக்கத் தயங்க மாட்டான். நவரத்தினக் கற்களைப் பெறுவதற்காகவே அவன் பல போர்களை நடத்தியிருக்கிறான்.

நவரத்தின வணிகர்கள் காந்தார நாட்டிற்கு வந்தால் அவர்களுக்குக் கொண்டாட்டம்தான். அவர்களை இராஜ மரியாதை கொடுத்து வரவேற்று உபசரிப்பான் காந்தவர்மன். தன்னிடம் இருக்கும் இரத்தினக் கற்களை விட உயர்ந்த மதிப்புடைய கற்கள் அவர்களிடம் இருந்தால் அவர்கள் கேட்பதைக் கொடுத்து அந்தக் கற்களைப் பெற்றுக் கொள்வான்.

தமது விருந்தினர்களாக வரும் பேரரசர்கள், அரசர்கள், மகான்கள், புலவர்கள், பிரபுக்கள் போன்றவர்களைத் தமது பொக்கிஷ அறைக்கு அழைத்துச் சென்று தான் பாடுபட்டுச் சேர்த்து வைத்திருக்கும், வைரம், பச்சை, கோமேதகம், புஷ்பராகம், நீலம், சிவப்பு போன்ற அரிய நவரத்தினக் கற்களைக் காட்டி அவர்கள் பிரமிப்பு அடைவதைப் பார்த்துப் பேரானந்தம் கொள்வான்.

ஒரு முறை காந்தார நாட்டிற்கு அஷ்டாவதர் என்ற சந்நியாசி ஒருவர் வந்தார். அவர் ஒரு பெரிய மகான். தவயோகியும் கூட. அவரது புகழ் உலகெங்கும் பரவியிருந்தது. அவர் அடக்கம் மிகுந்தவர். உயிர்களிடத்தில் அன்பு மிகுந்தவர். ஆடம்பரமாக வாழும் செல்வந்தர்களை அவருக்கு அறவே பிடிப்பதில்லை. ஏழை, எளிய மக்களை மிகவும் நேசித்து, அவர்களோடு பழகி அவர்களுள் ஒருவராகத் தன்னை ஆக்கிக் கொண்டு அவர்கள் அளிக்கும் எளிய உணவையே உண்டு மகிழ்வார்.

காந்தார நாட்டிற்கு அவர் வந்து பல நாட்களாகியும், அவர் ஏழை எளிய மக்களின் மத்தியிலேயே இருந்து கொண்டிருந்ததால், அவர் வந்த விசயம் மன்னன் காந்தவர்மனுக்குத் தெரியவே இல்லை. ஒருநாள் அந்த விஷயம் அவனுக்குத் தெரிய, பதறித் துடித்து அஷ்டாவதரிடம் ஓடினான். அவர் வந்த செய்தியைத் தாமதமாகப் பெற்றதற்காக அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு மிகுந்த மரியாதையுடன் அவரைத் தன் அரண்மனைக்கு அழைத்து வந்தான்.

ராஜ உபசாரமாக அவருக்கு அறுசுவை விருந்து வைத்தான். அவன் மன்னன் என்பதால் அவனது உபசரிப்புக்கள் அனைத்தையும் ஏற்றுக் கொண்டார் அஷ்டாவதர்.

தமது விருந்தினரான அவருக்குத் தனது பொக்கிஷ அறையைக் காட்ட விரும்பி, அவரை அழைத்துச் சென்றான். இதுவரை தான் சேகரித்து வைத்திருந்த எல்லா நவரத்தினக் கற்களையும் அவரிடம் காட்டி, அவற்றின் மதிப்பையும் சிறப்பையும் மிகுந்த உற்சாகத்துடன் விளக்கிக் கொண்டே வந்தான்.

அஷ்டாவதர் அவற்றைப் பார்த்தும் அவற்றின் சிறப்பைக் கேட்டும் பிரமிப்படையவில்லை. அவர் முகத்தில் எந்த மாறுபட்ட உணர்ச்சியும் தோன்றவில்லை. ஏதோ ஒரு ஜடம் போல் அவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு வந்தார்.

காந்தவர்மன் இறுதியாக ஒரு நவரத்தினக் கல்லை எடுத்துக் காட்டினான்.

"மகா சிரேஷ்டரே! இந்தக் கல்தான் உலகத்திலேயே மிகவும் மதிப்பு வாய்ந்த கல்லாகும். இதற்கு நிகரான ஒரு கல் இந்த உலகத்தில் இனி இருக்க முடியாது," என்று மிகவும் பெருமிதமாகச் சொன்னான்.

அதைக் கேட்டு மெல்லச் சிரித்த அஷ்டாவதர், "மன்னா இதை விட மதிப்பு வாய்ந்த ஒரு கல்லை நான் பார்த்திருக்கிறேன்." என்றார்.

காந்தவர்மன் திகைத்தான்.

"மகா சிரேஷ்டரே! தாங்கள் சொல்வது உண்மையா? இதை விட மதிப்பு வாய்ந்த கல் இருக்கிறதா?" என்று ஆவல் பொங்கக் கேட்டான் காந்தவர்மன்.

"ஆமாம் மன்னா, நான் பொய் சொல்வதில்லை."

"இது நாள் வரை இந்தக் கல்தான் உலகத்திலேயே மதிப்பு வாய்ந்த கல் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். தற்பொழுது தாங்கள் சொல்வதைப்பார்த்தால்.... மகாசிரேஷ்டரே..... அந்தக் கல்லை எங்கே பார்த்தீர்கள்?" என்று கேட்டான் காந்தவர்மன்.

"வேறெங்கும் இல்லை. இதே காந்தார நாட்டில்தான் பார்த்தேன்," என்றார் அஷ்டாவதர். காந்தவர்மனுக்கு மேலும் தூக்கிவாரிப் போட்டது.

"என்ன? என் நாட்டிலேயே அந்தக் கல் இருக்கிறதா? என்னால் நம்ப முடியவில்லை. என்னைத் தவிர வேறு யாரிடம் இதைவிட உயர்ந்த கல் இருக்க முடியும்? எனக்கு வியப்பாகவே இருக்கிறது சிரேஷ்டரே! உடனே அந்தக் கால்லை நான் வாங்க வேண்டும். தயவு செய்து அது யாரிடம் இருக்கிறது என்று தாங்கள் சொல்ல வேண்டும்," என்று மிகுந்த பரபரப்புடன் கேட்டான் காந்தவர்மன்.

அஷ்டாவதர் அவனது பரபரப்பைக் கண்டு மனதிற்குள்ளாகவே சிரித்துக்கொண்டு, "மன்னா! உன்னுடைய முன்னோர் கட்டி வைத்திருக்கும் பெரிய சத்திரம் இருக்கிறதல்லவா? அதில்தான் அந்தக் கல் இருக்கிறது," என்றார்.

காந்தவர்மன் மேலும் வியப்படைந்தான்.

"சத்திரத்திலா! இத்தனை நாள் எனக்குத் தெரியாமல் அதை அங்கு வைத்திருப்பது யார்? தயவு செய்து சொல்லுங்கள்," என்று கேட்டுக் கொண்டான் காந்தவர்மன்.

"மன்னா அந்தக் கல் அங்கு இருப்பது ஏற்கனவே உனக்குத் தெரிந்த விஷயம் தான்." என்று மேலும் புதிர் வைத்துச் சொன்னார் அஷ்டாவதர்.

இப்பொழுது காந்தவர்மன் குழப்பத்தோடு அஷ்டாவதரைப் பார்த்தான்.

"எனக்கு ஏற்கனவே தெரிந்த விசயமா? புரியவில்லை சிரேஷ்டரே," என்றான்.

அதற்கு மேல் அவனைத் துடிக்க வைக்க விரும்பாத அஷ்டாவதர், "மன்னா நீ நினைப்பது போல் அது நவரத்தினக்கல் இல்லை. அம்மிக்கல்." என்றார்.

காந்தவர்மன் துணுக்குற்றான்.

"என்னது வெறும் அம்மிக்கல்லா? அதுவா இந்த நவரத்தினக்கல்லை விட மதிப்பு வாய்ந்த கல்? மகாசிரேஷ்டரே.... உலகத்தில் அனைத்தையும் கற்றுணர்ந்த தாங்களா, ஒரு நவரத்தினக் கல்லுக்கும் அம்மிக்கல்லுக்கும் வித்தியாசம் தெரியாமல் பேசுகிறீர்கள்? என்னால் இதை ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. கேவலம் ஒரு கருங்கல் அம்மிக்கு என்ன மதிப்பிருக்க முடியும்?" என்றான் காந்தவர்மன்.

"மன்னா! கேவலம் ஒரு கருங்கல் அம்மி என்று இத்தனை இழிவாகப் பேசுகிறாயே! அந்தச் சத்திரத்திற்கு வந்து செல்லும் வழிப்போக்கர்களின் பசியைத் தணிக்க எத்தனை உதவியாக இருந்திருக்கும் என்பதை நீ யோசித்துப் பார்த்தாயா? நீ சேகரித்து வைத்திருக்கும் இந்த நவரத்தினக் கற்கள் எல்லாம் மதிப்பில் மிகவும் உயர்ந்தவையாக இருக்கலாம். ஆனால் இவற்றால் இது நாள்வரை யாருக்கு என்ன பயன்? ஏன்.... உனக்கே கூட இவற்றால் விளையக் கூடிய உருப்படியான பலன் என்ன? யாவருக்குமே எந்த விதத்திலுமே உதவாத இந்தக் கற்களைவிட பல ஆயிரம் பேர்களுக்கு உதவக்கூடிய அந்த அம்மிக்கல்தான் உலகத்திலேயே மிகச் சிறந்த கல்லாத இருக்க முடியும்." என்றார் அஷ்டாவதர்.

காந்தவர்மன் அந்தக் கருத்தைக் கேட்டுப் பிரமித்து விட்டான். உலகத்திலேயே மிகவும் மதிப்பு வாய்ந்த கல் எது என்பது அவனுக்கு விளங்கிவிட்டது. அவன் மனம் வெட்கத்தால் கூனிக் குறுகியது. தன் முன்னே இருந்த நவரத்தினக் கற்களை ஒருமுறை பார்த்தான்.

இப்போது அவை வெறும் கூழாங்கற்களாக அவன் கண்களுக்குத் தெரிந்தன.

குழந்தைகளே நமது விருப்பங்களை, இந்த மன்னன் போல் இல்லாது, பலருக்கும் பயன்படத்தக்க வகையில் செய்து சந்தோஷம் கொள்ளலாமே.

## பாப்பா முரசு

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 18.12.1933.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 19
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை,
கொழும்பு -05.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 16

**பரிசுக்குரியவர்:**
நர்மதா வேல்முருகு
வின்சன் மகளிர் உயர்தர பாடசாலை
மட்டக்களப்பு.

பாராட்டுக்குரியவர்கள்:

கி.அ.சுதர்சனன்
கனு/பேர்த் அரசினர் தமிழ் பாடசாலை-ஹெரனை.

இரத்தினசபாபதி-சுஜெந்தினி
வின்சன் மகளிர் உயர்தர பாடசாலை.

ஏ.எல்.எம்.அஸாம்
பி/ சாஹிரா கல்லூரி-புத்தளம்.

வினோதனி ராஜரட்னம்
பிட்டதனிய தெகியோவிற்ற.

செல்வன்-ர.துஷ்யந்தன்
திருகோணமலை.

ஆர்.சிறிஷாந்தி
நல்லாயன் அரசினர் தமிழ் மகளிர் வித்தியாலயம்-கொட்டாஞ்சேனை.

பஸிஹா மஸுட்-வரக்காமுறை.

எம்.எல்.எம். பவாஸ்-காத்தான்குடி-05.

எம்.ஏ. ஷிபாயா
தி/விக்னேஸ்வரா மகாவித்தியாலயம்.
திருகோணமலை.

து.சிவப்பிரகாசம்
மகாஜன கல்லூரி-மட்டக்களப்பு.

முகம்மது ஷிஸாம்
ஜவுசன் பள்ளி வீதி-புத்தளம்.

செல்வன் எஸ்.எம். முகம்மட்
கொழும்பு.

## இவை - இப்படி

1. சுடும் எழுத்து- தீ
2. அழைக்கும் எழுத்து- வா
3. முதல்மாத எழுத்து- தை
4. பொதி சுமக்கும் எழுத்து- பை
5. எழுத உதவும் எழுத்து- கை
6. மணம் வீசும் எழுத்து- பூ
7. பாட்டுக்கு வரும் எழுத்து- பா
8. கேட்கும் எழுத்து- தா
9. காகம் கரையும் எழுத்து- கா
10. நாய் குரைக்கும் எழுத்து- வெள

செல்வி. றஞ்சினி முருகுப்பிள்ளை-கறுவாக்கேனி.

## என்ன காரம்?

பதவியில் இருப்பவர் பண்ணும் காரம்- அதிகாரம்
பெண்களுக்கு பிரியமான காரம்- அலங்காரம்
பசிக்கு தேவையான காரம்- ஆகாரம்
பாவத்திற்குதேடும் காரம்- பரிகாரம்
பார்வைக்கு அழகாயில்லாத காரம்- விகாரம்
விருந்தோம்பி செய்யும் சாரம்- உபசாரம்
கணவனின் மறுபாதி இந்த சாரம்- சம்சாரம்
நாம் கேள்விப்படும் சாரம்- சமாசாரம்
அன்றாட வாழ்விற்கு அவசியமான சாரம்-மின்சாரம்
கவலை தரும் சாரம்- விசாரம்

தொகுப்பு:செல்வன் இர்சாட்
குருணாகல்.

## ஓணானின் ஆர்ப்பாட்டம்



ஓணான்கள் எதிரிகளிடம் அகப்பட்டுவிடும்போது தனது உடலை பலூன் மாதிரி பெரிதாக்கி ஸ்.... என்ற சத்தத்துடன் சீறும். பாம்பு போலவே இது செய்வதால் இதன் கடி விஷமானது என பலர் நினைக்கின்றனர். ஆனால் இது தவறு. இங்கிலாந்தில் ஒரு விஞ்ஞானியை இந்த ஓணான் கடித்து விட்டது. இரண்டு மணி நேரம் நினைவற்றுக் கிடந்தார் அவர். பின் எந்தப் பாதிப்பும் இன்றி விழித்து விட்டார்.

## விடுகதைகளும் விடைகளும்

1. முட்டிக்குள் முத்துக்கள். அது என்ன?
2. சிறு வீட்டுக்குள் விறகு அடுக்கி இருக்கிறார்கள்.
3. நான்கு உலக்கை போட்டுவர, இரு சுளகு புடைத்துவர, கோண அகப்பை கிளறி வர, குண்டான் சட்டி நிறைகிறது. அது என்ன?
4. பதினாறு சிப்பிகளைப் பெயர்த் தெடுத்தால் பல் முத்துகள் வரும். அது என்ன?
5. ஊரெங்கும் ஓசை எழுப்புவான். ஒரு முடக்குத்தண்ணீர் அருந்தமாட்டான். அவன் யார்?
6. அறிவை விளக்கித்தருவான். ஆனால் பேச மாட்டான். அவன் யார்?
7. ஏறி மிதித்தால் ஓடிவிடுவான். அவன் யார்?

1. மாதுளம்பழம் 2. தீப்பெட்டி
3. யானை,கால், செவி, தும்பிக்கை, வயிறு
4. சோளம் 5. மாட்டுமணி
6. புத்தகம் 7. சைக்கிள் வண்டி.

வீ. அப்பாஸ்
தீ/அல் தாரிக் மகாவித்தியாலயம்-கந்தளாய்.

1. தாய் குப்பையிலே, மகள் சந்தையிலே. அவள் யார்?
2. என் மாடு சிவலைமாடு. குப்பையும் தின்னும். கூழமும் தின்னும். நீரைக் கண்டால் இறந்து விடும். அது என்ன?
3. சில்சில் என்றது ஒரு குருவி. சீரியடிக்குது ஒரு குருவி. அது என்ன?
4. சொண்டு சிவப்பான். சுண்டெலிவாலான். தூங்குவான். பறக்கமாட்டான். அவன் யார்?
5. அந்தரத்தில் ஆயிரம் பேர் சேர்ந்து கட்டியவீடு. ஒருவன் கைபட்டு உடைந்ததாம். அது என்ன?
6. ஒரு குகைக்குள் இரண்டு கோட்டை. அது என்ன?
7. கடலுள் விதை விதைத்து, கடலெங்கும் வேர் பிடித்து, திண்ணையிலே பூ பூத்து, திரிகோண மலையிலே பழம் பழுக்குது. அது என்ன?
8. மேலும் தாவரம். கீழும் தாவரம். நடுவில் பழம். அது என்ன?

1. தேங்காய்
2. நெருப்பு
3. பொரியும் பலகாரங்கள்
4. மாதுளம்பழம்
5. தேன்கூடு
6. மூக்கு
7. விளக்கு
8. அன்னாசிப்பழம்

சாரங்கன்
ஸ்ரீ இராம கிருஸ்ணா கல்லூரி
அக்கரைப்பற்று.



பதினைந்தாம், பதினாறாம் நூற்றாண்டுகளில் மத்திய தரைக் கடலில் துடுப்புப் மூலம் செலுத்தப்படும் கப்பல்கள் சென்றன. இவை பாய்மரங்கள் மூலமும் செலுத்தப்பட்டன.

## கூவு குயிலாரே!

வானம் விடிந்ததென்று கூவும் குயிலாரே!-மக்கள்
வாழ்வு விடிகவென்று கூவ முடியாதோ?
ஞாலம் இருள்கலைய யாவும் ஒளியாகும்!- நாங்கள்
நாளும் மனம் குளிரக் கூவு குயிலாரே!

பீதிகலைந்து மனம் நீதிவழிமுறையில்- இந்த
பாரில் சமத்துவமாய் வாழத்துடிப்பவர்கள்
கூடிக் கலந்துறவைத் தேடிக்களிப்பதற்கு-நீ
கூவிக்குரலெழுப்பித் தாவிப்பற குயிலே!

மானம் இழந்தும் தன் மானம் இழக்காத- இந்த
மனிதர்குலம் மீது பாவம் இலையோ சொல்!
கானம் இசைக்கின்ற ஆசைக்குயிலே நீ- எங்கள்
கனவு நனவாகக் கூவு குயிலாரே!

சோகம் கடலாகத் தாகம் மிகுவாக- தினம்
சோரும் இனம்வாழச் சூழும் பகைமாழ!
தேகம் களிப்பாகத் தேசம் செழிப்பாக- வெற்றி
தேடித்தர வாழ்வில் கூவு குயிலாரே!

வீணிந்த வாழ்வென்று வீணாக எண்ணாமல்- மக்கள்
வீதியிலே நாயாக வீழ்ந்து புரளாமல்
மாநில வாழ்விதே தேனென்று வாழ்ந்திட-என்
மாங்குயிலே நீயின்றே பூங்கவிதை பாடாயோ!

ஏக்கம் பறந்திட எம் நோக்கம் நிறைவுபெற-துயர்
எட்டுத்திசையை விட்டும் ஓட்டம் பிடித்தோட
பூக்கட்டும் விடிவுகாலம்! பொங்கட்டும் புதுவாழ்வு- மக்கள்
பாக்கட்டிப்பாடுதற்கு பாடாயோ குயிலாரே!

□ செ.குணரத்தினம்
மட்டக்களப்பு.

## மன்னித்துவிடு

அன்புள்ள அம்மா...
அந்தி பூத்த வேளை...
ஜன்னல் இடுக்கில்
உன்...
விழிகள் மேய்வதை
அறிந்தேன்....
துடித்தேன்.....
உன்னிடம் ஓடி வர
வழியில்லை எனக்கு....

சுற்றிலும்....
இரும்புக் கரங்கள்...
அசைய முடியவில்லை!
நாளும் நனைகின்றேன்
கண்ணீரில்...
ஈர இதயங்கள்
இல்லை இங்கு......
சாட்டைகளின்
உரசல்...
உதிரத்தை உறைத்து விட்டது!
இதுமட்டுமா...
'தீத்' தழும்புகள்..
அங்கங்களின் சிதைவுள்....
அறிந்தால் நீ...
அரண்டு போவாய்!
வேலிகள் விடைகொடுத்தால்
உன் மடியில்....
தலை சாய்க்க ஓடிவருவேன்...
இல்லையேல்...
தலை....
மூ...ழ்...கி...வி....டு..!

உன்....
விழி நீரை....
துடைக்க..

யான் கண்ட
கனவுகள் பொய்த்து விட்டன!
மரணத்தின்
வாயிலை...
தொட்டு விட்ட
மகனை....
மன்னித்து விடு!
தாயே!!.....

□ உஷா சந்திரசேகர்.

## ஏன் மௌனம்...?

என்ன பார்க்கின்றாய்
'எனக்குமா இவன்
எழுதிய கவிதைகள்
புரியாது போய் விடும்
என நினைக்கின்றான்'
என நீ நினைப்பது
எனக்கு புரியும்
உனக்கும் என் மனது
புரிய வேண்டும்
என்பதனால் எழுதுகின்றேன்.

• • •

உன்
அகன்ற விழிகளுக்குள்
அகப்பட்டுவிட்டேன் நான்.
இறுக பூட்டி வைத்த-என்
இதயக் கதவுகள்-உன்
இமை துடிப்பில்
சிதறிப் போனது- அங்கே
உன் நினைவுகள்
ஆக்கிரமித்துக் கொண்டன.

• • •

என் இதயத்தின்
ஒவ்வொரு துடிப்பும்
உன் பெயர் சொல்லி
துடிக்கின்றது- நான்
எடுத்து வைக்கும்
ஒவ்வோர் அடியும்
உன் திசை நோக்கி
நகர்கின்றது
ஏன்?
உனக்கும் தெரியும்.


• • •

நான் சொல்லத்
தேவையில்லை- இருந்தும்
ஏன்

இன்னும் மௌனம்?
உன் விழிகளின் பாசை
புரியவில்லை-நான்
கொண்டது
வேண்டாத விபரீத
எண்ணமோ! அதுவும்
விளங்கவில்லை.
இருந்தும்
"நான்....உன்னை
......"
என்ன பார்க்கின்றாய்?

□ எல்.கே.நாதன்.

# தேன் கிண்ணம்



## நான் பேசமாட்டேன் நீ பேசு.....

யோசித்துப் பார்...
நானும் நீயும்
அடையாள அட்டை
வைத்திருக்கும்
தமிழர்கள்!

நீ தெருவில்
கிடக்கும் ஒரு
அழகான
ரோஜா மாதிரி...

உன்
கன்னங்களையும்
மார்புகளையும்
குண்டுகள்
துளைக்காதென்பது
என்ன நிச்சயம்?

நீ அழகானவள்தான்.
இருப்பினும்
இறந்து போனால்
இரண்டு நாட்களுக்குமேல்
வைத்திருக்க முடியாது
உன் உடலை!

எனக்கும் உனக்கும்
இங்கே
உயிர்வாழ
உத்தரவாதம் இல்லை....

புரிந்து கொள்வாய்
என நினைக்கிறேன்....

கண்ணே!
மரணத்திற்கு
அழகை
ரசிக்கத் தெரியாது!

யுத்தத்திற்கு
உன் புன்னகையின்
அர்த்தம் புரியாது!

ஆகையால்
கர்வம் வேண்டாம்.
நான் உன்னைக்
காதலிக்கிறேன்!
நீ என்னைக்
காதலிக்கிறாயா?

ஆமென்றால்
ஒரு திங்கள் கழியுமுன்
மடல் மூலம் தூதனுப்பு....

இல்லையேல்- நான்
நிச்சயம்
கைமாறிப்போவேன்
சமாதானத்தைப் போல்!!

□ எம்.சுரேஷ்.

## இதயமே....! இருக்கிறதா...?

நீ- கைப்பட
எழுதித் தந்த
அந்தக் கடிதங்கள்.....

•

நீ- போட்டிருந்த
'சோளில்'
பிரித்தெடுத்தேனே
அந்தக் குஞ்சம்.......

•

உன் உதடுகளால்
ஈரப் படுத்தித் தந்த
அந்த-
ஊதா நிற(க்)
கைக்குட்டை......

•

என் காதை(க்)
கடித்துவிட்டு
செல்லமாக(ச்)
சிணுங்குவாயே
அந்த-
ஞாபகங்கள்.....

•

உனக்கு(த்)
தெரியாமலேயே
உன்- முடியிலிருந்து
நான்- பிரித்தெடுத்த
அந்த
ஒற்றைத் தலைமயிர்....
எல்லாமே-
என்னிடமிருக்கிறது...!

•

காதலி....

இன்னும் பத்திரமாய
எல்லாமே-
என்னிடமிருக்கிறது.

•

உன்னிடம்
அன்பே!
ஆகக்குறைந்தது
என்-
நினைவுகளாவது
இருக்கிறதா...?

•

□ அட்டாளைச்சேனை
யூஎெல். மப்றாக்.

## நியதிகள்

ஒரு
எண்ணம்-இது
புதிய
திருப்பமென்று.

••

இனி
இரட்சிக்கப்படுவோம்
என்ற
எண்ணமாய்
மாலைவரை
மகிழ்ந்திருக்க
காலையில்
கனவெல்லாம்
கவிழ்ந்திருக்கும்.

••

இறந்து போன
இந்தக் கணம்
வரையிலும் கூட
நம்பிக்கையிருக்கிறது.
இருந்தும்
நெஞ்சினுள்
நிறம்
மாறிப்போன
நியதிகள்.

••

வார்த்தைகள்
தொடங்கி
வருடங்கள்
முடிகின்றன.
பட்டதென்னவோ
வேட்டுக்காயங்களும்
வெட்டுக்காயங்களும்.
ஆனாலும்,
அப்பாவி- நான்.

••

வேறுபாடு- நீங்கி

வாழ்வில்
மாறுபாடு-வர
விழித்தே இருக்கின்றேன்.
காண்பது
கனவாகக்கூடாது
என்பதற்காக.

••

வார்த்தைப்
புழுதியில்- வேர்த்துப்
புரையோடிப் போன
நம்பிக்கையை
நம்பலாம்- நாளைவரை
நாளை மறுநாள்...?

□ ஸ்ரீவரணி-வாழைச்சேனை.

# அதிரடியான ஒரு போட்டி

★ சுப்பர் ஸ்டார் ரஜினியை நேரில் காண விரும்புகிறீர்களா?
★ தமிழகச் சுற்றுலாவுக்கு நீங்கள் தயாரா?

### நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:

★ ஒன்றிலிருந்து இருபது வரையான கூப்பன்களை நிரப்பி பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்.
★ போட்டி முடிவடைந்தவுடன் அனைத்துக் கூப்பன்களையும் எமக்கு அனுப்பி வைக்கலாம்.
★ போட்டி சம்மந்தமான எந்த விடயத்திலும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.
★ போட்டியில் பங்குகொண்டு சரியான விடை எழுதுவோரில் ஒருவர் அதிஷ்டசாலியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.
★ ஏனைய ஐம்பது அதிஷ்டசாலிகளுக்கு சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் பெரிய அளவிலான வண்ணப்படங்கள் வந்து சேரும்.



இலக்கம்-20
சுப்பர் ஸ்டார் சந்திப்பு
காட்சி இடம்பெற்ற படத்தின் பெயர்:-..............................
படத்தின் இயக்குநர் பெயர்:-..............................
ரஜினியின் ஜோடி/ஜோடிகள் யார்:-..............................
இப்படம் வெளியான ஆண்டு:-..............................

*பி.கு: இலக்க வரிசைப்படி 20 கூப்பன்களையும் நிரப்பி அனுப்புவோர் மட்டுமே போட்டியில் பங்குகொள்ள முடியும்.*



# கூத்தரித்த கூடி ஜோக்ஸ்

சட்டத்தரணி 1- நீங்கள் மோசக்காரர் என்று எனக்குத் தெரியும்.
சட்டத்தரணி 2- நீர் பொய் சொல்லுகிறவர் என்று எனக்கும் தெரியும்.
நீதிபதி- இப்போது ஒருவரை ஒருவர் அறிமுகப்படுத்திக் கொண்டுவிட்டீர்கள். இனி வழக்கை ஆரம்பிக்கலாமே.

•

அவர்: இங்கே புகை பிடிக்கக்கூடாது என்று எழுதியிருக்கிறதே, கவனிக்கவில்லையா?
மற்றவர்- நான் புகையைப் பிடிக்கவில்லையே. அதை வெளியேதானே விடுகிறேன்.

•

வந்தவர்- உங்கள் ஊரில் யாராவது பெரியவர்கள் பிறந்திருக்கிறார்களா?
ஊர்பிரமுகர்- இல்லை. எல்லாமே சின்னக் குழந்தைகளாகத்தான் பிறந்திருக்காங்க.

•

நிருபர்- உங்கள் வயது என்ன?
நடிகை- இருபத்தாறு.
நிருபர்- அது உங்கள் தங்கைதானே அவள் வயது என்ன?
நடிகை- முப்பத்தேழு.

•

# இந்த வாரம் உங்கள் பலன்
(12.12.93 முதல் 18.12.93 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| விருட்சிகம் | - சூரியன், புதன், வெள்ளி இராகு. |
| தனு | - செவ்வாய் |
| மகரம் | - சனி |
| இடபம் | - கேது |
| துலாம் | - வியாழன் |

16.12.93இல் சூரியன் தனுவில் பிரவேசம்

சந்திரன் விருட்சகம், தனு, மகரம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சாரம் செய்வார்.

### மீனம்: சுப நேரம்
(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரிய சித்தி, புகழ். | காலை 7 மணி |
| திங்கள்- | தனலாபம், குடும்ப நன்மை. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பிரயாணம், செலவு. | பகல் 12 மணி |
| புதன்- | தனவிருத்தி, புகழ். | காலை 7 மணி |
| வியாழன்- | வெளியிட வாழ்க்கை, மனக்குறை. | பி.ப 3 மணி |
| வெள்ளி- | கடவுள் நம்பிக்கை, பிறரால் ஏமாற்றம். | பகல் 12 மணி |
| சனி- | செலவு மிகுதி, பணக்கஷ்டம். | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 4

### மேடம்: சுப நேரம்
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் நன்மை, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, பணவரவு. | காலை 9 மணி |
| செவ்வாய்- | தூர இடப்பயணம், செலவு மிகுதி. | பி.ப 1 மணி |
| புதன்- | உறவினரால் தொல்லை, காரியத்தடை. | காலை 8 மணி |
| வியாழன்- | குடும்பப் பிரச்சனை, மறைமுக எதிர்ப்பு. | காலை 10 மணி |
| வெள்ளி- | பெரியோர் சகவாசம், மனக்கஷ்டம். | பி.ப 2 மணி |
| சனி- | காரியானுகூலம், கடன் பயம். | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 3

### இடபம்: சுப நேரம்
(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, பாரிய செயற்திட்டம். | பி.ப 1 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, குடும்ப மனஸ்தாபம். | காலை 10 மணி |
| செவ்வாய்- | தெய்வ அனுகூலம், மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| புதன்- | நினைத்த காரியம் சித்தி, செய்தொழில் நன்மை. | பி.ப 1 மணி |
| வியாழன்- | உறவினர் கலகம், வீண் அலைச்சல். | காலை 7 மணி |
| வெள்ளி- | பயமிகுதி, காரியங்களில் தடை. | பி.ப 1 மணி |
| சனி- | மனமகிழ்ச்சி, கடன் பயம் நீங்கும். | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 9

### மிதுனம்: சுப நேரம்
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பலவித நற்பேறு, புண்ணிய யாத்திரை. | காலை 9 மணி |
| திங்கள்- | பயணக் கஷ்டம், காரியங்களில் தடை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியார் எதிர்ப்பு, கவலை. | பி.ப 1 மணி |
| புதன்- | எண்ணிய கருமம் வெற்றி, செலவு மிகுதி. | பி.ப 3 மணி |
| வியாழன்- | குடும்ப நன்மை, தேகசுகம் பாதிப்பு. | காலை 7 மணி |
| வெள்ளி- | தெய்வ நம்பிக்கை, காரிய சித்தி. | பகல் 12 மணி |
| சனி- | வெளியிடப் பிரயாணம், வீண் செலவு. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 4

### கும்பம்: சுப நேரம்
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பயமிகுதி, பிள்ளைகளால் கவலை. | பகல் 12 மணி |
| திங்கள்- | பணவரவு, காரியானுகூலம். | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | அரச விரோதம், செலவு. | காலை 10 மணி |
| புதன்- | அந்நியர் பகை, மனக்குழப்பம். | பகல் 12 மணி |
| வியாழன்- | எடுத்த கருமம் வெற்றி, நடைக்கஷ்டம். | பி.ப 3 மணி |
| வெள்ளி- | பிரயாணக் கஷ்டம், செலவு அதிகம். | பி.ப 1 மணி |
| சனி- | மறைமுக எதிர்ப்பு, பயணங்களால் தொல்லை. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

### கர்க்கடகம்: சுப நேரம்
(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உறவினரால் தொல்லை, மன அமைதி குன்றும். | பி.ப 1 மணி |
| திங்கள்- | செலவு மிகுதி, கடன்படல். | காலை 9 மணி |
| செவ்வாய்- | பணவரவு, பெரியோர் சகவாசம். | பி.ப 1 மணி |
| புதன்- | வெளியிடப் பிரயாணம், எதிர்பார்ப்புகள் தடை. | காலை 7 மணி |
| வியாழன்- | மனக்குழப்பம், உறவினர் வருகை. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | அந்நியர் உதவி, நிலைப்பிரிவு. | காலை 7 மணி |
| சனி- | பெரியோர் உதவி, வைத்தியச் செலவு. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 5

### மகரம்: சுப நேரம்
(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | கௌரவம், புகழ் மேன்மை. | பி.ப 2 மணி |
| திங்கள்- | தனலாபம், காரிய சித்தி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வீண் அலைச்சல், மனக் கஷ்டம். | பி.ப 1 மணி |
| புதன்- | பணக்கஷ்டம், பெரியோர் உதவி. | காலை 7 மணி |
| வியாழன்- | அந்நியர் நட்பு, மனமகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | வாக்குக் கலகம், உயர்ந்தோர் நட்பு. | காலை 7 மணி |
| சனி- | தெய்வ நம்பிக்கை, மனக்குறை நீங்கும். | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம் -5

### சிம்மம்: சுப நேரம்
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணக்கஷ்டம், நிம்மதியின்மை. | பி.ப 2 மணி |
| திங்கள்- | நினைத்த காரியம் வெற்றி, சுபகருமம். | காலை 9 மணி |
| செவ்வாய்- | வெளியிட வாசம், வீணான எண்ணம். | பி.ப 1 மணி |
| புதன்- | தனலாபம், குடும்ப நன்மை. | காலை 7 மணி |
| வியாழன்- | பணப்புழக்கம், பொருள் சேரல். | பி.ப 2 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 8 மணி |
| சனி- | பயணங்களில் இழப்பு, கவலை. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 6

### தனு: சுப நேரம்
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தனலாபம், துயர் நீங்கும். | காலை 7 மணி |
| திங்கள்- | மனத்துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | வீண் மனஸ்தாபம், கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |
| புதன்- | மனச்சந்தோஷம், நடைக்கஷ்டம். | பி.ப 3 மணி |
| வியாழன்- | கௌரவ மேன்மை, துயர் நீங்கும். | காலை 7 மணி |
| வெள்ளி- | பணவரவு, மனமகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| சனி- | துயர் நீங்கும், வீண் செலவு. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம் - 1

### விருட்சிகம்: சுப நேரம்
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணக்கஷ்டம், திடீர் பிரயாணம். | காலை 9 மணி |
| திங்கள்- | புத்திர சோகம், மனக்குழப்பம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், பணவரவு. | பி.ப 2 மணி |
| புதன்- | நடைக்கஷ்டம், வீண் மனஸ்தாபம். | பி.ப 3 மணி |
| வியாழன்- | தூர இடப் பயணம், அலைச்சல். | காலை 10 மணி |
| வெள்ளி- | கௌரவம், கீர்த்தி. | பி.ப 1 மணி |
| சனி- | இனசனக் கொண்டாட்டம், செலவு. | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 7

### துலாம்: சுப நேரம்
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தனலாபம், செலவு மிகுதி. | பி.ப 2 மணி |
| திங்கள்- | எண்ணிய கருமம் வெற்றி, பகை. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | கௌரவம், தேகசுக நன்மை. | காலை 7 மணி |
| புதன்- | மனமகிழ்ச்சி, புத்திர நன்மை. | பி.ப 2 மணி |
| வியாழன்- | பயண மிகுதி, செலவு அதிகம். | காலை 10 மணி |
| வெள்ளி- | துன்பநிலை, மனப்பயம். | பி.ப 1 மணி |
| சனி- | இனசன விரோதம், நிலைப்பிரிவு. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 8

### கன்னி: சுப நேரம்
(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | அனுகூலம், புத்திரரால் நன்மை | பி.ப 2 மணி |
| திங்கள்- | பயணங்கள், பணச்செலவு. | காலை 9 மணி |
| செவ்வாய்- | வீண் உபாதை, கண்டத்திற்கு மேற்பட்ட நோய். | பி.ப 1 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வியாழன்- | செய்தொழில் விருத்தி, செலவு அதிகம். | பி.ப 3 மணி |
| வெள்ளி- | நடைக்கஷ்டம், குடும்பப் பிரச்சனை. | காலை 10 மணி |
| சனி- | மனக்குறை அதிகம், செலவு மிகுதி. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 2

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மருத்துவ விந்தைகள்

## பரிசோதனைக் குழாய் குழந்தைக்கு இப்போது வயது பதினைந்து!




15 வருடங்களுக்கு முன்னர்தான் முதலாவது பரிசோதனைக் குழாய்க் குழந்தை பிறந்தது. சர்வசாதாரணமாக இன்று நல்ல தேகாரோக்கியத்துடன் வாழும் லொசி பிரவுண் எத்தகைய பிரச்சனையுமின்றி காணப்படுகிறார். இவருடைய வயதினை ஒத்த பிள்ளைகளைப் போல் இவருக்கும் பலத்த சத்தத்துடன் கூடிய இசையைக் கேட்பதில் நாட்டம் அதிகம்.

உலக முதலாவது பரிசோதனைக் குழாய்க் குழந்தை பிறந்தபோது உலகம் வியந்தது - பாராட்டியது. மனித இனவரலாற்றிலே இது ஒரு திருப்புமுனையாகவும் அமைந்துள்ளது. இருப்பினும் இத்தகைய செயல் இயற்கைக்கு முரணான செயல் என்ற எதிர்ப்புக் குரல்களும் எழும்பத்தான் செய்தன. இதனால் ஏற்பட்ட முக்கியமானதோர் நன்மை- எந்தப் பெண்ணையும் 'மலடி' என்று எவரும் அழைக்க முடியாது என்பதாகும். தங்களுக்குக் குழந்தை இல்லையே என்று எந்தத் தாயும் இனிமேல் ஏங்க வேண்டிய நிலையிலில்லை.

குழந்தை ஒன்றை வயிற்றில் தாங்கி, ஈன்றெடுக்க முடியாத உடல் நிலையிலுள்ள தாய் ஒருத்தி தனது கருமுட்டையில் தனது கணவனுடைய உயிரணுவை வைத்தே வேறோர் பெண்ணின் உதவியுடன் தங்கள் குழந்தையினைப் பெற்றெடுக்க வாய்ப்பேற்படுகிறது. இன்று இவ்வாறு குழந்தைகள் பெற்றெடுக்கப்படுவது மிகவும் பிரபலமாகிவிட்டுள்ளது.

உலகின் பல நாடுகளிலும் 1991ம் ஆண்டில் மொத்தம் 16,000 செயற்கை முறையிலான குழந்தைகள் பிறந்துள்ளன.

ஜோன் பிரவுனும் அவர் மனைவி லெஸ்லியும் குழந்தை இல்லாமல் நீண்ட காலம் வருந்தினர். அதே காலகட்டத்தில் பரிசோதனைக் கூடங்களில் மிருகங்களில் செயற்கையாகச் சினைப்படுத்தும் முறையினை ஆய்வாளர்கள் பரிசோதித்து வெற்றியும் கண்டிருந்தனர்.

டாக்டர் ரொபேட் ஜி. எட்வட்ஸ் மற்றும் டாக்டர் பாற்றிக் சி.ஸ்ரெப்ரோ ஆகிய இருவரும் இத்துறையில் 10 வருடகாலம் ஆராய்ச்சி செய்து வெற்றி கொள்ளும் தறுவாயிலிருந்தனர். இவர்களுடைய உதவியைக் கோரி ஜோன் புரவுண் தம்பதியினர் சென்ற போது, இவர்களை வைத்தே பரிசோதனையினை நடத்தி வெற்றியும் கண்டனர். 1978-ஜுலை 25 அன்று பரிபூரண வெற்றி கிட்டியது. அன்றுதான் லொசி பிறந்தாள்.

தன்னுடைய சாதனையையிட்டுப் பெருமை அடைந்துள்ள டாக்டர் ஸ்ரேப்ரோ, "நாங்கள் எதையும் புதிதாகக் கண்டுபிடித்தவர்களல்லர். இயற்கைக்கு விரோதமாக எதையும் செய்ய முயன்றவர்களுமல்ல; ஆக சில ஒழுங்கு முறைகளை ஒன்று சேர்த்தோம். இயற்கையுடன் ஒத்து உதவி செய்தோம். அவ்வளவுதான். எங்களுடைய இச் செயலால் ஒரு குழந்தை உருவானது" என்று கூறி மகிழ்ச்சியடைகிறார்.

## எப்படி வருகிறது கொட்டாவி?

கொட்டாவி இருக்கிறதே கொட்டாவி. அது ஏன் வருகிறது? எப்படி வருகிறது என்று ஒரு பேராசிரியர் ஆராய்ந்தார்.




அதுவும் ஒரு வருடம் இருவருடமல்ல. பத்துவருடமாய் ஆராய்ந்தார்.

அவருக்கும் கொட்டாவி வந்தது தான்மிச்சம். காரணத்தை கண்டறிய முடியவில்லை. மேரிலாந்து பல்கலைக்கழக பேராசிரியர் ரோபட் புரோவின் என்பவரே அந்த முயற்சியில் ஈடுபட்டார்.

ஆயினும் அவரது ஆராய்ச்சியின் பயனாக கொட்டாவி பற்றி பின்வரும் தகவல்கள் கண்டறியப் பட்டன:

- கொட்டாவி சராசரி ஆறு நொடிகளுக்கு மேல் நீடிப்பதில்லை.
- ஒருவர் களைப்படைந்தால் அல்லது சலிப்படைந்தாலும் கொட்டாவி ஏற்படும். சில வேளைகளில் ஏதாவதுஒரு வகையில் அதிக சிரத்தைகாட்ட நேர்ந்தாலும் கொட்டாவி வரும்.
- தூங்கி எழுந்தவுடனோ, தூங்கப் போகுமுன்னரோ கொட்டாவி வருகிறது.
- உடல் அசதி ஏற்படும் போதும் கொட்டாவி வருகிறது.
- உங்களுடன் இருக்கும் ஒருவர் கொட்டாவி விடுவதை நீங்கள் பார்த்துக் கொண்டிருந்தால் உடனே அது உங்களையும் 'தொற்றிக் கொள்ளும். கொட்டாவியில் எத்தனை விசயங்கள் இருக்கிறது பார்த்தீர்களா? எதற்கும் அடிக்கடி கொட்டாவி விடுவோருக்கு அருகில் இருக்கும் போது கொஞ்சம் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது.



### நீங்கள் நல்லா இருக்கணும் வாழ்வு முன்னேற!

- உருளைக் கிழங்கு சாப்பிட்டால் தாய்ப்பால் பெருகும்.
- உளுந்து இளைத்த உடலைப் பெருக்க வைக்கும்.
- பேரீச்சம்பழம் மூளைக்கு வலிமை தரும்.
- தேங்காய்ப்பால் வயிற்றுப் புண்ணை ஆற்றும்.
- கொத்தமல்லி போதையைத் தணிக்கும்.
- வெற்றிலை ஜீரண சக்தியை அதிகரிக்கும்.
- வெந்தயம் நீரிழிவு நோய்க்கு மருந்து.
- பெருங்காயம் தொந்தியைக் குறைக்கும்.
- சுண்டைக்காய் ஆஸ்மாவுக்கு சிறப்பு நிவாரணி.
- மிளகு கொழுப்புச் சத்தை உடலில் குறைக்கும்.
- கருணைக்கிழங்கு மூல நோயை விரட்டிவிடும்.
- ஆப்பிள் சாப்பிடுவது கண் ஒளியைப் பிரகாசிக்க வைக்கும்.
- மாதுளை நெஞ்சு எரிச்சலை விரட்டும்.

## செயற்கை முறையில் தோல் உற்பத்தி பயன் அளிப்பதாக டாக்டர்கள் கூறுகின்றனர்



மனிதர்களின் இயற்கைச் சருமத்தைப் போன்றே செயற்கை முறையில் தயாரிக்கப்படும் தோல் மனித உடம்பினால் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

தீப் புண்களினால் சருமம் பழுதடைந்தால் இந்தச் செயற்கைச் சருமத்தைப் பொருத்தி புண்ணை ஆற்றிவிட முடிகிறது. சருமப் புற்றுநோய் சிகிச்சைக்கும் இது பயன்படுத்தப்பட்டு வெற்றி கிடைத்திருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

மசாசுசெட்சைச் சேர்ந்த டாக்டர் மைக்கேல் சபோலின்ஸ்கி தனது பண்ணையில் உற்பத்தி செய்த செய்கைத் தோலைக் கொண்டு பல பரிசோதனைகளைச் செய்து வெற்றிகண்டுள்ளார்.

இதன்பயனாக உலகெங்கணுமிருந்து இச் செயற்கைச் சருமத்தைப் பெற ஏராளமான விண்ணப்பங்கள் அவரிடம் வந்துள்ளன. பாரிய அளவில் இவ்வுற்பத்தியைப் பெருக்க இப்பொழுது திட்டங்கள் வகுக்கப் பட்டுள்ளன.

புண்களை-முக்கியமாக தீ சுட்ட புண்களைக் குணப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் முன்னைய சிகிச்சை முறைகளில் மற்றுமொரு மனிதனிடத்திலிருந்தோ அல்லது அதே நபரின் உடலில் வேறெங்காவது இருந்தோ பெறப்பட்டுப் பொருத்தப் படும் தோலை பெரும்பாலான உடல்கள் ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால் டாக்டர் சபோலின்ஸ்கி உற்பத்திசெய்த தோலைப் பயன் படுத்தியபோது சகல சந்தர்ப் பங்களிலும் வெற்றி கிடைத்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனிதனுடைய சருமத்தின் ஒரு சிறு பகுதியை எடுத்தே அதற்கு புரதம் மற்றும் ஊட்டச் சத்துக்கள் கொடுக்கப்பட்டு வேறு பல செயற்கை முறை அம்சங்களும் சேர்த்தே இந்த செயற்கைத் தோல் தயாரிக்கப்படுகிறது.




கதை - கலா
ஓவியம் - திரேஷன்

## விற்றமின் C யில் விசயம் இருக்கிறது!

டெக்ஸாஸ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் பல வருடங்களாக நடத்திய ஆராய்ச்சியின் முடிவில் 15 சதவீத ஆண் மலட்டுத்தன்மைக்கு விற்றமின் C குறைபாடு காரணமாக இருக்கலாம், என்று கண்டறியப் பட்டுள்ளது.

கடந்த 10 வருடங்களாக ஆண் மலட்டுத்தன்மை உள்ளவர்களுக்கு விற்றமின் C கொடுத்துப் பார்த்துக் கணிசமான வெற்றி கண்டிருக்கிறார்கள் இவர்கள்.

விந்தணுக்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொள்வதால் சினை முட்டையை (Ovem) அவற்றால் கருத்தரிக்க வைக்க முடியாமல் போகிறது. இத்தகைய குறை உடைய 30 ஆண்களுக்கு தினமும் 1000 மில்லி கிராம் விற்றமின் C கொடுத்துப் பார்த்ததில் இந்தக் குறைபாடு பெருமளவுக்குக் குறைந்ததோடு விந்தணுக்களின் எண்ணிக்கையும் கணிசமாக உயர்ந்ததைக் கண்டு பிடித்துள்ளார்கள்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## புதுமைத் தொடர்



### அத்தியாயம்—24

ரம்யாவின் தோள்பட்டையில் தோட்டா துளைத்து இரத்தம் வடிந்தது.

தோட்டா பட்டதால் அதிர்ந்த போதும் மறு நொடியே தன்னைச் சுதாகரித்தபடி ரம்யா காரை இயக்க முயன்றாள்.

குலாம்ஷா பதட்டமாய் உணர்ந்தார். பிக்கப் வாகனத்தில் இருந்து எதிரிகள் குதித்து காரை நோக்கி சுட்டபடியே நெருங்கினார்கள்.

கைகலப்பிலும் சரி, துப்பாக்கிச் சமரிலும் சரி பதட்டம் கூடாது. தன்னை மறக்கும் உணர்ச்சி கூடாது. இரண்டுமே கண்பார்வையில் இருந்து எதிரியை மறைக்கும். எதிரி எப்போதும் பார்வையில் இருக்க வேண்டும். ஓங்கி உரிய தருணத்தில் தாக்குவதானாலும், குறி தவறாமல் சுடுவதானாலும் எதிரி கண்ணுக்குத் தெரியவேண்டும். கவனம் சிதறக்கூடாது. வலிமை இருக்கலாம். எதிரியை வீழ்த்தும் வித்தையும் திறமையாய் கற்று இருக்கலாம். ஆனாலும் கவனம் சிதறினால் எதிரியிடம் தோற்பது நிச்சயம்.

குலாம்ஷா ரம்யாவின் அலறல் கேட்டு கவனம் திருப்பியிராவிட்டால் பிக்கப் வாகன சாரதியின் நெற்றிப் பொட்டில் தோட்டா புகுந்திருக்கும். குறி சரியாய் அமைகையில் கவனம் தப்பியதால் சாரதி தப்பினான்.

மோதல்களின் போக்கை சில சமயங்களில் முதல் அடி மாற்றிவிடுவதுண்டு. அந்த அடியின் அதிர்ச்சியில் இருந்து எதிரி மீள்வதற்குள் தோல்வியின் மடியில் விழுத்தி

இம்முறை-

கார் ஒத்துழைத்தது.

ரம்யா முகம் மலர்ந்தாள். தோள்பட்டையின் வலி மறந்தாள்.

கியரை மாற்றி காரை வேகப்படுத்தினாள். துப்பாக்கியில் இருந்து பறந்துபோகும் தோட்டா போல கார் சீறிப் பறந்தது.

எதிரிகள் பின்புறம் இருந்து தோட்டாக்களால் பொழிந்தார்கள்.

குலாம்ஷா தலையைக் குனிந்து கொள்ள ரம்யா காரை வளைத்து நெளித்து- ஆனால் வேகம் குறைக்காமல் லாவகமாய் செலுத்திக் கொண்டிருந்தாள்.

தோட்டாக்கள் தொடும் தூரத்தில் இருந்து கார் விலகிவந்துவிட்டது.

ரம்யாவின் தோள் பட்டையில் இருந்து இரத்தம் வடிந்துகொண்டிருந்தது. காரின் சீற்றை நனைத்துக்கொண்டிருந்தது.

"ரம்யா காரை நிறுத்து."

வேகம் குறைக்காமல் வீதியின் மேலே இருந்த பார்வை அகற்றாமல்,

"ஏன்?"

"தோள் பட்டையில் இருந்து வடிகிறது பார். நீ பின்னால் வந்து இருந்து கட்டுப் போட்டுக்கொள். நான் காரை..."

"வேண்டாம் ஷா. முடிவுவரை செல்லாமல் இனி ஓய்வதில்லை. தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் ஆபத்து. ஒரு பெறுமதியான உயிர் கொடியவர்களால் போய்விடக்கூடாது."

"உன் உயிரும் பெறுமதியானதுதான் ரம்யா. பிளீஸ் நான் சொல்வதைக் கேள்."

ரம்யா சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய் ரம்யா நீ? நான் பொய் சொல்லுகிறேன் என்று நினைக்கிறாயா?

"இல்லை. இதுவரை நான் சந்தித்தவர்கள் என் உடலின் பெறுமதி பற்றித்தான் பேசினார்கள். உயிரைப்பற்றி பேசியிருப்பது நீங்கள் மட்டும்தான் ஷா"

ரம்யாவின் குரலில் ஈரம் தெரிந்தது.

"ரம்யா ஒன்று சொல்லட்டுமா?"

ஷா கேட்டார்.

"சொல்லுங்கள் ஷா."

"என்னை நீ வியக்க வைக்கிறாய்."

"ஆண் பெண்ணையும், பெண் ஆணையும் வியக்க வைத்தலில்தான் வாழ்வின் சுகம் இருக்கிறது ஷா."

"இப்போது புரிகிறது."

கதவை திறக்கக் கை நீட்டிய போது பார்வையில் பட்டது அது.

சாரதி ஆசன கதவின் மையத்தில் தோட்டா ஒன்று துளையிட்டிருந்தது.

"அப்படியானால், ஓ...மை கோட்"

பதட்டமாய் கதவு திறந்து ரம்யாவின் விலாப்புறமாய் பார்வையைப் போட்டவர் அதிர்ச்சியில் உறைந்து போனார்.

ரம்யாவின் விலாப்புறத்தில் இருந்து வழிந்து கொண்டிருந்தது இரத்தம்.

குலாம்ஷா தன்னை மறந்தார்.

"ஓ...ரம்யா...."

வேதனையாய் குரல் எழுப்பினார்.

"மறைத்திருக்கிறாள்! விலாவில் பாய்ந்த குண்டு உயிர் பறிக்கும் என்று தெரிந்த போதும், எடுத்த காரியத்தை முடிக்கும்வரை வலி மறைத்து, உயிர் போகும் என்ற பயம் துறந்து, ரம்யா.....ஓ....என் இனிய பெண்ணே ஏன் இப்படிச் செய்தாய்?"

குலாம்ஷாவின் மனதுக்குள் சோகம் கரை தாண்டியது.

'ரம்யாவின் உயிர் போய்விட்டதா? "ஷா உங்களை சுட்டுவிடுவேன்." என்று குறும்பு செய்து நட்பை பரிசோதித்த போதும் அந்த விழிகளில் தெரிந்த சுத்தமான நேசத்தை மறைக்க முடியவில்லை. உண்மையானவள். உறுதியானவள்.'

குலாம்ஷாவுக்கு வாய்விட்டு அழலாம் போல் இருந்தது. ஷாவின் கரம் நடுங்கியது. மெல்லக் கை உயர்த்தி ரம்யாவின் மூச்சருகே கொண்டு சென்று,

மூச்சுவருகிறதா என்று பார்த்தார்.

என்ன நடந்தது? என்ன நடக்கிறது, காரில் மயங்கிக் கிடப்பது யார்? எதுவும் புரியாமல் குலாம்ஷாவையே பார்த்துக் கொண்டிருந்தது பொலிஸ் நிலையம்.

■

மலர் பணிந்து சொரிந்த தேனை உதடுகளால் பருகிக் கொண்டிருந்தவர் நந்தகோபால். டாக்டர் நந்த கோபால். தேன் வழங்கிக் கொண்டிருந்தவள் ஜெனிற்றா. நந்த கோபாலின் காதலி. அவள் 24 வயது என்று சொன்னாள். ஐந்து வயதை ஏன் கூட்டிச் சொல்கிறாள் என்று நீங்கள் யோசிக்கத் தொடங்கிவிடுவீர்கள். 47வயது நந்தகோபாலுக்குப் பிடித்தமான பெண்களில் ஜெனிற்றாவுக்குத் தான் முதலிடம். அவள் உடலின் அத்தனை இடங்களும் நந்தகோபாலுக்கு

நந்தகோபால், பெரிய மனிதர்கள் என்ற போர்வைக்குள் உள்ள குற்ற உலகின் மன்னர்களுக்கு வைத்தியம் பார்ப்பவர். அவர்களின் வெளிப்படையான, இரகசியமான வியாதிகளுக்கு மிக இரகசியமாக சிகிச்சையளிப்பவர். அதனால் மிகத் தாராளமான கரன்சி நோட்டுகளை சேர்த்து வைத்திருப்பவர். எனினும் நந்தகோபாலுக்கு பெரிய- பெரிய ஆசைகள் உண்டு. அந்த ஆசைகளில் இரண்டு, ஒன்று பணம்; இன்னொன்று பெண்கள். தினமும் சுகம்தர இரவில் ஒரு பெண் வேண்டும். அதற்காகவே அழகான முத்திரைகள் சேகரிப்பது போல நிறையப் பெண்களை சேகரித்து வைத்திருக்கிறார். எனவே செலவுக்கும் அதிகப் பணம் வேண்டும்.

இப்போது நந்தகோபாலுக்கு ஜெனிற்றா வேண்டும். ஜெனிற்றாவின் மார்பில் நந்தகோபால் கை வைத்து, மெத்தென்ற உணர்வில் தன்னை மறந்து உள்ளே ஒரு சுகம் உணர்ந்து கொண்டிருக்க,

நந்தகோபாலின் பின்புறமாய் இருந்த ஜன்னலில் ஒரு உருவம் அசைந்தது.

ஜன்னலின் கண்ணாடிகள் மூடப்பட்டிருந்தன. அதனால் நிழலாய்த் தெரிந்தது உருவம். அதன் கரத்தில் இருந்தது கைத்துப்பாக்கி.

நந்தகோபாலின் மார்பில் இருந்து இதழ்கள் விலக்கி, நிமிர்ந்த ஜெனிற்றாவின் பார்வை தற்செயலாக ஜன்னலின் மீது விழுந்தது.

மறுகணமே திகைத்து, பின்னர் உசாரானாள். மனதுக்குள் சிரித்துக் கொண்டாள். 'நந்தகோபாலின் கணக்கு முடியப் போகிறது' என்று நினைத்துக் கொண்டாள்.

நந்தகோபாலை கவனம் மாறவிடாமல் இறுக்கமாய்க் கட்டியணைத்தாள். நந்த கோபாலின் மேல் உதட்டை தன் இதழ்களால் கவ்வியபடி அவரது வயிற்றை கரங்களால் தடவிக் கொடுத்தாள்.

ஜன்னலின் மீது அந்த உருவம் கைவைத்த போது, ஜன்னல் சப்தமில்லாமல் ஒத்துழைத்தது. மெல்லத்திறந்தது கதவு. மூடப்பட்டிருந்த போதும் கொக்கி மாட்டப்படவில்லை. அது ஜெனிற்றா செய்த ஏற்பாடு.

இப்போது நந்தகோபாலின் பின்புறமாய் குறிவைத்து நீண்டது கைத்துப்பாக்கி.

வானை செலுத்துவது கூட உன் சாரதியேதான். அவனுக்கு ஒரே ஒருநாள் சொர்க்கத்தைக் காட்டினேன். பட்சி கட்சி மாறிவிட்டது."

கண்சிமிட்டினாள். தனபாலுக்கு உலகத்தின் மீதே வெறுப்பு வந்தது. 'துரோகத்தில் தொடங்கியது துரோகத்தில்தான் முடியும், என்பதை உணராமல்போனோமே' என்ற எண்ணம் கூட எட்டிப்பார்த்தது. நெருக்கடியான நேரத்தில்தான் சிலருக்கு தத்துவங்கள் அர்த்தமுள்ளவையாகத் தெரிகின்றன. தனபாலுக்கும் அப்படித்தான்.

எனினும், தன்னையே ஜெயித்திருக்கும் அந்த மனிதன் யார் என்பதை அறிய விரும்பினான்.

"உன் புதிய எஜமான் அதுதான் பொஸ் யார் என்று அறியலாமா?"

போலி மதுமிதா ஒரு புன்னகையோடு சொன்னாள்.

"நந்தகோபால் - டாக்டர் நந்தகோபால்."

அவள் சொல்ல, சூறாவளி வீசிய பிரதேசம் போல வெறுமையானது தனபாலின் முகம்.

"என்ன அதிர்ச்சியாக இருக்கிறதா தனபால்? நந்தகோபாலை மலை போல நம்பியிருந்தாய். அந்த மலை இப்போது உன் மீது விழுந்து நசுக்கிவிட்டது தனபால்."

"நீ...உண்மையாக..."

"த்தான் சொல்கிறேன். ஆனால் இப்போது உன்னை நான் நந்த கோபாலிடம் கொண்டு போகப் போவதில்லை. ஏன் என்றால் நந்தகோபால் இந்த நேரம் செத்த பிணமாய் மாறியிருப்பான்."

அதிர்ந்து அவள் முகம் பார்க்க,

"யெஸ், அதிர்ச்சி மேல் அதிர்ச்சி காத்திருக்கிறது தனபால். நீ இதற்கே அதிர்ந்து போனால் எப்படி? பாக்கி வைத்திருந்தால்தான்இன்னும் வரும் திருப்பங்களையும் சந்திக்க வசதியாய்இருக்கும்."

சொல்லிவிட்டுச் சிரித்தாள். இதே சிரிப்பை கட்டிலில் கிடந்த போது அவளிடம் பார்த்திருக்கிறார். இப்போதுஅவர் கைகளை கட்டிவைத்துவிட்டும் அதே சிரிப்பு.

"புதிய பொஸ் யார் என்று தெரியுமா தனபால்?"

கேள்விக் குறியாய்ப் பார்க்க அவளோ சொன்னாள். பெயரைச் சொன்னாள். தனபால் தன்னைச் சுற்றி மனிதர்கள் எவருமே

அதன் சுவை அறிய வைக்க நிறைய சந்தர்ப்பம் உண்டு.

அத்திவாரம் பலமாய் இருந்தால் கட்டிடம் உயர்ந்துகொண்டு போகலாம். கட்டிடக் கலையில் உள்ளது போலவே போர்க்களத்திலும் முதல் அடி சரியான கோணத்தில், சரியான இலக்கில் விழுந்தால் எதிரியின் அணி திகைத்துப்போகும். மீள்வதற்கு சந்தர்ப்பமே இல்லாமல் தொடர்ந்து தாக்கினால் போதும்.

பிக்கப் சாரதி தோட்டா வாங்கி மரணம் அணைத்திருந்தால் வாகனத்தில் இருந்தவர்கள் இத்தனை ஆக்ரோசமாய் முன்னேறியிருக்க முடியாது.

களத்திலே குதித்துவிட்டால் நேசம், பாசம், இரக்கம் என்பதெல்லாம் ஒரு புறத்தில் போடப்பட்டுவிடவேண்டும். உறவு முறைகள் கூட அப்படித்தான்.

குலாம்ஷாவை ரம்யா மீது கொண்ட நேசம் குறி தவற வைத்துவிட்டது. "ரம்யாவுக்கு என்னவாயிற்று?" என்ற நேசம் சுமந்த பதட்டம் எதிரியை கலங்கவைக்கும் தருணத்தைப் பறித்துவிட்டது.

இரும்பு மனிதன் என்று பிறரால் பேசப்பட்ட குலாம்ஷாவுக்குள் இருந்த இன்னொரு குலாம்ஷா ரம்யா என்ற தூய நட்பால் அன்பில் தோய்ந்து போனதால் ஏற்பட்ட தடுமாற்றம்.

எதிரிகள் நெருங்கிக் கொண்டிருக்க குலாம்ஷா தன் ஏ.கே47ஐ இயக்கத் தொடங்கினார். பதட்டத்தின் தாக்கத்தால் குறிகள் தவறின. தோட்டாக்கள் சொன்னபடி கேட்காமல் திசை மாறிப்போய்க் கொண்டிருந்தன.

ரம்யா மீண்டும் காரை ஸ்டாட் செய்ய எத்தனித்தாள்.

"இதுவரை புரியவில்லையா?"

"யெஸ், உன் நட்பை பெறும்வரை."

கார் விரைந்து போய்க் கொண்டிருந்தது. குலாம்ஷா எப்போது பொலிஸ் நிலையத்தை அடைவது என்ற தவிப்போடு இருந்தார். தவிப்புக்குக் காரணம் ரம்யா. ரம்யாவின் இரத்தம் சிந்தப்படுவது தன் சொந்த இரத்தம் சிந்தல் போல் குலாம்ஷாவுக்குள் வேதனை வியாபித்துக்கொண்டிருந்தது.

'பொலிஸ் நிலையம்' என்று சொல்லிக் கொண்டிருந்த அறிவித்தல் பலகை, விரைந்துவரும் காரை வரவேற்பதுபோல் தெரிந்தது.

விரைந்து வந்து நிலைய வாசலில் கார் நிற்க, வெளியே காவல் பணியில் நின்ற பொலிஸ்காரர் முகத்தில் சந்தேகத்தை நிரப்பிக்கொண்டு அருகே வந்தார். காருக்குள் பார்வை செலுத்தியவர் ரம்யாவின் இரத்தம் பார்க்க திகைத்துப் போனார். காரின் பின் சீற்றுக்கும் பார்வை நகர்த்தியவர் இன்ஸ்பெக்டர் ஷாவைப் பார்த்தும் அதிர்ந்து பின் நிமிர்ந்து கம்பீரமாய் ஒரு சல்யூட் வழங்கிவிட்டு ஓடிப்போய் வாயில் கேற் திறந்து காருக்கு வழிவிட்டார்.

உள்ளே போய் கார் நிறுத்தி அப்படியே ஸ்ரியறிங்கின் மீது மயக்கமாய்ச் சரிந்தாள் ரம்யா.

வேகமாய் குலாம்ஷா கார்க்கதவு திறந்து இறங்கினார். குலாம்ஷாவைக் கண்டதில் பொலிஸ் நிலையத்தில் பரபரப்பு தொற்றிக் கொண்டது. இரு பொலிஸ்காரர் ஓடிவந்து சல்யூட் வழங்கிவிட்டு உத்தரவுக்காகக் காத்து நின்றார்கள்.

ரம்யாவை கீழே இறக்க காரின் முன்




பரிச்சயம்.

ஜெனிற்றா நந்தகோபாலை தடுக்கவில்லை. நந்தகோபால் தன் கரங்களை சுதந்திரம் கொடுத்து ஜெனிற்றாவின் அழகான உடலில் தீவிர ஊர்வலம் நடத்தவிட்டிருந்தார்.

ஜெனிற்றா நந்தகோபாலின் மார்பை மெல்ல வருடிக்கொடுத்தாள். சட்டையின் பொத்தான்களை விலக்கினாள். வெற்று மார்பில் கை செலுத்தி விஷமம் செய்தாள். நந்தகோபால் கூச்சத்தால் நெளிந்து அவள் இதழ்களில் இருந்து உதடு விலக்கி "ஜெனி" என்று முணு முணுத்தபடி இறுக்கமாய் அணைத்தார். ஜெனிற்றா நந்தகோபாலை பைத்தியமாக்க நினைத்து தன் இதழ்களை அவர் மார்பில் பொருத்தி வித்தை காட்டினாள். நந்தகோபால் கண்களை மூடி அந்த சுகத்தில் திளைத்தார்.

ஜெனிற்றா "வன்-ரூ.திறீ ரெடி" என்று மனதுக்குள் சொல்லிக்கொண்டாள்.

■

வைத்தி என்று இதுவரை அழைக்கப்பட்ட தனபால் அந்த மெரூன்கலர் வானின் பின்புற இருக்கையில், கைகள் கட்டப்பட்டு இருத்தி வைக்கப்பட்டிருந்தார்.

அவர் முன்னே போலி மதுமிதா கால்மேல் கால்போட்டபடி அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"தனபால் ! அரைமணி நேரம் முன்புவரை நீ ராஜா. இப்போது நீ கைதி. என் அடிமை. நிலமை எப்படியெல்லாம் மாறுகிறது பார்த்தயா?"

அவள் சொல்ல தனபால் வெறுப்பாய் பார்த்தான்.

"உனக்கொன்று தெரியுமா தனபால்?

இருக்கவில்லை என்பதை உணர்ந்தான்.

■

டி.ஐ.ஜி டென்சில் மதுமிதாவை பார்வையால் ஆராய்ந்தார்.

"வியப்பாக இருக்கிறதா டி.ஐ.ஜி? என் தேவையில் பொய் இல்லை. எனக்கு உயிர் வேண்டும். வைத்தியின் உயிர்."

"தந்தையின் உயிர் வேண்டும் என்று மகள் கேட்பது......?"

டி.ஐ.ஜி. பேச்சை முடிக்குமுன் குறுக்கிட்டாள்,

"வைத்தி என் தந்தையுமல்ல. நான் அவன் மகளுமல்ல."

'போலி மதுமிதாவும் இப்படித்தான் சொன்னாள். இவளும் அதையே சொல்கிறாள். முதலில் யார் போலி என்பதைக் கண்டறிய வேண்டும்.' டி.ஐ.ஜி டென்சில் மனதிற்குள் நினைத்துக்கொண்டார்.

அதே நேரம் ஒரு பொலிஸ்காரர் விரைந்து வந்தார். சல்யூட் ஒன்றை வழங்கிவிட்டு டி.ஐ.ஜியின் அருகில் வந்தார். கையில் வோக்கி டோக்கி வைத்திருந்தார்.

இன்ஸ்பெக்டர் அரவிந்தும் இன்ஸ்பெக்டர் ரஞ்சித்தும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். பார்வைகளில் சந்தேகம் இருந்தது.

டி.ஐ.ஜியை நெருங்கிய பொலிஸ்காரர் மறு விநாடி தன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கைக்குண்டை வெளியே எடுத்து அதன் கிளிப்பை பற்களால் பிடுங்கி எறிந்தான்.

விபரீதம் புரிந்து உசார் அடைவதற்குள் நடந்த நிகழ்ச்சி.

தடுக்க முடியவில்லை.

(இன்னும் வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: தங்கராசா முத்துகிருஷ்ணா
வயது: 22
முகவரி: 85/5, வென்றோயன் வீதி, கொழும்பு-13.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், கதைப் புத்தகம் பார்ப்பது.



பெயர்: வே. மாலா
வயது: 19
முகவரி: இல.116, அம்பாக்கோட்டை, செங்கடகல.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், கதைப்புத்தகம் வாசித்தல், சிந்தித்தல்.



பெயர்: ஏ.எம். ராபிக்
முகவரி: மொனராகலை பாம், இப்பாகமுவ.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், கிரிக்கெட் விளையாடுதல்.



பெயர்: எம்.எஸ்.எம்.ரபீக்
வயது: 23
முகவரி: K.K.M.C SERVICE DEP. P.O.BOX. 10023 HAFAR AL BATIN 31001 K.S.A.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: கே. வசீகரன்
வயது: 19
முகவரி: AMWASSER 138, 8049, ZURICH SWITZERLAND
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி பார்த்தல், விளையாடுதல்.

பெயர்: எச். நூறுல் ஹிதாயா
வயது: 16
முகவரி: காடன் சிற்றி, தியத்தலாவை.
பொழுதுபோக்கு: வானொலி, கதைப் புத்தகங்கள், தொலைக்காட்சி பார்த்தல்.

பெயர்: ஏ.எஸ். கியாம்
வயது: 22
முகவரி: 181/27சீ, டீன்ஸ் வீதி, மருதானை, கொழும்பு-10.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.

பெயர்: செல்வி பிரமிளா குமார்
வயது: 17
முகவரி: இல. 10/3, மீதொடமுல்ல லேன், வெல்லம்பிட்டிய, கொலன்னாவ.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல், வானொலி, பத்திரிகைக்கு ஆக்கம் எழுதுதல்.

கற்பனை கலந்திருக்கிறது ஆனால் யாவும் கற்பனையல்ல!

சிறுகதை

# நல்ல கணவர் நல்ல நண்பர்

-முகில் வண்ணன்-

மிஸ்ஸிஸ் ரதிமலர் எம்.எஸ்.சி. இப்போது யு.கேயில் வேலை செய்து கொண்டே பி.எச்டி. பட்டத்திற்காகப் படித்துக் கொண்டிருக்கிறாள்.

அவள் ஒரு மாஜி மிஸ்ஸிஸ் தானே தவிர இப்போது அவள் தனியன் தான். இத்தனை நாளும் சலனம் இன்றித் தன் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்த வளுக்கு சில நாட்களாக எண்ணக் குளத்தில் யாரோ கல்லை அடிக்கடி எறிய அது எண்ண அலைகளாக வட்டமிட்டு விரிந்து கொண்டிருந்தது.

மலர் இன்று வேலையில் இருந்து வரும் போதும் அவனைச் சந்தித்தாள். அவன் பெயர் ரங்கநாதன். ரங்கா என்று தான் அவனை எல்லோரும் அழைப்பார்கள். தனது சொந்தக்காரர் ஒருவர் மூலம் அவளுக்கு அவன் அறிமுகமானான். அவனும் பி.எச்.டி பட்டப் படிப்பினைத் தொடருவதால் உதவும் என்று ஏற்படுத்தப் பட்ட அறிமுகம்.

அந்த அறிமுகம் நாளடைவில் அவர்களை நல்ல நண்பர்களாக்கி விட்டது. இருவரும் எம்.எஸ்.சி. இருவரும் பி.எச்டிக்குப் படிக்கிறார்கள். இருவரும் ஒரே இடத்தில் வேலை பார்க்கிறார்கள். நல்ல படிப்பாளிகள். இன்டெலெக்சுவல்ஸ் இருவரும் சேர்ந்தால் பேச்சுக்கும் விவாதத் திற்கும் விடயமா இல்லை. இருவரும் தனியனாக இருப்பவர்கள். மனம் துணையைத் தேடி ஏங்கும் என்பது சொல்லியா தெரிய வேண்டும்!

நல்ல நட்பு அவர்களை ஒருவரது அந்தரங்க விஷயங்களை அறியும் அளவிற்கு அவர்களுக்குள் நெருக்கத்தை ஏற்படுத்தி விட்டது.

அதனாலன்றோ அவன் அப்படிக் கேட்டான். மலர் முதலில் கலக்கமடைந் தாலும் பின்னர் அவன் கொடுத்த அவகாசத்தில் சிந்தித்த போது தன் நிலையும் மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்று உணர்ந்தாள்.

"எனக்கு இன்னுமொரு திருமணமா?" என்று அல்லாடிக் கொண்டிருந்த நெஞ்சம்- "அப்படி இல்லை என்றால் என் நிலை என்ன? என் எதிர்காலம் என்ன? ரங்கா கேட்டதில் என்ன தப்பு? ஏன் நான் அந்தக் கோணத்தில் சிந்திக்கக்கூடாது?" என்று பல கேள்விகளை இப்போது எதிர்நோக்கிக் கொண்டிருந்தது.

இவற்றிற்கான விடையைத் தேடும் போது அவளது கடந்தகால வாழ்க்கை அவளுக்குள் படம் போல் ஓடிற்று.

அப்பா பெயர் வடிவேல். பக்கத்து வீட்டில் குடியிருந்தவர் தங்கவேல். சொந்தம் இல்லை. என்றாலும் தான் பிறந்ததில் இருந்து அங்கு வந்து குடியிருக்கிறார் என்று அறிய முடிந்தது. அவர்களுக்கு ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் ஞானவேல்.

அவனுடன் சேர்ந்து மலர் கூட்டாஞ் சோறு ஆக்கியது அம்மா அப்பா விளையாடியது, நர்சரி முதல் ஒன்றாகவே படித்தது, ஓ.எல் படித்து முடிந்ததும் ஏ.எல்படிக்க இருவரும் ஒரே பாடசாலைக்குச் சென்றது. இருவரும் ஒன்றாகவே சென்று வந்தது. அப்போதே இருவருக்கும் காதல் அரும்பியது.

ஆனாலும் வீட்டில் சொல்லாமல் மறைத்து வைத்தது. தாங்கள் ஒன்றாகப் படிப்பதால் படிப்பு, சம்பந்தமாகவே பிள்ளைகள் பேசுகிறார்கள், பழகுகிறார்கள் என்று பெற்றோர் எண்ணியது. எல்லாம் அவள் மனக் கண்முன்னால் இப்போது படமாக ஓடுகின்றது.

இருவரும் பி.எஸ்.சி பாஸ் அவுட்டாகி வந்ததில் ஊரே மகிழ்ச்சியில் தங்களை வாழ்த்தியதும் சில நாட்களில் ரங்காவுக்கு ஓமானில் வேலை கிடைத்து அவன் சென்றதும் நல்ல ஞாபகம்.

இனித்தான் தங்கள் காதல் அம்பலத் துக்கு வரும் என்று கண்டாளா என்ன? வாரம் ஒரு கடிதம் மலருக்கு வந்த வண்ணம் இருந்தது. மலர் எப்படி மூடி மறைப்பாள். மகன் தங்களுக்கு கடிதம் எழுதவில்லை என்றாலும் பக்கத்து வீட்டு மலருக்குக் கடிதம் போடுவான் என்று தெரிந்த பெற்றோர் 'என்ன விஷயமாம்?' என்று கேட்டுத் தெரிந்து கொள்ளுவார்கள்.

மிஸ்டர் வடிவேலுக்கு சந்தேகம் வலுக்கவே ஒரு நாள் மகளின் கடிதத்தை உடைத்துப் பார்த்தார். அது பிழையான விஷயம் தான். என்றாலும் தான் தன் மகளில் எவ்வளவு அசிரத்தையுடனும் அக்கறை இன்றியும் இருந்து விட்டோம் என்பதை உணர்ந்தார் வடிவேல்.

திருமணப் பேச்சை எடுத்ததும், "நான் நஞ்சு குடிப்பேன். சாகுவேன். எனக்கு ஞானவேலை விட்டால் வேறு எவரும் வேண்டாம்" என்று அடம் பிடித்தாள் மலர். அவள் என்ன சின்னப்பிள்ளையா அடித்துத் திருத்த. பேசிப் பார்க்கலாம். ஆனால் பெற்றோருக்கே பாடம் சொல்லும் பிள்ளைகள் அல்லவா இப்போது!

என்னவென்று சொல்லத் தெரியாத காரணத்தினால் தங்கவேல் குடும்பத்தை வடிவேலும் மனைவியும் விரும்பவில்லை.

"இப்படி ஒரு சம்பந்தம் ஏற்படும் என்று அறிந்து இருந்தால் வீட்டையே விற்று விட்டு இடம் மாறி இருப்பேன்" என்றார் வடிவேல். மகளின் பிடிவாதத்தை எண்ணிக் குமைந்தார் வடிவேல். சொல்லத் தெரியாத காரணத்தினால் அவரது வாதம் மகளிடம் எடுபடவில்லை. மாறாகத் தான் விரும்புவதற்கான காரணங்களை ஒவ்வொன்றாக எடுத்து வைத்தாள் மலர்.

வேறு வழியின்றி வடிவேல் ஏற்றுக் கொண்டார். ஒரு வருடம் லீவில் வந்த போது இருவரது திருமணமும் விமர்சையாக நடந்தேறியது. ஞானவேலுக்கு 'ஃபெமிலி ஸ்டேடஸ்' இருந்ததால் ஒரு மாதத்திலே மனைவியுடன் ஓமான் நாட்டில் குடியேறி விட்டார்கள். குடித்தனம் புதிதில் எல்லாம் இன்பம் பொங்கும் வெண்ணிலவுதானே. எதுவும் மாற்றம் தென்படவில்லை. அப்படித்தான் அவர்கள் குடும்பமும் மகிழ்ச்சியில் திளைத்தது என்று இருவரும் எண்ணிக்கொண்டிருந்தனர்.

ஆனால் அவர்களை அறியாமல் மலரின் மனதில் ஒரு வெறுப்பு உருவாகி வந்ததும் அதனால் அவள் அவன்மேல் அக்கறை இன்றி வெறுப்பாக நடக்கத் தொடங்கியதும் காரணம் என்ன என்பதை ஆராயலானாள் மலர்.

கல்லானாலும் கணவன் என்று வாழ்ந்த காலம் போய் காரணம் என்ன என்று ஆராயும் காலம் இதுவல்லவா? படித்த வளுக்கு இது சொல்லியா கொடுக்க வேண்டும். பத்தாம் பசலி இலையே மலர். தனது ஆராய்ச்சியின் முடிவை அவள் ஞானவேலிடம் கூறியபோது அவன் அதிர்ந்து போனான்.



"எனக்கு உங்களுடைய குடும்ப வாழ்க்கையில் திருப்தி இல்லை. அந்தத் திருப்தியை நீங்கள் தர முடியும் என்பதில் எனக்கு நம்பிக்கையும் இல்லை. நான் வெறும் ஜடம் போல் வாழ விரும்பவில்லை. ஸோ வீ சேல் பாட் சூண்....." என்றாள் மலர்.

"என்ன மலர் சொல்கிறாய்? நான் உனக்கு என்ன குறை வைத்தேன்? நீ ஏன் இப்படிப் பேசுகிறாய்? ஒரு தமிழ்ப் பெண் பேசும் பேச்சா இது? ஒரு குடும்பத்தில் இதெல்லாம் சகஜமே! எல்லாம் போகப் போகச் சரிவரும். நான் என்ன செய்ய வேண்டுமோ சொல். செய்கிறேன். பிரிவோம் என்று மட்டும் சொல்லாதே. திருமண பந்தம் என்பது வேண்டாத போது வெட்டி எறிந்து விடக்கூடிய பந்தமல்ல. ஒரு இந்துக் குடும்பத்தில் நமது குடும்பங்களின் மானம் மரியாதைக்காக எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு வாழ்வதுதான் நமது கடமை."

"சொறி என்னை மன்னிச்சுக்குங்கோ. யாருக்காகவும் நான் என்னைப் பலியிடத் தயாராய் இல்லை. எனக்கு வேண்டிய தெல்லாம் என்னுடைய வாழ்க்கை. அதுதான் முக்கியம். ஸோ ஐ.ஆம் டிசைடட்" என்று முடித்தாள்.

அடுத்த வருடத்துக்கு விடுமுறைக்கு வந்த போது அந்தத் தீர்மானத்துடனே வந்தார்கள். ஆமாம் இருவர் சம்மதத் துடனும் வழக்குப் பதிவாகிவிட்டது. ஞானவேல் பவர் ஒப் அற்றோனிமூலம் தனது முடிவை அறிவித்து விட்டு உடனே ஓமான் சென்றுவிட்டான்.

ஏதோ ஒரு கனவு கண்டு விழித்தது போல் அவர்கள் திருமண பந்தம் முறிந்து விட்டது.

சில நாட்கள் வீட்டில் சும்மா இருந்த மலர் யு.கேயில் இருக்கும் தனது சொந்தக் காரர்களுக்கு தனது நிலைமையையும் விருப்பத்தையும் எழுத, அவர்களும் சம்மதிக்க இப்போது இங்கு வந்து வேலை செய்துகொண்டே படிக்கிறாள்.

"மலர் நீங்கள் வெளிப்படையாக நடந்து கொண்டதை நான் பெரிதும் பாராட்டு கின்றேன். தற்ஸ் குட். வாழ்க்கையை வீணாக்காமல் எடுத்த நல்ல முடிவு. ஆனால் இங்கு ஒரு'போய் பிரண்ட்' இல்லாமல் ஒரு பெண் வாழ்வதென்பது சுத்த அபத்தம். பத்து வயதுப்பையனுக்கே ஒரு கேள் பிரண்ட் இருப்பாள். அப்படி இல்லை என்றால் அது ஒரு கௌரவக் குறைவு மாதிரி."

"ஆகவே என்னை உங்கள் பாட்னராக சேர்த்துக் கொள்வதில் தப்பில்லை. நான் ஊருக்குச் சென்று ஒரு தமிழ்ப் பெண்ணை மணக்க வேண்டும் என்று காலத்தைக் கடத்தி விட்டேன். உங்களைக் கண்ட பின்னர் அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டேன். அதற்காகத்தான் இந்த ஒருவருடமாக காத்து இருந்த நான், இன்னும் காலத்தை வீணாக்கக்கூடாது. ஏன் நீங்கள் என்னை 'ட்றை' பண்ணிப் பார்க்கக்கூடாது? நான் ஒரு நல்ல கணவனாக இருப்பேன் என்ற நம்பிக்கை இருக்கிறது. யோசித்து முடிவைச் சொல்லுங்க. ஒரு கிழமை அவகாசம் தருகிறேன்" என்று கூறி இருந்தான்.

இன்றும் அவனுடன் வேலை செய்து விட்டு வரும் வழியில் அவனே வீட்டில் 'ட்றொப் பண்ணிவிட்டுச் செல்கிறான். நாளை ஞாயிறு. திங்கட்கிழமை முடிவைச் சொல்ல வேண்டும். வேலையில் இருந்து திரும்பியவள் சோபாவில் ஆடாமல் அசையாமல் இருக்கிறாள்.

எனக்கு மீண்டும் திருமணமா? என்று எண்ணும் போது அவளுள் ஒரு இன்பக் கிளுகிளுப்பு. ஆனால் ஏற்பட்ட ஏமாற்றம் அதற்குத் தடையாக இருந்தது. மீண்டும் அதே வகை ஏமாற்றம் என்றால் என்ன செய்வது?

ரங்கா கூறியது போல் 'ட்றை' பண்ணிப் பார்ப்பதா? அதன் பின் ஒதுக்கி விடுவதா? நல்ல கணவனாக- எனக்குத் திருப்தியாக இல்லை என்றால் என்ன செய்வது? பேசப் பழக எல்லோரும் நல்லவரே குடும்ப வாழ்க்கைக்கு என்று சில தகுதிகள் வேண்டுமே! சும்மாவா நமது முன்னோர் குடும்பத்துக்கு ஒரு துணையைத் தேடிக் கொள்வதற்கும் சில சட்ட வரையறைகளை வகுத்து வைத்தது? யோனிப் பொருத்தம், வசியப் பொருத்தம், இராசிப் பொருத்தம் என்று சில அடிப்படைப் பொருத்தங் களாவது பொருந்தாவிட்டால் அந்த வாழ்க்கை வீண் என்று தடுக்கவில்லையா? சிலர் கேட்கலாம் அப்படிப் பொருத்தம் பார்த்தவற்றிலும் சில தவறி விடுகின்றதே என்று. அதற்குக் காரணம் தவறு பொருத்தத்தில் அல்ல. அதைக் கணித்தவர் களிலே தங்கி இருக்கிறது. எப்படியோ ஒரு பெண் கரை சேரட்டும் என்று பிழைகளை மூடி மறைத்து வைத்து கழுவேற்றி விடுகின்றார்கள். இதுதான் உண்மை. இப்படிப் பார்க்காததிலே மேலை நாட்டில் விவாகரத்துப் பெருகி திருமணம் என்பது வெறும் கேலிக்கூத்தாக இருக்கிறது.

பண்பாட்டை வளர்க்கும் நாட்டில் அதை உதாசீனம் செய்துவிட்டு வந்த மலர் பண்பாட்டை உதாசீனம் செய்யும் நாட்டில் இருந்து அதுபற்றித் தீவிரமாகச் சிந்தித்தாள். நிழலின் அருமை வெய்யிலில்தானே தெரிகிறது.

"ரங்கா ஏன் எனக்கு ஒரு நல்ல கணவராக இருக்க முடியாது? அவர் சொல்வது போல் 'ட்றை' பண்ணிப் பார்த்தால் என்ன? எனக்கும் ஒரு ஆண் துணை வேண்டும் தானே, அப்படி இல்லை என்றாலும் நல்ல நண்பர்களாக இருப்போம். இங்குதான் வேண்டும் போது சேர்ந்து பிரிகிறார்களே!" இவ்வாறு மூளையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருந்தாள் மலர்.

சிறிது நேர சிந்தனைக்குப் பின் அவள் எழுந்த போது "ஐயாம் சுவர் ரங்கா, நல்ல கணவராக இல்லாவிட்டாலும் நல்ல நண்பராக இருப்பார். நல்ல புரிந்துணர் வுடையவர். ஓ.கே...." என்று எழுந்தாள்.

ஆடையை மாற்றியதும் பம்பரமாகச் சுழன்றாள். இனி சிந்திப்பதற்கு எதுவும் இல்லை. அவளுக்கு நேரமும் இல்லை. தனது வேலைகள் அனைத்தும் அப்படியே கிடந்தன. மெசின் இயந்திரம் போல் வேகமாக அவை அனைத்தையும் செய்தாக வேண்டும் மலர்.

■

இதிலும் வித்தியாசம் உண்டு

# வாழ்க்கையென்றால் ஆயிரம் இருக்கும்!

-எம். சுரேஷ்-

மாலை 5 மணி. இடம் வெள்ளவத்தை. வேலைவிட்டு வெளித் தள்ளப்படும் ஊழியர்கள் கூட்டம் கூட்டமாய் பல வர்ணப் பறவைகள் போல்....... சிவாவுக்குள் ஒரு பதட்டம்.

சூரியன் சிவப்பாகி, அடிவானத்தில் முத்தம் பதிக்க நாணத்தில் மயங்கிய மாலைவானம் செந்நிறமாய்க் கன்னம் நீண்ட ஓர் அற்புதமான காட்சி... கடற் கரைக் காற்றுக்கும் பஞ்சமில்லை. ஆனாலும் மேனி வியர்த்தது.

அவன் இன்னும் தெருக்கோடியில் இருக்கும் பொதுத் தொலைபேசி நிலையத் தினுள் மறைந்திருந்தான். காரணமின்றி அங்குமிங்கும் நடந்தான், பதட்டப் பட்டான்..... அவன் விழிகள் எதிர்ப் பக்கமாக நீண்டு வளையும் சாலையை உற்றுநோக்கிக் கொண்டிருந்தன..... "சில வேளை சித்ரா வரமாட்டாளோ?" மனது சஞ்சலப்பட்டது. கடிகாரத்தைப் பார்த் தான். நேரம் 5.45..... லேசான ஒரு சோகம், முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

நேரம் போகப் போக எதிர்பார்ப் புக்கள் வெகுவாகக் குறைய ஆரம்பித்தன. நம்பிக்கையின்றி மீண்டும் அந்த நீண்டு வளையும் சாலைக்குள் பார்வையை செலுத்தியவன் புன்னகைத்தான்...... "அது..... அது...... சித்ராதானே?" தனக்குத் தானே கேட்டவன் "ஆமாம்" உறுதிப் படுத்திக் கொண்டான். இப்போது அவன் கைகள் லேசாக நடுங்கின!

அவள் மிக அழகாய் இருந்தாள்.....ஒரு நிலவைப் போல் அபிராமியைப் போல்.... ஆரவாரமில்லாத நடை..... தன் அழகான கூந்தலை மேல் நோக்கி வாரிச் சீவி யிருந்தாள். தன் உடற் கட்டுக்கும் நிறத் திற்கும் ஏற்ற நீலநிறச் சட்டையும், அதே நிறத்தில் பெரிய இடுப்பு "பெல்ட்"டும் அணிந்திருந்தது பலரது கண்களை கிறங்க வைத்தது..... யார் யாரையோ பார்த்துப் புன்னகைத்தாள்.... கிள்ளினால் சிவக்கும் நிறத்தில் இருந்த மேனி இன்னும் மெருகேறியிருந்ததோடு எற்கனவே சிவந்த இதழ்களில் அவள் பூசியிருந்த "லிபஸ்டிக்" சிவாவை பெருமூச்சுவிட வைத்தது.

சிவராகவன் என்ற டாக்டர் சிவா அவசரப்பட்டான்.... "ச்சே....இனியும் பொறுத்திருக்கிறதில அர்த்தமில்லை...... எத்தனை நாளைக்குத்தான் நான் இதை மனதுக்குள்ளேயே வைச்சிக்கிட்டு அவஸ்த்தைப்படுறது......?"

"இன்னிக்கு எப்படியாவது எம்மனசில உள்ளதை அவகிட்டச் சொல்லிடணும்....."

"சிலவேளை அவள் ஏதாவது எடுத்தெறிஞ்சு பேசிட்டான்னா?.... சேச்சே.... அவ ஒரு நாளும் அப்பிடிப் பண்ண மாட்டா......."

தன்னைத் தானே சமாதானப் படுத்தியவன், இன்று சொல்லியே தீருவதென முடிவெடுத்துவிட்டான்!

சித்ரா அருகில் வரவர அவனுக்குப் பதட்டம் அதிகரித்தது. கைகள் நடுங்கின. லேசாய் வியர்த்தது...... அவள் அவனைக் கடந்து சென்றபோது தட்டுத் தடுமாறி "சி....சித்ரா" கூப்பிட்டே விட்டான்!

அவள் நின்றாள். அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை "ஏன்" என்று கேட்பதைப் போல் பார்த்தாள்- அலட்சியமாக!



அவன் தயங்கினான் "வந்து... சித்ரா....!"

"சீக்கிரம் சொல்லுங்க நான் போகணும்."

"சித்ரா..... இதுக்கு மேலையும் எம்மனசில உள்ளத உங்கிட்ட சொல்லாம மறைக்க முடியல்ல.... அது... வந்து...வந்து சித்ரா.... நான் உண்மையிலேயே உன்னை..."

"நேசிக்கிறேன்னு சொல்லப் போறீங்க அப்பிடித்தானே?".

"ஆமாம்" அசடு வழிந்தான்.

"நான் இல்லாம வாழ்க்கையே இல்லைன்னும் சொல்ல நினைச்சிருப் பீங்களே?"

"ஆ..... ஆமா சித்ரா" புன்னகைத்தான். அவளும் மிக அழகாகப் புன்னகைத்தாள். பின்பு சிரித்தாள். "இங்க பாருங்க மிஸ்டர் சிவராகவன் இதையெல்லாம் என்னை நீங்க டைவர்ஸ் (விவாகரத்து) பண்ணிக்க முன்னாடி யோசிச்சிருக் கணும். இட் இஸ் டு லேட்......" அவள் நடந்தாள் இவன் சிலையானான்.

(நன்றி)

குட்டிக் கதை

# 'தூங்காதே.. தம்பி.. தூங்காதே'

-ஷர்மிளா இஸ்மாயில்-

என் முதுகிலே நானே தட்டிக் கொடுத்துக் கொள்ள நினைத்தேன். ஆனால் கையைத் தான் தூக்க முடியவில்லை. "தனியாரில பயணம்" என்று கேள்விப் பட்டுள்ளீர்களா? அதாவது தனியார் வாகனங்களில் போகும் பயணங்களை.... கேள்விப்படுவதாவது, நாள்தோறும் தள்ளுப்படுகிறோம், நசுக்கப்படுகிறோம். வெளியிழுத்து வீசப்படுகிறோம். என்று அடுக்கித்தள்ளி தனியார் வாகன பயணப் புகழ் (!) பாடாத வாய் உண்டோ?

அன்றும் அப்படிப்பட்டதான் ஒரு வாகனத்தில் பலவிதமான போட்டிகளுக்கு மத்தியில் துணிச்சலாய்ப் பாய்ந்து ஏறி ஒரு ஸீட்டைப் பெற்று நின்றேன் யான். ஓ...இதுதானா என அலட்சியமாய் யாரும் கேட்கப்படாது. அனுபவித்துப் பார்த்தவர் களுக்குப் பட்டெனப் புரியும் ஒரு ஸீட் கிடைப்பதென்பது எத்தனை மகா அற்புதமான பாக்கியம் என்று! ஸீட் கிடைத்த மகிழ்ச்சியில் மனசெல்லாம் செண்பகப்பூ மலர மலர அமர்ந்து கொண்டேன். பக்கத்தில் ஒரு வயதான மாது. அவரும் கூட ஸீட் பிடிக்கும் போட்டியில் மிச்ச மீதியிருந்த உடல் சக்தியைப் பிரயோகித்து வெற்றி கொண்டவர். ஒரு உண்மையைச் சொல்ல விரும்புகிறேன். இப்போதெல்லாம் வயசு, மூப்பு பார்த்து, பெண் குலம் என்று மதித்து.... பாவம் நிற்கிறார்களே என தனது ஆசனத்தைத் தியாகம் பண்ண அநேகம் பேர் முன்வருவதில்லை அல்லவா?



நாங்களும் தான் காசு கொடுத்துப் போகிறோம். பின்னே ஏன் நிற்க வேண்டும் என்ற வினா சிலருக்கு. இப்போ பெண்கள் கூட சமத்துவம் அது இதென்று ஆண் களுக்கு நிகரானபின்னர் ஏன் அவங்களும் ஆண்களுக்குச் சமமாய் நின்று பிரயாணிக்கக் கூடாது என்ற மகா கேள்வி பலருக்கு. எனவே பயணிக்கும் சமயங்களில் நமக்கொரு ஆசனத்தை நாமே பெற்றுக் கொள்ளுவோம் என்ற நினைப்பில் அனேகப் பெண்கள். அவர்களில் நானும் அடக்கம்.

இனியும் அடைக்க முடியாது என்ற நிலையில் வாகனத்தின் வயிறு பிதுங்கவே சாரதிக்கு வண்டியை "ஸ்டார்ட்" பண்ணும்

17ம் பக்கம் பார்க்க....

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# அப்பாவுக்குச் சுகமில்லை



-கதைவாணன்

எனக்கு அவசரமாக ஆயிரம் ரூபாய் வேணும். என்ன செய்யட்டும்? நான் ராம்சேகர். யாரிடம் போய்க் காசு கேட்பதென்று யோசிக்கின்றேன்.

யாரிடமாவது போனால் 'நீ ஓர் ஆசிரியன். மாசத் தொடக்கத்தில் பணம் கிடைத்துவிடும். உனக்கென்ன கஷ்டம்?' என்பார்கள். என்னுடைய கஷ்டம் யாருக்குப் புரியப் போகின்றது. வாங்குகின்ற 1200 ரூபாய்க்குள் வீட்டு வாடகை, பஸ் செலவு போக மிச்சப்படுவதுள் நானும் மனைவியும் இரண்டு வயது குழந்தையும் காலந்தள்ளி வரும் கொடுமை யாருக்குப் புரியும்?

இப்பொழுது கூட எனக்கு யாரிடமாவது செல்வதற்கு விருப்பமில்லாமல் தான் இருக்கின்றது. ஆனால், பணத் தேவை மிக மிக அவசியமானதாக இருக்கின்றதே. அப்பாவுக்கு திடீரென நெஞ்சுவலி வந்து, அவனை இவனைப் பிடித்து ஒரு மாதிரியாக சிலாபம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்று விட்டேன். சென்றதற்கு இப்பொழுது ஓரளவு சுகம். "இந்த மருந்துகளை வாங்கிக் கொடுங்கள். அப்பொழுதுதான் பூரண குணம் ஏற்படும்." என்று கூறி இரண்டு பெரிய 'லிஸ்ட்'டுகளைப் போட்டுத் தந்துவிட்டார் டொக்டர். நான் விசாரித்த அளவுக்கு அவற்றை வாங்குவதென்றால் குறைந்தது 1000 ரூபாய் வேணும்.

எங்கே செல்வதென்று யோசித்தேன். ராமலிங்கத்திடம் போவதென முடிவெடுத்தேன்.

ராமலிங்கம் எனக்கு மிக மிக நெருங்கிய சொந்தம். அவர் பெயரில் ஐந்து கடைகள் இருக்கின்றன. மனைவி பெயரில் மூன்று லொறிகள் ஓடுகின்றன. மகன் தலைநகரில் இரண்டு, மலைநகரில் மூன்று தையற்தொழிற்சாலைகளை இயக்குகின்றான்.

கொழும்புக்கு நான் அடிக்கடி சென்றாலும் ராமலிங்கத்தின் வீட்டுக்குச் செல்வதில்லை. போக வேண்டும் என்று மனம் துடிக்கும். ஆனால் நான் எனது மனதைக் கட்டுப்படுத்திக்கொள்வேன். அதற்கு முன்பு ஓரிரண்டு சமயங்களில் அங்கு சென்று நான் அடைந்த அவமானங்கள் இன்றும் என் நெஞ்சில் ஆறாமல் இருக்கின்றன. இப்பொழுது அவசரத்துக்கு ஒன்றுமே பார்ப்பதில்லையென நினைத்துக் கொண்டேன்.

சிலாபத்திலிருந்து, கொழும்பு பஸ்ஸில் ஏறினேன்.

ராமலிங்கத்தின் வீட்டுக்குச் செல்லும் பொழுது மாலை ஆறுமணி.

விஷயத்தைக் கேட்ட வேலைக்காரன் "இருங்கள். வருவார்." என்றான்; உட்கார்ந்தேன்.

சிறிது நேரத்தில் ராமலிங்கம் உள்ளிருந்து வந்தார். கண்களில் 'என்ன?' என்ற வினா. எனக்கு எதிரில் அமர்ந்தார்.

அப்பாவைப் பற்றி ஒரு வார்த்தை.... ஊஹும்..... அவர் பேசவே இல்லை.

"அப்பாவா....." என்று நான் தொடங்கிய பொழுது, "இரு வாறன்" என்றவாறு உள் நுழைந்தார்.

நான் யோசித்தேன். அப்பாவுக்குச் சுகமில்லை என்பதைச் சொல்லி, அவர் பணம் தரவேண்டுமே.

"ம்.....சொல்லு......." என்றவாறு வந்தார். ஆங்கிலத் தினசரி கையில் இருந்தது.

"அப்பாவுக்கு நெஞ்சுவலி வந்து....."

அவரைப் பார்த்தேன். அவருக்கு நான் பேசியது கேட்கவில்லை. பத்திரிகையில் ஆழ்ந்து விட்டார்.

சிறிது நேரத்தில்- "என்ன சொன்னே......?"

"அப்பாவ சிலாபத்தில வச்சிருக்கு..."

மீண்டும் பத்திரிகை.

சிறிது நேரத்தில் பேப்பரை மடித்து அடுத்த ஆசனத்தில் போட்டார்.

"நாள் பூரா வேலை. காலைலை வந்த பேப்பரை இப்பதான் பார்க்கக் கிடைச்சுது.... உம்..... எதுக்கு வந்தே....சொல்லு...."

"அவசரமா ஆயிரம் ரூபா தேவை...."

"அதானே பார்த்தேன். இல்லாட்டி நீ வந்திருக்க மாட்டியே.... என்னிட்ட இப்ப ஆயிரம் ரூபா இல்லியேப்பா....." என்றார்.

"அவசரமா அப்......"

"இப்ப என்கிட்ட இல்லியேப்பா..."

"அப்பா...."

"கோவிச்சுக்காதேப்பா....இப்பல்லாம் வீட்டுச் செலவுக்கே வர்ர வருமானம் காணமாட்டேங்குது......" என்றவாறு கையை விரித்தார்.

எனக்குக் கோபம் தலைக்கேறியது.

இருந்த ஒரே சொந்தமும் பொடு போக்காகக் கதைத்த கோபம்.

"தர விருப்பமில்லாட்டா விடுங்க.... நான் வாறன்.... அப்பாவுக்கு நெஞ்சுவலி எப்படியிருக்கோ தெரியல.... சிலாப ஆஸ்பத்திரியில இருந்து உங்களைத் தேடி வந்ததே." என்று வெடித்தவாறு வெளியேறினேன்.

"என்ன! அப்பாவுக்குச் சுகமில்லையா! என்றவாறு என் பின்னால் ஓடிவந்தார் என் ஒரே சொந்தச் சகோதரர் ராமலிங்கம்.

அப்பா தான் இறக்கும் பொழுது அருகில் இருக்கும் மக்களுக்கு மட்டுமே தான் இன்னும் விற்காமல் வைத்திருக்கும் தென்னந்தோட்டத்தில் பங்குண்டு என்று உயில் எழுதித் தயாராய் வைத்திருப்பது ராமலிங்கத்துக்கும் தெரியும் என்பது பிற்குறிப்பு.

# காதலித்தால் மட்டும் போதுமா?

-எஸ். ஸ்ரீதர்-

சந்தியாவின் மேல் எனக்கு ஏற்பட்டுள்ள ஈடுபாட்டை இனிமேலும் மறைத்து வைத்திருப்பது அர்த்தமற்ற ஒன்றாகவே எனக்குத் தோன்றியது. 'பட்'டென அவளிடம் என் காதலை தெரிவிப்பதே நல்லதாகப்பட்டது. ஆனால் எப்படித் தெரிவிப்பது? வழி தெரியாமல் மனம் குழம்பிப் போனது.

சந்தியா எங்கள் பக்கத்து வீட்டுப் பெண். என்னை விட ஒரு வயதில் குறைந்தவள். என்னைப் போல் சாதாரண தரத்துடனேயே படிப்பை நிறுத்திக் கொள்ளாமல் தொடர்ந்து படித்ததால் பாடசாலையொன்றில் ஆரம்ப ஆசிரியையாக தொழில் புரிபவள். நானோ எதைப்பற்றியும் கவலைப்படாமல் பத்து வயதில் தொடங்கி, இந்த இருபத்தைந்து வயது வரை 'கிரிக்கெட்' மட்டையும், பந்துமாகத் திரிகிறேன். வீட்டில் கடைசிப் பிள்ளை. கேட்டவையெல்லாம் கிடைக்கும் என்கிற திமிர் எனக்கு.

கதைப் புத்தக பரிமாறல்களில்தான் எனக்கும் சந்தியாவுக்கும் சிநேகம் ஆரம்பமானது. ஒருநாள் ஏதோ அலுவலாக எங்கள் வீட்டுக்கு வந்தாள். அலுமாரி நிறைந்திருந்த கதைப் புத்தகங்களைக் கண்டு மலைத்துப் போய், அவற்றை இரவலாக வாங்கிப் படிக்கத் தொடங்கி, பின்பு அடிக்கடி வீட்டுக்கு வந்து போகத் தொடங்கினாள். புன்னகை பேச்சாகி, பின்னர் கதைகள் பற்றிய விமர்சனம் வாக்குவாதமாகி, இப்போது சிநேகம் நெருக்கமாகி விட்டது. இந்த நெருக்கம் தான் அவள் மேல் எனக்கு காதலை ஏற்படுத்தியிருக்க வேண்டும். 'இதை எப்படியாவது இன்று மாலை அவள் வீட்டுக்கு வரும்போது தெரிவித்துவிட வேண்டும்'. மனதில் நினைத்துக் கொண்டேன். மாலையாவதற்கு அதிக நேரமிருந்ததால் அதற்கிடையில் ஊரை ஒரு 'ரவுண்ட்' சென்றுவர நினைத்து சைக்கிளைத் தள்ளினேன்.

"எங்கடா கண்ணா? வெளிக்கிட்டிட்டியா? இத்தனை வயதாகியும் உனக்கு வராத பொறுப்புணர்ச்சி இனி எப்போதடா வரப்போகுது? உன்னோட வயதில் இருக்கிற மற்றப் பிள்ளைகள் தொழில் செய்கிறானுகள். இல்லாட்டா ஏதாவது படிக்கிறானுகள். நீ என்னடாவென்றால் எப்போ பார்த்தாலும் விளையாட்டு இல்லா விட்டால் ஊர் சுற்றல். உன்னோட எதிர்காலத்தைப் பற்றி கொஞ்சமாவது யோசித்துப் பார்த்தாயா? எங்க கண்ணுக்குப் பின்னால என்ன பண்ணப் போறாய்?"

பாரதமாக வந்த அம்மாவின் வழமையான அர்ச்சனையை அசட்டை செய்யாமல் 'பைசிக்கிளை'த் தள்ளிக் கொண்டு வீதியில் இறங்கினேன்.

மாலை வீட்டு முற்றத்தில் நான் கதிரையில் அமர்ந்திருந்த போது சந்தியா வந்தாள். எனக்கு வழமைக்கு மாறாக நெஞ்சு அடித்துக்கொண்டது. எப்படிப் பேச்சை ஆரம்பிப்பதென்று புரியாமல் உடல் வேர்க்கத் தொடங்கியது. எனது இந்தச் சங்கடத்தை சந்தியாவும் புரிந்து கொண்டிருக்க வேண்டும். என் பக்கத்திலிருந்த கதிரையில் வந்து அமர்ந்து கொண்டவள்,

"என்ன கண்ணா எதைப்பற்றியோ யோசிக்கிறமாதிரித் தெரியுது?" என்று கேட்டாள். அவள் இப்படிப் பேசுவதற்கு வந்த வார்த்தைகள் என் வாய்க்குள் சிக்கிக் கொண்டது. எதுவும் பேசாமல் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன். இந்தச் செய்கை சந்தியாவைப் பொறுமை இழக்கச் செய்திருக்க வேண்டும்.



"இந்த பார் கண்ணா! சொல்றதென்றால் சொல்லு. இல்லாட்டி நான்போறன்." என்று எழுந்து கொண்டவளை கையமர்த்தி தடுத்தேன். இனியும் மௌனமாயிருப்பதில் அர்த்தமில்லை என்பது புரிய, பதற்றத்தைக் குறைத்து சந்தியாவிடம் பேசத் தொடங்கினேன்.

"சந்தியா! நான் உன்னைக் காதலிக்கிறன். இதில் உன்னோட விருப்பத்தை அறிய ஆசைப்படுறன்.!" சீராகப் பேசி முடித்தேன். சந்தியாவிடம் எதுவித சலனமுமில்லை. எதுவும் பேசாமல் என்னையே சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்தவள்,

"காதலித்து என்ன செய்யப் போகிறாய் கண்ணா?" அவளுடைய இந்தக் கேள்வியின் அர்த்தம் புரியவில்லை எனக்கு.

"காதலித்தால் கல்யாணம் செய்யணும். தெரியுமா கண்ணா?" என்றாள் மீண்டும்.

"ஏன் என்னில நம்பிக்கையில்லையா சந்தியா?" என்றேன். இலேசாகச் சிரித்துக்கொண்டு,

"அதுக்கில்ல கண்ணா, கல்யாணமாகி குடும்பமென்று வரும் போது பல பிரச்சனைகள் தலைதூக்கும். குடும்ப நிர்வாகப் பிரச்சனை, பொருளாதாரப் பிரச்சனை, இப்படிப் பல. இதையெல்லாம் பொறுப்புணர்ச்சியோட சமாளித்து நடக்கிற ஆளுமை வேணும். இத்தனை வயசாகியும் எப்போதும் விளையாட்டும், ஊர் சுற்றலுமாகத் திரியும் உன்னால் இதையெல்லாம் சமாளிக்க முடியுமா கண்ணா?" அவளுடைய இந்தத் திடீர்த் தாக்குதலால் நான் சற்று நிலை குலைந்துதான் போனேன்.

"இங்க பார் கண்ணா! சும்மா பொழுது போக்குக்காக காதலித்துக் கொண்டிருக்கிற வயது நம்முடையதல்ல. அப்படிப் பொழுது போக்குக்கு காதலிக்கிறதும் எனக்குப் பிடிக்கிறதில்ல. காதலித்தால் அதை இறுதிவரை கடைப்பிடிக்க வேணும். பின்னால் வரும் பிரச்சனைகளை யோசிக்காமல் காதலித்து விட்டு பின்னர் நீயும் நானும் வேதனைப் படக்கூடாதென்பதற்காகத் தான் இதைச் செல்ல வாறன்."

சந்தியா பேசிக்கொண்டே போக எதுவும் பேசத் தோன்றாமல் மௌனமாயிருந்தேன்.

"கண்ணா! நான் சொல்லுறனென்று கோவிக்காத. உன்னைப் பொறுத்தமட்டில் எதிர்காலத்தைப்பற்றி கொஞ்சமும் யோசிக்கிறாயில்லை. படிப்பு, தொழில் இவை பற்றி அக்கறைப்படுவதாகவும் எனக்குத் தெரியல்ல. இந்த நிலையில் காதல், கல்யாணமென்றால் எப்படிக் கண்ணா? வாழ்க்கையை விளையாட்டா எடுத்து நிற்கும் உனக்கு இது எப்படிச் சாத்தியமாகும். உன்னில எனக்கு விருப்பமில்லையென்று நான் சொல்ல வரல்ல. பிரச்சனைகளை உணர்ந்து, மற்றவரை எதிர்பார்த்து நிற்காமல் உன்னுடைய சொந்தக்காலில் நிற்கும் நிலைமைக்கு வா கண்ணா. அப்போது உன்னோட காதலை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்றன். இப்போ என்னை மன்னித்து விடு கண்ணா."

தீர்மானமாக மிக நீளமாகப் பேசிவிட்டுச் செல்லும் சந்தியாவையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவளுடைய ஒவ்வொரு வார்த்தையிலும் நிஜங்கள் இருப்பது புரிய, அப்போது தான் முதல்முதலாக என் நிலைபற்றி யோசிக்கத் தொடங்கினேன்.

(யாவும் கற்பனை)

## காதில் விழுந்தகடி

-தருவது பூங்குருவி-

(இடம் - கொட்டாஞ்சேனை. ஒரு முதியவரும், ஒரு இளம் பெண்ணும்)

"ஏன் பிள்ளை பொட்டு வைக்கேல்ல?"

"பொட்டு வைச்சா அடையாள அட்டையைக் கழுத்திலேயே தொங்கவிட்டுக் கொண்டு போவேண்டியதாக் கிடக்குது... எதுக்கு உந்தப் பிரச்சனை..."

"அதுக்காகப் பொட்டு வைக்காம இருக்கிறதே?"

"இங்க பாருங்கோ பெரியப்பா... எனக்குக் கம்பி எண்ணிக் கொண்டிருக்க நேரமில்லை... கொஞ்சம் சும்மா இருக்கிறியளோ?"



(இடம் கொச்சிக்கடை பஸ் நிலையம். இரண்டு பாடசாலை மாணவர்கள்)

"மச்சான் நாட்டு நிலமை சரிவராது போலக்கிடக்குது."

"சரிவந்தா மட்டும் நீ என்னட்ட வாங்கின 100 ரூபாயை தரவே போறே?

"ஹி... ஹி... ஹி..."

(இடம் விகாரமாதேவி பூங்கா, ஒரு காதல் ஜோடி)

"அப்பா உங்களுக்கு ஏதாவது சேத்து வைச்சிருக்கிறாரே?"

"அதுதான் என்னட்ட 'டிகிரி' இருக்கே"

"நல்ல கதை... உங்களிட்ட 'டிகிரி' இருக்கிறதால வீட்டுக்காரன் வாடகை கேக்காமலோ இருக்கப் போறான். இல்லாட்டி எலக்ரிசிட்டிக் காரன் கரண்ட் பில் வேணாமென்டோ சொல்லப் போறான்..... இங்க பாருங்கோ 'பானு' டிகிரி இருந்தாலும் இல்லாட்டிலும் வெள்ளவத்தையில வீடு இருக்கவேணும் கண்டியளோ!"

"கதையப் பாத்தால் நீங்களும் சீதனம் கேப்பீங்கள் போலத்தான் தெரியுது.. நான் வாரன்!!"

"இங்க... பானு... பானு.. நான் பகிடிக்குத் தானப்பா சொன்னனான்! (பகிடிக்குச் சொன்னாரோ இல்லையோ என்பது "விசயம்" முடிந்த பிறகுதானே தெரியும்)

16ம் பக்கத்தொடர்ச்சி

## தூங்காதே.. தம்பி.......

ஞானோதயம் பிறந்தது. தென்றல் கூட நசுங்கி, நசுங்கி வந்ததால் சுவாசம் பெரும் சிரமமாயிற்று. என் ஸீட்டோடு முன் வரிசையில் இரண்டு ஆண்கள். என்னோடு ஸீட் பிடிக்கும் போட்டியில் வெற்றி பெற்றவர்களுள் அவர்களிருவரும் அடக்கம். வாகனம் ஓடிக்கொண்டிருக்க இருவரும் ஆளுக்கொரு சிகரட்டை உருவிக் கொண்டு புகைத்தலுக்கு ஆயத்தமாயினர். "ஆண்டவா" ஆண்டவனை அழைத்தவளாய் துணிவைத் திரட்டிக் கொண்டேன். "பிரதர், ப்ளீஸ் ஸ்மோக் பண்ணாதீங்க. மூச்சு விடவே கஷ்டமாயிருக்கு." ஒருவரைத் தட்டிச் சொல்லிவிட்டேன். மனசு கிடுகிடு என ஆடியது. 'வள்' என எரிந்து விழுந்தால்... இல்லை வம்புக்கு வந்து விட்டால்.... நினைத்துப் பார்க்கவே மனசு நடுங்கியது. அப்படியெல்லாம் ஒன்று மில்லை" ஸொரி ஸிஸ்டர்." என்று சொல்லி நிறுத்தி விட்டார்கள். "ச்சா....இப்படி மகா டீஸன்டான இவர்களைத் தவறாகப் புரிய பார்த்தோமே" நானே எனக்குள் நினைத்துக் கொள்கிறேன்.

பயணம் தொடர்ந்தது. முன் வரிசை இளைஞர்களது குரல்கள் சற்று உரத்த நிலையில் என் செவிகளை எட்டியது. சினிமா விமர்சனம். குஷ்பூவின் அழகை ஆராதித்தார்கள். சுவாரஷ்யமாகத்தான் இருந்தது. குஷ்புவுக்கு கோவில் கட்டியது சரியா பிழையா விவாத மேடை கூட!

வண்டி ஒரு தரிப்பில் நிற்கவே.... ஜன்னலூடாகப் பார்வை வெளியே படர்ந்தது. நிறைய சனம். அதுவும் கையில் குழந்தைகளைச் சுமந்தவர்களாய் ஏழெட்டுப் பெண்கள். ஏற மாட்டார்கள் என நினைக்கையிலே ஏறினார்கள். நடத்துனர் தான் தாராளமான மனசு படைத்தவரே "நகின்ட நகின்ட இடதியனவா..ஸீட் தியனவா..." ஐயோ! ஸீட்டும் இல்லை, இடமும் இல்லை. நகரக் கூட முடியாத நிலை." ஆனாலும் போய்ச் சேர வேண்டிய அவசியம் உந்தித்தள்ள ஏறிக்கொள்ள முயற்சித்தவர்கள் அனேகம்பேர்.

'க்வ்ரு ஹறி நெகிட்டிலா இட தென்ட..." (யாராவது எழுந்து இடம் கொடுங்கள்.) இடம் இருக்கு என்ற நடத்துனர் இப்போது யாராவது எழும்பி இடம் கொடுங்கள் என வேண்டுதல் வைத்துக் கொண்டிருந்தார். கையில் குழந்தையுடன் நின்ற பெண்ணுக்கு என் ஆசனத்தைத் தியாகம் பண்ணியவளாய் எழுந்தேன். முன் வரிசை ஆண்கள் பக்கம் பார்வையைச் செலுத்திய எனக்குள் பயங்கரமாய் அதிர்ச்சி! அதிர்ச்சி! இதுவரை வாய் ஓயாமல் கதை பேசி வந்தவர்கள் தற்போது ஆழ்ந்த தூக்கத்தில் மூழ்கிய நிலையில்- கைகளில் தலை தாங்கி உறங்கி இருக்கும் மாயமென்ன? சிறிய சிரிப்பு அலைகள் எனக்குள் உற்பத்தி. மௌனம் காத்தேன். கோபமும் ஜனனித்தது. 'சீ.... என்ன மனிதர்கள்!" அல்பமாய் அவர்களைச் சபிக்கத் தோன்றியது.

நடத்துனர் இன்னும் கத்திக்கொண்டிருந்தார். மற்றைய குழந்தை சுமந்த பெண்களுக்காய் இடம் கொடுக்குமாறு. இவர்களுக்கு கேட்கவில்லையா?

"தூங்குகிறவர்களை எழுப்பலாம். ஆனால் தூங்குகிற மாதிரி நடிப்பவர்களை எழுப்ப முடியாது." என் ஆசனம் பெற்று அமர்ந்த பெண் என்னை நோக்கிச் சப்தமாய்க் கூறினார். சட்டென விழிப்படைந்த ஒருவர் பின்புறம் கோபமாய்த் திரும்பி பின்னர் அதிர்ந்தார். "அக்கா..... நீ.....நீ...நீங்களா...நான் வேற யாரோன்னு நினைச்சுட்டேன்."-அசடு வழிந்தது. அந்த அக்காவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. "பாவம்... தூக்கம் கலைஞ்சு போச்சா. நான் கத்திப் பேசிட்டனாக்கும். என் தம்பின்னு சொல்லிக்கவே வெட்கம். சீ."

தம்பியின் போலித் தூக்கத்தையுணர்ந்த அக்கா பொரிந்துத் தள்ளினாள். இன்னுமொரு தரிப்பில் நின்றவர்களையும் வாகனத்தில் அள்ளிப் போட அயராது முயன்று கொண்டிருந்தார் நடத்துனர். நான் பிடித்து நிற்பதற்கு எங்கேயாவது ஏதாவது அகப்படாதா என்ற தவிப்புடன் தள்ளாடி நின்றேன்.

(நிகழ்ந்த நிகழ்வு)

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## இலக்கிய நயம்

# அவளும் நிலவுதான்

–தருவது ரசிகன்–

நீலக்கடல் அலைகள் வந்து கரையினில் மோதிச் சென்றன. இன்னும் வா மோது என்பது போல கரை காத்துக் கொண்டிருந்தது.

விக்கிரமன் நீலாவதியையே பார்த்துக் கொண்டிருந்தான். விழிகளால் அள்ளி விழுங்கிக் கொண்டிருந்தான்.

நீலாவதி அலைகள் வந்து கரையின் மீது செய்யும் குறும்புகளை விழிகளால் வாங்கிக்கொண்டிருந்தாள்.

மடக்கிய முழங்கால்களை கரங்களால் கட்டியபடி, முழுங்கால்கள் மீது முகம் புதைத்து முன் புறமாய் வளைந்திருந்தாள். வளைந்திருந்ததால் இடையிலே மெல்லிய கோடுகள் போல தசை மடிப்புக்கள் சின்னதாய் கோலம் காட்டிக் கொண்டிருந்தன. கோபுரக் கலசமாய் அழகு காட்டிய இளமை அவள் வளைந்திருந்ததால் வதைபடுகிறதோ என்று விக்கிரமன் நினைத்துக் கொண்டான். பக்கவாட்டில் இருந்து பார்த்துக்கொண்டிருந்தால் எட்டிப் பிடிக்கும் எண்ணம் வருமோ என்று பார்வையை விலக்க முயன்றான். விழிகள் முடியாது என்று அங்கேயே நின்று அடம் பிடித்தன.

விக்கிரமன் மௌனம் உடைத்தான். உதடு திறந்தான்.

"நீலா" என்றான்.

பதிலே இல்லை. பவள இதழ்கள் திறக்கவே இல்லை.

"பேச்சுவார்த்தைக்கு நான் தயாராக இருக்கிறேன். பேரழகுச் சித்திரமே உன் இதழ்கள் என்னும் பூங்கதவை திறந்தால் என்ன? என் மீதுள்ள கோபத்தை மறந்தால் என்ன?"

இலக்கிய நயமாய் கேள்வி வீசி நீலாவதியின் வெப்பம் தணிக்க நினைத்தான். தணியவில்லை. கனியமுதம் பரிமாறும் இதழ்கள் 'ம்' என்ற தனியொரு சொல் கூட சிந்தவே இல்லை.

கடல் அலைகள் மீது விழிகளை ஊர்வலம் விட்டபடி சித்திரம் தன் இதழ்களை பத்திரமாய் மூடிக் கொண்டிருந்தது.

மெல்ல ஊர்ந்து நெருக்கமாய் அமர்ந்தான். முழங்காலில் முகம் புதைத்திருந்தவளின் மூக்கில் செல்லமாய் விரல்களால் கிள்ளினான்.

காதோரம் உதடு கொண்டு சென்று, "பேசாமல் இருப்பதைவிட இந்தக் கடலில் தூக்கி என்னை வீசிவிடலாம் நீ."

சொல்லிக்கொண்டே விரல்களால் நீலாவதியின் இதழ்களைத் தொட்டு வலிக்காமல் கிள்ளினான்.

"அதைத்தான் யோசிக்கிறேன்."

வெற்றி தான். சித்திரம் இதழ் அசைத்து விட்டது. பூங்கதவு திறந்து பெண் கிளி பேசிவிட்டது.

காதலில் ஒரு தந்திரம் இருக்கிறது. தெரிந்தும் தெரியாதது போல நடிப்பது. புரிந்தும் புரியாதது போலக் கேட்பது. ஊடலிலும், கூடலிலும், ஊடலை தகர்ப்பதிலும் அந்தத் தந்திரம் பயன்படும். பேச எதுவும் இல்லாத போது பேச்சை வளர்க்கவும் அந்தத் தந்திரம் வந்து கைகொடுக்கும். எனவே விக்கிரமன் கேட்டான்.

"எதைத்தான் யோசிக்கிறாய்?"

"அதைத்தான்."

"அதைத்தான் என்றால்?"

"அதுதான் நீங்கள் சொன்னீர்களே!"

"நான் என்ன சொன்னேன்?"

"கடலில் வீசச் சொல்லி."

"ஏற்கனவே கடலில் தானே கிடக்கிறேன்."

"கடலிலா? எந்தக்கடலில்?"

"உன்மீது மோகம் என்ற கடலில்! எப்போது உன்னை முதன் முதலாய் பார்த்தேனோ அப்போதே விழுந்தவன் தான். எழவே முடியவில்லை!"

"ஏனாம்?"

"எழவும் விரும்பவில்லை."

"ஏனாம்?"–மீண்டும் ஒற்றையாய் அதே வினா. உள்ளே மகிழ்ச்சி. தன் நேசத்துக்குரியவர்கள் புகழ்வது பெண்ணாலும் விரும்பப்படும். ஆணாலும் விரும்பப்படும். தன்மீது இத்தனை ஆர்வமா என்று மனதில் வியக்கப்படும். அந்த வியப்பே இன்பத்தின் உச்சிக்கு சிறகாகி அழைத்துச் செல்லும். நீலாவதி மகிழ்ந்தாள். நீலாவதி உள்ளே வியந்தாள். இன்னும் ஆழம் காண "ஏனாம்" என்று வினா தொடுத்தாள். விக்கிரமன் பதில் சொன்னான்.

"பாற்கடலில் விழுந்தவனுக்கு கூட போதும் இனி என்று பாற்சுவை திகட்டலாம். மோகக் கடலில் விழுந்தவனுக்கு போதும் என்ற எண்ணமே எட்டிப்பார்க்காது கண்ணே."



"ஆசை அறுபதுநாள். மோகம் முப்பது நாள். தெரியாதாக்கும் எனக்கு?"

"அதைச் சொன்னவன் சுகம் என்ற கடலின் கரை தெரியாத ஆழம் காண முயலாதசோம்பேறியாக இருக்க வேண்டும்."

"நீங்கள் மட்டும் சுறுசுறுப்பான வராக்கும்?"

"அதில் என்ன சந்தேகம்? அழகான தேகம் அருகில் இருக்க என் கரங்கள் வேலை நிறுத்தம் செய்து கொண்டிருந்தால் இப்படித்தான் சந்தேகம் வரும்."

கைநீட்டி நீலாவதியின் இடை தொட்டு அணைத்தான். மறுகையால் அவள் முகம் தொட்டு உள்ளங்கையில் தாங்கி தன் முகம் நோக்கித் திருப்பினான்.

அவள் விழிகள் குறிதவறாத அம்புகளாய் மனதிலே தைத்தன.

"பார்வைகளுக்குள்தான் எத்தனை அர்த்தங்கள். விழிகளுக்குள்தான் எத்தனை கதைகள்."

நினைத்தான். அவள் விழிகளுக்குள் தன் விழிகளை இழந்தது போல பார்த்துக் கொண்டே இருந்தான். பின் பார்வை அகற்றி வானை நோக்கி நிமிர்ந்து பார்த்தான். பின் சிரித்தான்.

"புரிகிறது- புரிகிறது."

என்று முணுமுணுத்தான்.

"நீலாவதிக்குப் புரியவில்லை. கேட்டாள்.

"என்ன புரிகிறது?"

"வானத்தில் கோலம் காட்டும் விண்மீன்கள் கலங்கி ஓடித்திரிவது ஏன் என்று புரிகிறது."

"நீங்கள் என்ன வானசாஸ்திரியா?"

"இல்லை. உன் விழிகள் என்ற பாணங்களால் தாக்கப்பட்டதனால் அறிந்த சங்கதி."

"என்ன சங்கதி."

"உன் முகத்தை கண்டவுடன் விண் மீன்களுக்கு ஒரே குழப்பம். நிலா இன்று மட்டும் எப்படி தரையில் போய் குடியிருக்கிறது என்ற குழப்பத்தால் வந்த கலக்கம். அதனால்தான் கண்ணே அவை ஓடித்திரிகின்றன."

"குழப்பத்தின் காரணம் என்னவாம்?"

அவன்வலிய தோளில் தலை சரித்து கொண்டே கேட்டாள். விடை சொன்னான்.

"நிலவை ஒத்த முகம் உனக்கு. அதுதான் நிலவே இடம் பெயர்ந்து நிலம் நோக்கிச் சென்றதோ என்ற நினைப்பு அந்த விண்மீன்களுக்கு."

விக்கிரமன் சொல்ல நீலாவதியின் முகம் சிவந்தது. அந்த அழகில் மயங்கிய விக்கிரமனின் பொறுமை உடைந்தது. ஆலிச்கதவு திறந்தது. அதற்கு பின்னரும் நின்று பார்ப்பது நாகரிகம் இல்லை என்பதால் எழுதுகோல் முற்றுப் புள்ளியோடு மூடிக்கொள்கிறது.

சரி– திருவள்ளுவரும் இதைத்தானே சொல்லியிருக்கிறார்.

"மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன்

அதிகாரம் 112
குறள் 1116.

# இணைந்து பிறந்தார்கள்– ஒரு பெண்ணையே மணந்தார்கள்!

## அமெரிக்க நகரம் ஒன்றில் வித்தியாசத் திருமணம்!!


அன்பைப் பரிமாறும் இரட்டையர்கள். நிறைவோடு 'காரேன்'

அவர்கள் இருவரும் இரட்டையர்கள்.

ஒருவர் பெயர் ஜோன். - மற்றவர் பெயர் டொண்.

இணைந்து பிறந்தார்கள். இணைந்தே வளர்ந்தார்கள்.

இப்போது அமெரிக்க நகர்களில் ஒன்றான பிலடெல்பியாவில் பரபரப்பாகப் பேசப்படுகிறார்கள்.

அப்படிப் பேசப்படுவதற்கு காரணம் என்ன?

இருவருமே ஒரே பெண்ணை ஒரே நாளில் மணந்துகொண்டனர்.

அவர்கள் மணந்து கொண்ட பெண்ணின் பெயர் பேர்க்கி காரென்ஹறண்டா.

அவரும் இரட்டையர்களை விரும்பியே மணந்து கொண்டார்.

இப்போது ஏழு மாதக் கர்ப்பிணியாக இருக்கிறார்.

பரபரப்பான பேச்சுக்களால் அவர்கள் மூவரும் கவலைப் படவில்லை. பிறக்கப் போகும் குழந்தைக்காக ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

இரட்டையரை மணந்த கதையை கரோனா ஒரு பேட்டியில் கூறியிருக்கிறார்.

"இரு கணவர்மாரும் என்மீது அன்பைச் சொரிந்த வண்ணமுள்ளனர். இருவரும் சமமாகவே என்னை நேசிக்கின்றனர். அதே போல் நானும் இருவரில் எவரிடமும் பாரபட்சம் காட்டுவதில்லை. எனக்கு இரு மடங்கு பாசம் கிட்டுவதனால் நான் உண்மையில் ஓர் அதிஷ்டசாலியே. வேறு எந்தப் பெண்ணுக்கும் இத்தகைய பாக்கியம் கிட்டாது." என்று காரென் பூரிப்புடன் கூறுகிறார்.

காரெனுக்கு 37 வயதாகிறது. பத்து வருடங்களுக்கு முன்னர் செஞ்சிலுவைச் சங்க நிதி சேகரிப்புக்காக நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியின் போது இரட்டையரில் ஒருவருடன் காரெனுக்கு நடனமாடக் கிடைத்தது. அழகுள்ள ஓர் இளைஞருடன் நடனமாடக்கிடைத்தது அவளுக்குப் பெருமையாகவே இருந்தது. ஒரு இளைஞர் பலதடவை தன்னை நாடிவந்து நடனமாடுவதாக அவள் நினைத்துக்கொண்டிருந்தாள்.

வெகு நேரத்துக்குப் பின்னர் தான் விசயம் புரிந்தது.

ஒரே நபருடன் நடனமாடவில்லை. ஒரே சாயலுள்ள இருவருடன்தான் நடனமாடியுள்ளேன் என்று கண்டுகொண்டாள்.

பின்னர் அடிக்கடி சந்தித்தார்கள். மூவரும் மனம் விட்டுப் பழகினார்கள். இருவரும் தன்னையே காதலிப்பதை அறிந்தபோது ஆரம்பத்தில் சங்கடமாக இருந்தது.

நாளடைவில் தன்னைத்தானே சரிப்படுத்திக்கொண்டாள்.


திருமணத்தின் போதும் வேடிக்கை ஒன்று-வேறு எவருக்கும் தெரியாமல் நடைபெற்றது. காரெனுக்கும் டொண்ணுக்குமே திருமணம் என்று திருமண உத்தரவுப்பத்திரம் பெறப்பட்டது. மணச் சடங்குகள் நடைபெற்றபோது, தேவாலயத்தில் ஆள் மாறாட்டம்– எவருக்கும் தெரியாமல் நடைபெற்றது. ஆரம்பச் சடங்குகளில் டொண் கலந்துகொண்டு, அங்கிருந்து வேறோர் அறைக்கு அவசர அலுவலுக்குப் போவது போல் நுழைய, அதே உடைகளுடன் காத்துக் கொண்டிருந்த ஜோண் மணச் சடங்கு நடைபெறும் பீடத்தில் ஏறியிருக்கிறார். "ஆண்டவனின் சந்நிதானத்தில் நாங்கள் இருவருமே காரெனை எங்கள் மனைவியாக்கிக் கொண்டமைக்கு இதுவே ஆதாரம்" என்று அவர்கள் கூறுகின்றனர்.

எனக்குப் பிறக்கப் போகும் குழந்தைக்கு உண்மையான தந்தை யார் என்று எனக்கும் தெரியாது; எனது கணவர்களுக்கும் தெரியாது. அவர்களுக்கும் அதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அவா கிடையாது. குழந்தைக்கு தாங்கள் இருவருமே தகப்பன்மார் என்று அவர்கள் கருதுவதால் எந்தப் பிரச்சனையும் எப்போதுமே எழப்போவதில்லை என்றே மூவரும் கருதுகிறோம் என்கிறார் காரென்.

காரெனைப் பொறுத்தமட்டில் ஓர் ஆசை "இரட்டைக்குழந்தைகள் பிறந்தால் எங்கள் குதூகலம் இரட்டிப்பாக இருக்குமே"

ஆசையும் அதுதான். அவரது அங்கலாய்ப்பும் அதுதான்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல–28



**இடமிருந்து வலம்**

1. இதுவும் குட்டி போடும்.
2. கவலை நிறைந்த நிலை.
3. ஒரு அரசனின் சிறப்புக்கு இவர் முக்கியமானவர் என்று சொல்வதுண்டு.
4. சபிக்கப்பட்டுக் கல்லானதாகச் சொல்லப்படும் பெண். (திரும்பியிருக்கிறது)
7. வலியோர் சிலர் வாய்ப்பானவர்கள் முதுகிலும் இதை நடத்துவதுண்டு.
11. இது பற்றிய குறிப்பு தினமுரசில் வருகிறது.
12. உயிரைக் குடிக்கும். (குழம்பியிருக்கிறது)

**மேலிருந்து கீழ்**

1. மகாபாரதத்தில் வரும் கர்ணனுக்கு இது பொருந்தும்.
2. பல நாடுகளில் மறைந்துவிட்டது.
3. சந்தைக்கு இன்னொரு பெயர்.
5. வேசம் போடத் தேவையானதில் ஒன்று.
6. இந்துக் கோயில்களில் இது பிரசாதமாவது உண்டு.
8. பதுங்கி இருக்க வசதியான இடம்.
9. இதைப் பாவிக்காமல் இருந்தால் அப்படி இருப்பவருக்கும் நல்லது. கூட இருப்பவருக்கும் நல்லது.
10. உலகத்தை இப்படியும் சொல்வதுண்டு.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 18.12.93க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-28
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு-05.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-26க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 சா | ண | க் | 2 கி | ய | ன் | ■ |
| ட் | 3 பா | ■ | ழ | ■ | 4 து | 5 க |
| 6 சி | ட் | டு | க் | கு | ரு | வி |
| ■ | டா | ■ | கு | ■ | ம் | ஞ |
| 7 டை | ளி | ■ | ■ | 8 சு | வ | ர் |
| ட் | ■ | 9 நெ | ல் | லு | ■ | ■ |
| 10 ப | ற | வை | ■ | 11 கொ | க் | கு |

குறுக்கெழுத்துப் போட்டி இல.26இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. ஜெயா சொலமன் பூண்டுலோயா.
2. கே. ஜேம்ஸ்சன் புத்தளம்.
3. த. கோகுலானந்தி மட்டக்களப்பு.
4. வி. ரவிச்சந்திரன் இரத்தினபுரி.
5. திருமதி. ம. சலாஹுத்தீன் நீர்கொழும்பு.
6. வை. பௌசீன் வவுனியா.
7. இ. பிருந்தாவன் திருகோணமலை.
8. எம்.எஸ். மர்சுபானா அக்கரைப்பற்று-06.
9. எஸ். பகீரதி கொழும்பு-06.
10. ஏ. சுமதி மட்டக்களப்பு.

இந்த அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

---

ஹிட்லருக்கும் இன்றைய அரசியல்வாதிகளுக்கும் உள்ள வேறுபாடு என்ன?
செல்வி. கணேசமூர்த்தி தேவதர்ஷினி- அலவத்துகொட.

ஹிட்லர் பகிரங்கமாகவே தன்னை இனவாதியாக காட்டிக்கொண்டார். சில அரசியல்வாதிகள் பேச்சில் தேனையும், செயலில் விஷத்தையும் காட்டுகிறார்கள்.

•

சபாநாயகர் பிரபாகரனுடன் பேசுவது பற்றி உங்கள் கருத்து?
ஹிஸான் அன்பாக்-ஹேனமுல்லை.

பேசப் போவதாகச் சொன்னவர் பலர். பேசியவர் சிலர். பேசுவது வீசும் போர்க்காற்றை நிறுத்த உதவுமா என்பதை பார்த்துவிட்டுத்தான் கருத்துச் சொல்ல முடியும்.

•

சந்தேகத்துக்கு அப்பாற்பட்டது எது?
பர்மீலா பௌசி-உடத்தலவின்ன.

உண்மையான அன்பு.

•

மரணத்திற்கு பிறகு மனிதனின் நிலை என்ன?
இரா. சிவஞானம்-அக்கரப்பத்தன.

மரணத்திற்கு பின் மனிதன் என்ற பொருளும் அர்த்தமிழந்துவிடும். ஆவி போனால் கூடுதான் மிஞ்சும். அதுவும் பின் அழியும். நல்லது செய்தால் அந்தச் செயல்கள் நிலைக்கும்.

•

காதலில் அதிகமாக அவதிப்படுபவர்

**சந்தேகத்திற்கு அப்பாற்பட்டது எது?**

காதலனா அல்லது காதலியா?
எச். முகம்மட்-உடதலவின்ன.

இருவரும்தான்.

•

எதிர்பார்ப்புகள் ஏமாற்றமாகும் போது?
றஸீனா எஸ். ஹமீட்-மன்னார்.

மனம் பாரமாகும். எதற்கும் நியாயமான எதிர்பார்ப்புக்களை வளர்ப்பதே மனம் அடிக்கடி பாரமாகாமல் தடுக்க உதவும்.

•

நிமிசத்திற்கு நிமிசம் அறிமுகமாகும் புது நடிகைகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
ஜெயா செல்லத்தம்பி-கின்னியா.

ஒரு மாதத்திற்கு கூட திரையுலகில் பலர் நிலைப்பதில்லை. பின்னர் நினைக்க என்ன இருக்கிறது. மறந்துவிடுவேன்.

•

பொறுமைக்கும் எல்லை உண்டு. மீறினால் என்ன நடக்கும்?
து. விஜயராகவன்-பூண்டுலோயா வடக்கு.

சாது மிரண்டால் காடு கொள்ளாது.

•

எய்ட்ஸ் என்னும் பயங்கர நோய்க்கு ஒரு எளிதான மருந்து கண்டுபிடித்துவிட்டால்?
அக்குறனை-பைசால்.

நல்லது தான். என்றாலும் தவறான சிலரும் தலைகீழாய் நடக்கும் துணிச்சல் பெறக்கூடும்.

•

ஆங்கிலத் திரைப்படங்களுக்கும் புதிய தமிழ்த் திரைப்படங்களுக்கும் இடையே உள்ள வித்தியாசங்கள் என்ன?
பி. பிரகாஷ்-குருதெனிய.

இப்போதெல்லாம் பெரிய வித்தியாசம் தெரிவதில்லை. பிரபல இயக்குநர்கள் சிலரே ஆங்கிலப் படங்களைத்தான் தழுவுகிறார்கள். சிறு மாற்றங்களோடு தருகிறார்கள்.

•

கடந்த 26 மாவீரர் தினம் எப்படி?
ரமிகம-ஸ்ரீகாந்தன்.

புலிகள் செய்த பிரச்சாரத்தை விட பரவிய வதந்திகளால் பெரும் முக்கியத்துவம் பெற்றுவிட்ட தினம் அது.

•

இலங்கையின் அடுத்த ஜனாதிபதி யார்?
வீ. மதிவாணன்-கண்டி.

அநேகமாக டி.பி.விஜேதுங்கா.



மகாபாரதம் தொடர் எம்.ரீ.வி தொலைக்காட்சியில் பிரதி ஞாயிறு தோறும் மாலை 7 மணிக்கு ஒளிபரப்பாகிவருகிறது.

அத்தொடரின் தமிழாக்கம் போடப்படவில்லை என்பதால் தமிழ் பேசும் நேயர்களுக்கு நிறைய வருத்தம்.

அந்த வருத்தத்தை தீர்த்துவைக்க முரசு முயற்சி செய்தது. எம்.ரீ.வி நிறுவனத்தாரோடு பேசி, வாராவாரம் ஒளிபரப்பப்படும் தொடரின் காட்சிகளுக்கு உரிய தமிழ் வசனங்களை வெளியிடும் உரிமையை முரசு பெற்றிருக்கிறது.

இனிமேல் மகாபாரதம் பார்க்கும் உங்கள் கரங்களில் முரசு இருக்கட்டும். தொடரும் புரியும். நிறைவும் இருக்கும். உரிமை தந்த எம்.ரீ.வி நிறுவனத்தாருக்கு வாசகர் சார்பில் நன்றிகள்.

மொழிபெயர்த்துத் தருவது- இராஜகுமாரன்

-ஆசிரியர்-

# மகாபாரதம்

(இதுவரை நடைபெற்ற கதை)

உலகமகா காவியங்களுள் ஒன்று மகாபாரதம். இதில் உலகின் சகல உண்மைகளும் நீதி நியாயங்களும் இராஜதந்திரங்களும் பொதிந்துள்ளன. இதில் வரும் ஒவ்வொரு பாத்திரமும் உலக நியதிகளைப் பிரதிபலிப்பன.

பாரத நாட்டின் தோற்றுவாயுடன் மகா பாரதம் இணைந்திருக்கிறது.

சகுந்தலைக்கும் துஷ்யந்த மாமன்னனுக்கும் பிறந்த பரதன் இமயம் முதல் குமரிவரை ஒரு குடைக்கீழ் ஆண்டு வந்தான். அஸ்தினாபுரத்தை தனது தலைநகராகக் கொண்டு நீதி தவறாது ஆட்சிபுரிந்தான். அவனுடைய பெயரைக் கொண்டே இந்தியா பரத கண்டம்-பாரத நாடு என்ற பெயரினைப் பெற்றது.

துஷ்யந்தனின் வழி வழிவந்த சந்தனு மன்னன் கங்கையைக் காதலித்தான். தேவ மகளான கங்கையும் சந்தனுவை தன் கணவனாக ஏற்றுக்கொண்டாள். ஆனால் அவள் ஒரு நிபந்தனையையும் விதித்தாள். தன்னுடைய செயல்கள் பற்றி எந்தக் கேள்வியையும் கேட்கலாகாது என்றாள். அவ்வாறு தன் செயலில் குறுக்கிட்டால் உடனே சந்தனுவை விட்டு நீங்கிவிடுவதாகவும் கூறிவிட்டாள். மோகவலையில் வீழ்ந்த சந்தனு தடையின்றி வாக்களித்தான்.

கங்கை சந்தனுவுடன் வாழ்ந்த காலத்தில் பிறந்த ஏழு குழந்தைகளையும் கங்கை நதியில் ஆழ்த்திக் கொன்று விடுகிறாள். சந்தனு, தான் கொடுத்த வாக்கை மீற முடியாதவனாகப் பொறுத்திருந்தான். எட்டாவது குழந்தையையும் கங்கை நதியில் அமிழ்த்திக் கொல்ல முயன்றதை சந்தனு தடுத்தான்.

கொடுத்த வாக்கு மீறப்பட்டமையினால் கங்கை சந்தனுவை விட்டுப் பிரிகிறாள். எட்டாவது மகனைக் கொல்லாமல் தன்னுடன் எடுத்துச் சென்று சகல கலைகளையும் பயிற்றுவித்து உரிய காலத்தில் சந்தனுவிடம் ஒப்படைப்பதாகக் கூறிச் செல்கிறாள்.

16 வருடங்களின் பின்னர் கங்கை தன் மகனான தேவவிரதனை அழைத்து வந்து சந்தனுவிடம் ஒப்படைக்கிறாள். தன்னுடன் தொடர்ந்து வாழும்படி கோரியும் கங்கை இணங்கவில்லை.

சந்தனு வேட்டையாடச் சென்ற போது யமுனை நதிக்கரையில் படகோட்டிக்கொண்டிருந்த மச்சகந்தியைக் கண்டுவிடுகிறார். செம்படவ மன்னனின் மகளான அவள் மீது ஆசை கொண்டு அவளுடைய தந்தையிடம் தனது எண்ணத்தை வெளியிடுகிறார். மச்சகந்தியான சத்தியவதியின் தந்தை செம்படவ மன்னன் போட்ட நிபந்தனை தான் மகாபாரதத்தின் கருவூலமாக அமைகிறது.

சந்தனு மன்னனின் அரியணையில் சத்தியவதி ஏறுவதானால் அவளுக்குப் பிறக்கும் மைந்தர்களே அஸ்தினாபுரத்தை ஆளவேண்டும் என்பதுதான் அந்த நிபந்தனை. கங்கையின் மைந்தன் தேவவிரதனுக்கு ஏற்கனவே இளவரசுப் பட்டம் சூட்டிய சந்தனு நிபந்தனைக்கு மறுக்கிறார். சத்தியவதியை அடைய முடியவில்லையே என்ற ஏக்கத்தில் வாடுகிறார். தந்தையின் கவலைக்கான காரணத்தினை தேரோட்டி மூலம் அறிந்த தேவவிரதன் செம்படவ மன்னனிடம் சென்று, அஸ்தினாபுர சிம்மாசனத்தில் தான் ஏறப் போவதில்லை என்றும், தான் பிரமச்சாரியாகவே வாழப்போவதாகச் சொல்லித் தனக்கென ஒரு சந்ததியை உருவாக்கப் போவதில்லை எனவும் சபதமேற்கிறான்.

பீஷ்மர் என்ற பட்டத்தை தேவவிரதனுக்கு அளித்து தேவர்கள் பூமாரி சொரிகின்றனர்.

சந்தனு- சத்தியவதி இல்லறத்தின் பயனாக சித்ராங்கதன், விசித்திரவீரியன் என்ற இரு குமாரர்கள் பிறக்கின்றனர். இருப்பினும் பீஷ்மரான தேவவிரதனுக்குத் துரோகம் செய்துவிட்டோமே என்ற பெரும் கவலைக் கடலில் மூழ்கி மீளமுடியாமல் சந்தனு குழந்தைகளை பீஷ்மரிடமும் சத்தியவதியிடமும் ஒப்படைத்துவிட்டுக் கண் மூடுகிறார்.

காலம் உருண்டது. சித்ராங்கதன் ஆட்சி பீடமேறி-போர் ஒன்றில் மடிகிறான். அடுத்து விசித்திரவீரியன் பட்டத்துக்குரியவனாகிறான். இதே காலகட்டத்தில் காசி மன்னரின் புத்திரிகள் அம்பா, அம்பிகை, அம்பாலிகை மூவருக்கும் சுயம்வரம் நடக்கிறது. அஸ்தினாபுரத்துக்கு ஓலை அனுப்பாதமையினால் வெகுண்ட பீஷ்மர் காசிநாடு சென்று மூன்று இளவரசிகளையும் கவர்ந்து தனது தம்பியாகிய விசித்திரவீரியனுக்கு மணம் முடித்து வைக்க ஏற்பாடு செய்கிறார். மூத்தவளான அம்பா ஏற்கனவே சால்வ மன்னனை மனதால் வரித்தவள் என்பதனை அறிந்து அவளை சால்வ மன்னனிடம் அனுப்பி வைக்கிறார். அவனோ, பிறர் மனை புகுந்தவளை ஏற்க மறுத்து அஸ்தினாபுரத்துக்கே திருப்பி அனுப்பி விடுகிறான். நாடு திரும்பிய அம்பா தனக்கு அவமானம் நேர்ந்தது பீஷ்மரால் என்பதனைச் சுட்டிக்காட்டி பீஷ்மரே தன்னை மணக்க வேண்டும் என்கிறாள். அவர் தனது சத்திய வாக்கையும் சபதத்தையும் சுட்டிக்காட்டி மறுத்து விடுகிறார். அம்பா, பழிவாங்கப் போவதாகக் கூறி வெளியேறுகிறாள்.

விசித்திரவீரியன் தேவியர் இருவருடனும் அதிக நாள் வாழ முடியாமல் மடிகிறான். அரசுரிமைக்கு வாரிசில்லாமலே போய்விட்டமையினால் சத்தியவதியும் பீஷ்மரும் கலங்குகின்றனர். கௌரவ வம்ச விருத்திக்காக அம்பிகையையும் அம்பாலிகையையும் திருமணம் முடிக்கும்படி சத்தியவதி கோரியும் அதனையும் பீஷ்மர் மறுக்கவே, தனக்கும் பராசர முனிவருக்கும் எற்கனவே ஏற்பட்ட தொடர்பால் பிறந்த வியாசரை சத்தியவதி அழைத்து அம்பிகையையும் அம்பாலிகையையும் அவரிடம் ஒப்படைக்கிறாள்.

வியாசரின் தவக்கோலத்தைக் கண்டு பயந்த அம்பிகை கண்ணை மூடியமையினால் அவளுக்குப் பிறந்த பிள்ளை பார்வையற்றுப் பிறந்தது. அம்பாலிகை பயந்தாளெனினும் கண்களை மூடவில்லை. அவளுடைய முகம் வெளிறியது. அதனால் பிறந்த குழந்தை சோகையுடன், ஆரோக்கியமற்றுக் காணப்பட்டது. இரு அரசகுமாரிகளும் மீண்டும் வியாசரிடம் செல்ல மறுத்து ஒரு பணிப்பெண்ணை அனுப்பினர். அவளுக்குப் பிறந்த மகன் எக்குறையுமற்றுப் பிறக்கிறான். சிறந்த பராக்கிரமசாலியாகவும் புத்திசாதுரியமுள்ளவனாகவும் வளர்ந்தான். கண்பார்வையற்றவன் திருதராட்டினன்; அடுத்தவன் பாண்டு; பணிப்பெண்ணுக்குப் பிறந்தவன் விதுரன் என்று பெயர் பெற்றனர். மூவரையும் தன்னுடன் அழைத்துச் சென்ற பீஷ்மர் அவர்களுக்கு வேண்டிய சகல பயிற்சிகளையும் உரியகாலத்தில் கொடுத்து மீண்டும் அஸ்தினாபுரம் அழைத்து வருகிறார்.

கௌரவ குடும்பத்தின் மூத்தவாரிசு கண்பார்வையற்றவனாக இருப்பதனால் அனைவரது ஏகோபித்த முடிவின்படி பாண்டுவின் தலையில் அஸ்தினாபுரத்தின் மகுடம் ஏறுகிறது.

**இவ்வாரம் இடம் பெறுவது**
**12.12.93**

## அங்கம் 7

**சத்தியவதி:** பாண்டு மாமன்னர் வாழ்க!
(மந்திரம் ஒலிக்கிறது)

**மக்கள்:** பாண்டு மாமன்னர் வாழ்க வாழ்க!

**காலத்தின் குரல்:** அஸ்தினாபுரிக்கு அரசன் கிடைத்துவிட்டான். ஆனால் சத்தியவதி இனிமேல் வரப் போகும் வாரிசுகளைப் பற்றிய கனவில் மூழ்கிக் கிடக்கிறாள். தனது எண்ணங்களை பீஷ்மரிடம் சொல்கிறாள்.

**சத்தியவதி:** மகனே அஸ்தினாபுரத்தில் என்ன நடக்கிறது?

**பீஷ்மர்:** பாண்டு மன்னன் சக்கரவர்த்தியாக வேண்டும் என்று உலகம் எதிர்பார்க்கிறது.

**சத்தியவதி:** வெற்றி தோல்வியைவிட வேறு விஷயங்களும் உள்ளனவே!

**பீஷ்மர்:** புரியவில்லை தாயே!

**சத்தியவதி:** மன்னன் சக்கரவர்த்தியாவதுடன் முற்றுப் பெறுவதில்லை. மன்னனான மனிதன் தன் வம்சத்தை விருத்தி செய்ய வேண்டுமல்லவா?

**பீஷ்மர்:** தாயே! மூத்தவன் திருதிராட்டினனுக்கு முதலில் மணம் முடித்தாக வேண்டும். அவனுக்கு மனைவியாக வருபவள், உலகினைக் காணவே கண்கள் பயன்படும் என்ற உணர்வுள்ளவளாக இருத்தலாகாது.

**சத்தியவதி:** அத்தகைய- உனக்குத் தெரிந்த பெண் இருக்கிறாளா?

**பீஷ்மர்:** ஆம்தாயே! காந்தார நாட்டதிபன் மகள் காந்தாரி- சிவபக்தை- இருக்கிறாள்.

**சத்தியவதி:** கங்கை மகனே காந்தாரம் சென்றுவா. என் வாழ்த்துக்கள்.

**பீஷ்மர்:** தங்கள் சித்தப்படி....தாயே!

-காட்சி மாற்றம்-

(காந்தார மன்னனும் மகன் சகுனியும் சதுரங்கமாடுகின்றனர்)

**காந்தரன்:** சகுனி நீ தோல்வியடைகிறாய்.

**சகுனி:** அது எப்போதோ முடிந்த சம்பவம்.

**காந்தாரன்:** தோல்வி எப்படியிருக்கிறது?

**சகுனி:** தோற்பது சத்திரியனுக்கு ஏற்றதல்ல. ஆனால் தங்களிடம் தானே தோற்றேன்.

**காந்தாரன்:** இந்த விளையாட்டிலுமா?

**சகுனி:** வெறும் விளையாட்டல்லவே இது! போராடுவது போன்ற விளையாட்டு, வெற்றியும் தோல்வியும் இருக்குமிடமெல்லாம் போர்க்களம்தானே!

**காந்தாரன்:** இருக்கலாம். இது வெறும் விளையாட்டுத்தான் மகனே.

**சகுனி:** எவருமே தோற்பதற்காக விளையாட்டுகளில் ஈடுபடுவதில்லை தந்தையே! தோற்பதற்காக எவரும் யுத்தத்தில் ஈடுபடுவதுமில்லை.

**காவலாளி:** பாரதவம்ச பூபதி-சந்தனு புத்திரன், கங்கை மைந்தன்- தோல்வியே காணாத திண் தோளன் பீஷ்மர் வருகிறார் மகாராஜா!

**காந்தாரன்:** கங்கையின் மைந்தரே வருக வருக! மகனே! இவரை வணங்கினால் கங்கையில் ஸ்நானம் செய்தற்குச் சமம்! அவரை வணங்கு...!

**சகுனி:** வணக்கம்.

**பீஷ்மர்:** வாழ்த்துக்கள்!

**காந்தாரன்:** என் மகன் சகுனி..... உட்காருங்கள். இதனை அருந்துங்கள். மதுரமான மாதுளையின் சாறு இது.

**பீஷ்மர்:** மன்னா! இதைவிட இனிப்பானவையும் உள்ளன. என்னுடைய கோரிக்கையினை நீ அறிந்தால் மாதுளைச் சாற்றினை விட சுவையினை நீ அறிவாய், காந்தார மன்னா!

**காந்தாரன்:** கங்கை மைந்தரே! எனக்கு புரியாத புதிரல்லவா போடுகின்றீர்கள்!

**பீஷ்மர்:** எங்கள் நாட்டு ராஜகுமாரன் திருதிராட்டினனுக்கு உங்கள் மகள் காந்தாரியை பெண் கேட்க வந்திருக்கிறேன் மன்னா!

**சகுனி:** என் தங்கைக்கு அந்தக் குருடனை மணாளனாக்க ஏன் முன் வந்தீர்கள்? தாங்கள் ஏன் பாண்டுவுக்கு பெண் கேட்கவில்லை?

**காந்தாரன்:** சகுனி!

**சகுனி:** மன்னிக்க வேண்டும் தந்தையே!

**காந்தாரன்:** என் குமாரத்தியை கண்ணில்லாத திருதராட்டினனுக்கு மணம் முடிக்க விரும்புகிறீர்கள். சந்திர வம்சத்தில் என் மகளைக் கொடுக்க விரும்பினாலும் மனம் ஒப்பவில்லையே! அவளுடைய வாழ்க்கை முழுவதும் இருளிலேயே கழிய வேண்டுமா?

**காந்தாரி:** தந்தையே! அவ்வாறு கூறாதீர்கள். நமது வழக்கப்படி எனக்குக் கணவராக வரப்போகும் மன்னனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை எனக்குத்தானுண்டு. அந்த உரிமையினை நீங்கள் பறித்துவிடாதீர்கள்.

**காந்தாரன்:** காந்தாரி!

**காந்தாரி:** நான் உங்களனைவரையும் சிவபெருமானையும் சாட்சியாக வைத்து, திருதராட்டின இராஜ குமாரனுக்கே மாலை சூடத் தீர்மானித்துவிட்டேன்.

**சகுனி:** காந்தாரி...!

**காந்தாரன்:** மகளே..!

**காந்தாரி:** இன்னும் கேளுங்கள்! அரச குமாரரான திருதராட்டினரை எனது மணாளனாகத் தேர்ந்தெடுப்பது என்பாக்கியம். அவர் என் அழகுக்காக என்னை மனைவியாக்க முற்படவில்லையே!

(தனது கண்களை ஒரு துணியினால் கட்டிக் கொண்டு விடுகிறாள்)

**பீஷ்மர்:** எதற்காக இவ்வாறு செய்கிறாய்?

**காந்தாரி:** இது அவசியம்! என்னை வாழ்த்துங்கள், கங்கையின் மைந்தரே!

**பீஷ்மர்:** ஆனால்....மகளே காந்தாரி...!

**காந்தாரி:** கணவனுக்கு ஏற்ற மனைவியாக நான் வாழ விரும்புகிறேன். அவர் பார்த்து அனுபவிக்க முடியாத உலகத்தை நானும் பார்க்க வேண்டியதில்லை. உலகின் ஒளியை என் கணவர் காண முடியாத போது எனக்கு மட்டும் ஒளி தேவைதானா?

**பீஷ்மர்:** மங்களம் உண்டாகட்டும் மகளே! உன் சபதம் மிகவும் பயங்கரமானது. இதன் கொடுமை தெரிந்திருந்தும், நன்மக்களைப் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகிறேன்.

**காந்தாரன்:** மகளே உனது விருப்பம் அதுவானால் எனக்கும்அது மகிழ்ச்சியே! கடவுள் உன்னைக் காப்பாற்றுவார். கங்கை மைந்தரே! தாங்கள் நாடு திரும்பி திருமண ஏற்பாடுகளைச் செய்யுங்கள். அவள் அண்ணன் சகுனியுடன் காந்தாரியை அனுப்பி வைக்கிறேன்.

-காட்சி மாற்றம்-

**திருதராட்டினன்:** பார்வையிழந்த இந்த திருதராட்டினனை நாடி வந்தாய்- வருக காந்தாரி!

**காந்தாரி:** அரச குமாரரே! தாங்கள் எனக்கு கணவராகக் கிடைத்தது என் பாக்கியமே!

**திருதராட்டினன்:** என் கண்முன்னால் மலை இருக்கிறதோ பள்ளம் இருக்கிறதோ என்று கண்டறிய முடியாதவன் நான். நான் உனக்கு அருகதையற்றவன் என்பதற்காகவா கண்ணிருந்தும் பார்வையினை மறைத்துக் கொண்டாய்?

**காந்தாரி:** தங்களால் காண முடியாத இந்த வையத்தை நான் ஏன் பார்க்க வேண்டும்? தங்களைப் பார்ப்பதற்கு எனது அகக் கண்ணே போதும் பிரபு.

**திருதராட்டினன்:** நான் உனது கண்களின் உதவியுடன் இந்த உலகினைக் காணலாம் என்று எண்ணியிருந்தேன். நீயோ என் நம்பிக்கைக் கதவுகளை மூடிவிட்டாயே! நீ பார்க்க விரும்பாத இந்த உருவத்தை ஒருதரம் உன் கட்டுகளை நீக்கி விட்டுப்பார் தேவி!

**காந்தாரி:** தாங்கள் யார் என்பதை என் அகக்கண்கள் எனக்குப் பூரணமாகக் காட்டி விடுகிறது மன்னரே. இருட்டிலே தான் கனவுகள் முளைவிடுகின்றன. தாங்களும் மனக்கண்ணாலேயே சகலவற்றையும் காணப் பிறந்தவர்கள். நீங்கள் சுதந்திரமாகவே கனவுகாண உங்களுக்கு உரிமை உண்டு.

**திருதராட்டினன்:** எனக்கென்ன சுதந்திரம் இருக்கிறது காந்தாரி? நான் விதியின் பிடியில் அகப்பட்டவன். அஸ்தினாபுரத்தின் கிரீடத்தை தலையில் சூட வேண்டியவனை விதி வெகுதூரத்துக்கப்பால் இழுத்துச் சென்று விட்டது காந்தாரி! என் தம்பி பாண்டுவிடம் எனக்கு மிக்க அன்பு உண்டு. நான் அணிய வேண்டிய மகுடத்தை அவன் அணிந்திருப்பது விதியின் விளையாட்டுத்தான். ஆனால் அவனை தன் மணாளனாக்கிக் கொள்ள- அஸ்தினா புரத்தின் பட்ட மகிஷியாக- குந்தி போஜராஜனின் மகள் குந்தி ஆசைப்படுகிறாள். இதனைத்தான் என்னால் தாங்கிக்கொள்ள முடியாதிருக்கிறது காந்தாரி.

-காட்சி மாற்றம்-

**இடம்:** போஜமன்னன் அரண்மனை.

**குந்தி போஜன்:** ஸ்ரீமத் நாராயண மூர்த்தியின் அருளாலும் முனிபுங்கவர்களின் வாழ்த்தினாலும் பெருமை மிக்க எமது முன்னோர்களின் ஆசிர்வாதத்தாலும் இந்தச் சுயம்வர விழாவில் கலந்து கொள்ளவந்த உங்கள் அனைவரையும் வாழ்த்தி வரவேற்கிறேன். எமது பரம்பரை வழக்கத்தின்படி எனது வளர்ப்பு மகள் குந்தி எந்த மன்னனுடைய கழுத்தில் தன் மாலையினை அணிவிக்கிறாளோ அவரே அவள் கணவனாவார். எனது மகளின் சொந்தப் பெயர் பிரதா. பூஷமன்னனின் மகள். நாகவம்சத்தைச் சேர்ந்தவள். இவள் தந்தை சூர சேனன் எனது ஆத்ம நண்பர். தன் மகளை என்னிடம் ஒப்புவித்துவிட்டுச் சென்று விட்டார். இந்த நாட்டுக்கு பிரதா ஒருவரப்பிரசாதம். இனி அவள் தன் கணவ்னைத் தேர்ந்தெடுப்பாள்.

(ஒவ்வொரு அரசரையும் குந்திக்கு அறிமுகம் செய்து வைத்து சுயம்பரம் தொடர்கிறது)

பாண்டுவின் கழுத்தில் குந்திமாலை சூடுகிறாள்.

-காட்சி மாறுகிறது-

**காந்தாரி:** அரச குமாரரே! இன்று தன் மனைவி குந்தியுடன் உங்கள் தம்பி பாண்டு அஸ்தினாபுரி வருகிறார். தம்பி என்றால் மகனைப் போன்றவன் அல்லவா?

**திருதராட்டினன்:** மகனுக்கும் மகனைப் போல் என்பதற்கும் வித்தியாசம் நிரம்ப உண்டல்லவா காந்தாரி?

**காந்தாரி:** தாங்கள் ஏன் கலக்கமடையவேண்டும்?

**திருதராட்டினன்:** கண்ணில்லாத நான் நாடாளத் தகுதியற்றவன் என்று விதுரர் சொன்னார். அது நியாயம்தான். ஆனால் எனக்குக் கிட்டாத எனது சிம்மாசனம் என் வம்சத்துக்குக் கிடைக்க வேண்டுமல்லவா? இதோ குந்தி அரியாசனத்தில் ஏறுகிறாள். எனக்கு முன்னால் பாண்டு குழந்தை பெற்றால் அரசுரிமை என் வம்சாவளிக்குக் கிடைக்காமல் போய்விடுமே. விதியின் விளையாட்டின் வலிமை எவ்வாறு மாறுமோ....?

**காந்தாரி:** விதி எவ்வாறு அமைகிறதோ அதன் படியே எல்லாம் நடக்கும் மன்னவரே!

**திருதராட்டினன்:** என் தாயாரால் வந்த வினை இது. நான் உற்பத்தியாகும் போது என் தாய் கண்களை மூடாதிருந்தால் எனக்கு இந்த துரதிஷ்டம் நேர்ந்திருக்காதே!

**காந்தாரி:** மனிதனுக்கு எது அமைகிறதோ அதனையே அவன் ஏற்கக் கற்றுக் கொள்ள வேண்டும் அரசே!

**திருதராட்டினன்:** எதையும் விதிதான் நிர்ணயிக்கும். நான் முயற்சி செய்தேயாக வேண்டும். விதி எனக்குச் சாதகமாயிருந்தால் குந்தியின் வருகைக்கு முன்னரே பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்க வேண்டுமே!

-காட்சி மாற்றம்-

(குந்தி கண்ணீர் வடிக்கிறாள்.)

**(பின் நோக்கு)**

(துர்வாச முனிவர் போஜராஜன் சபைக்கு வருகிறார்.)

**துர்வாசர்:** என்னை இங்கு யாருக்கும் பிடிக்கவில்லைப்போல் தெரிகிறது! வரவேற்பு எதையும் காணோம்!

**போஜன்:** மாமுனிவரே அப்படிச் சொல்லாதீர்கள். தங்கள் பாதத்துளி பட்டு இந்தப்போஜனின் பூமி சிறக்கிறது. வாருங்கள் வாருங்கள்.

**குந்தி:** அடியேன் வணக்கம் மகா புருடரே!

**போஜன்:** இவள் குந்தி. என் மகள்.

**துர்வாசர்:** மங்களமுண்டாகட்டும்.

**குந்தி:** தங்கள் சேவையே எனக்குப் பெருமை தரும். இதைவிட வேறு பெருமை எமக்கு இல்லையே!

**துர்வாசர்:** மகளே! உலகினை ஈன்றவளும் பெண்தானே! பெண்களே உயர்வானவர்கள். நீ வேண்டும் வரம் என்ன? கேள் தருகிறேன்.

**குந்தி:** முற்றுமுணர்ந்தவர் தாங்கள். எதிர் காலத்தையும் அறிவீர்கள். எனது எதிர் காலத்தில் பயன்படக்கூடிய வரங்களைத் தாருங்கள் பிரபு.

**துர்வாசர்:** குந்தி உனக்கோர் மந்திரம் சொல்லித்தருகிறேன். அதன்படி நீ தேவ லோகத்திலிருந்து எவரை அழைத்தாலும் அவர்கள் உன்னிடம் வருவார்கள்.

**(பின்நோக்கு முடிவு)**

-காட்சி மாற்றம்-

**காலத்தின் குரல்:** துர்வாசரின் மந்திரத்தை குந்தி பரீட்சிக்கக் கருதி தனிமையில் கதிரவனை நினைத்து மந்திரத்தை உச்சாடனம் செய்கிறாள்.
கதிரவன் தோன்றுகிறான்.

**கதிரவன்:** பிரதா! ஏன் என்னை அழைத்தாய்?

**குந்தி:** கதிரோனே! என்னை மன்னிக்க வேண்டுகிறேன். துர்வாச முனிவரின் மந்திரத்தைப் பரீட்சிக்க எண்ணினேன். தாங்கள் உண்மையிலேயே வந்துவிட்டீர்கள். தாங்கள் திரும்பிச் சென்று விடுங்கள்.

**கதிரவன்:** மந்திரத்துக்கு மாபெரும் சக்தியுண்டு. அதன் பலனை அளிக்காமல் நான் நகர முடியாது. அந்தச் சக்தி வீணாகிவிட முடியாது. படைப்பின் சக்தி பயனற்றதாகி விடலாகாது.

**குந்தி:** எனக்குப் பயமாக இருக்கிறது. தாங்கள் தரவேண்டியதைத் தந்துவிட்டுச் சென்று விடுங்கள்.

**கதிரவன்:** நான் உனக்கு ஒரு குழந்தையைத் தருகிறேன். இதனால் உன்னுடைய கன்னித் தன்மை அழிந்துவிடாது. என்னுடைய மகன் கவசகுண்டலங்களுடன் பிறப்பான். "கொடைக்குக் கர்ணன்" என்று மூவுலகும் போற்ற வாழ்வான்.

-காட்சி மாற்றம்-

**காலத்தின் குரல்:** குந்தியின் மடியில் ஆண் குழந்தை. உலகத்துக்கு இவள் என்ன சொல்லப்போகிறாள்? கன்னி அழியாதவள் மடியில் கைக்குழந்தை இருந்தால் உலகம் இழிவாகப்பேசாதா? தன் மகன் என்று சொல்ல முடியாத குந்தி இனி என்ன செய்யப் போகிறாள்?

**குந்தி:** மகனே உன்னை- மகன் என்று சொல்ல முடியாத பாவி நான். என்னை மன்னித்துவிடு.
(ஒரு கூடையில் குழந்தையை வைத்து நீரோடையில் அதனை விடுகிறாள்.)



-காட்சி மாற்றம்-

**பாண்டு:** குந்திதேவி- உன் ஏக்கத்தை நான் புரிந்து கொண்டேன். மற்றுமொரு பயணத்துக்கு முகூர்த்தம் குறிப்பிட்டாகிவிட்டது.

**குந்தி:** பயணமா? எங்கே.... இன்று நமது..

**பாண்டு:** நமது வாழ்வின் முதல்இரவு தான். ஆனால் நான் என் முதல் மனைவியிடம் செல்ல வேண்டும்.

**குந்தி:** என்ன மற்றொரு மனைவியும் உண்டா?

**பாண்டு:** ஒவ்வொரு மன்னனுக்கும் மற்றுமொரு மனைவியும் இருக்கிறாள் என்பதனை நீ அறிவாய் அல்லவா? நான் வெற்றி கொண்ட மண், அதுதான் என் மறு மனைவி!

**குந்தி:** மனைவியும் நிலத்தை ஒத்தவள் தானே. மன்னரே!

**பாண்டு:** உண்மைதான். எனது முன்னோர்கள் அளித்த அருஞ்செல்வம் இந்தப் பூமி. இதன் எல்லைகளை விரிவுபடுத்த வேண்டியது என் கடமை. என் கண்ணுக் கெட்டிய தூரம் வரை இந்த நாட்டின் எல்லைகளை விரிவாக்க வேண்டும். உன் கண்களின் காந்த சக்திக்குள் சிக்குவதற்கு முன்னதாகவே நான் அதனைச் செய்து முடித்தாக வேண்டும். நீ வீர சத்திரியனின் மனைவியல்லவா? விடை கொடு.

**குந்தி:** வெற்றிவாகை சூடி வாருங்கள்.

**(வாரந்தோறும் வரும்)**

